

# கானல் வரி

முனைவர் ச.வே. சுப்பிரமணியன்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

# கானல் வரி

முனைவர் ச.வே. சுப்பிரமணியன்
மதிப்புறு இயக்குநர்
உலகத் தமிழ்க்கல்வி இயக்கம்
தமிழூர்

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

பல்கலைச் செம்மல் டாக்டர் தெ.பொ.மீ. அறக்கட்டளைச் சொற்பொழிவு-2 - 27-8-2002

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Kaanal Vari** |
| Author | : | Dr. S.V. Subramanian |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai-600 113<br>Ph: 2542992 |
| Publication No. | : | 429 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2002 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | iv + 116 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 30/- |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004<br>PH. 4984693, 4661807 |
| Subject | : | Literary Criticism |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பல்ல

**முனைவர் சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-*600 113*

# அணிந்துரை

*1996*-இல் பேராசிரியர் மது. ச. விமலானந்தம் அவர்களால் அமைக்கப்பட்ட பல்கலைச் செல்வர் டாக்டர் தெ.பொ.மீ அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடர்ந்து நடத்திவருகிறது.

இவ் அறக்கட்டளையின் இரண்டாம் சொற்பொழிவாக இச்சொற்பொழிவு அமைகிறது. இவ்விரண்டாம் சொற்பொழிவு 'கானல்வரி' என்ற தலைப்பில் நடைபெறுகிறது. உலகத் தமிழ்க் கல்வி இயக்கத்தின் மதிப்புறு இயக்குநரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநருமாகிய முனைவர் ச.வே.சுப்பிரமணியனார் அவர்கள் இவ் அறக்கட்டளைச் சொற்பொழிவை *27.8.2002* அன்று நிகழ்த்துகிறார்கள். அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெறும் அன்றே அச்சொற்பொழிவின் எழுத்துரு நூலாக வெளிவரவேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் இச்சொற்பொழிவு நாளன்றே இந்நூல் வெளிவருகின்றது.

பேராசிரியர் தெ.பொ.மீ நூற்றாண்டு விழா *(8.1.2000 - 8.1.2001)* நடந்து முடிந்துள்ள இவ்வேளையில் இதனைத் தொடர்ந்து தெ.பொ.மீ அவர்களின் பெயரால் அமைந்த இவ் அறக்கட்டளைச் சொற்பொழிவினை நிகழ்த்துவதை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பெருமையாகக் கருதுகிறது. பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் ஓர் அறிவுக்களஞ்சியம்; நாடுபோற்றும் இலக்கியத் திறனாய்வாளர்; நல்ல மொழியியல் அறிஞர். இத்தகு புலமை நலம் சான்ற பேராசிரியர் அவர்களின் 'கானல் வரி' என்ற நூலின் மறுவாசிப்பாகக் குறிப்பிடத்தக்க திறனாய்வு அடிப்படையில் முனைவர் ச.வே.சுப்பிரமணியனார் அவர்களால் இச்சொற்பொழிவு நிகழ்த்தப்பெறுவது பாராட்டுக்குரியது.

சிலப்பதிகாரத்தில் உள்ள *30* காதைகளில் ஒன்றாகக் 'கானல் வரி' அமைந்துள்ளது. இந்திரவிழாக் காலத்தில் கோவலனும் மாதவியும் புகார்க் கடற்கரைச் சோலையில் பாடிய நெய்தல்திணைப் பாடல்களின் தொகுப்பாக இப்பகுதி சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ளது. இக்கானல் வரி சிலப்பதிகாரக் காப்பிய நிகழ்ச்சிகளுக்கு ஒரு சிறந்த திருப்பு மையமாக அமைந்துள்ளது. இக் கானல்வரியைத் திறனாய்வு

நோக்கில் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் அவர்கள் ஆய்வு செய்து வழங்கிய 'கானல்வரி' என்னும் நூல் தமிழ் இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. இந்நூலின் மீள் திறனாய்வாக இச்சொற்பொழிவின் பொருண்மை அமைந்துள்ளது. கானல்வரியின் குறிப்பிடத்தக்க சிறப்புக்கூறுகளை இச்சொற்பொழிவு எடுத்துக்காட்டியிருப்பது அறிஞர்கள் உலகில் பெரும் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வளர்ச்சி வரலாற்றில், குறிப்பிடத்தக்க இன்றியமையாத இடத்தைப் பெறும் பேராசிரியர் முனைவர் ச.வே. சுப்பிரமணியனார் அவர்கள் இச் சொற்பொழிவினை நிகழ்த்துவது உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நிகழ்வுகளில் பெருமைக்குரிய ஒன்றாகும். பேராசிரியர் அவர்கள் நல்லுள்ளத்தோடு இசைவு தந்து இச்சொற்பொழிவினை நிகழ்த்துவதற்கு, நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ் அறக்கட்டளை நிறுவனர் பேரா. மது. ச. விமலானந்தம் அவர்களுக்கும், அறக்கட்டளைப் பொறுப்பாளர் மொழியியல் துறைப் பேராசிரியர் முனைவர் செ. ஜீன் லாறன்ஸ் அவர்களுக்கும் நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு **கல்வியமைச்சர் முனைவர் மு.தம்பிதுரை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **கூடுதல் இணைச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் நன்றி.

இந்நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை
*26.08.2002*

**இயக்குநர்**

# நன்றியுரை

பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், பெயரில் அமைந்த அறக்கட்டளைச் சொற்பொழிவைச் செய்வதற்கு என்னை அழைத்த உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர். முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன நிர்வாகத்தினருக்கும் மிக்க நன்றியுடையேன்.

பேராசிரியர் அவர்களை நேர்முகமாக நன்கு அறிந்தவன். அவர் என்னுடைய சிலப்பதிகாரச் சொல்லடைவுடன் கூடிய இலக்கணமாகிய பிஎச்டி ஆய்வேடு வெளிவந்தபோது (1965) என் உழைப்பைப் பாராட்டினார். அவர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்தபோது என்னுடைய இலக்கணத்தொகை எழுத்து நூலுக்கு 1967-இல் ஆசிஉரைதந்து பாராட்டினார்.

அவருடைய கானல்வரி முதற்பதிப்பு 1961-இல் அவருடைய மணிவிழாவின்போது பூ.சா.கோ.கல்விக்குழுத்தலைவர் ஜி.ஆர். தாமோதரன் அவர்களால் வெளியிடப்பெற்றது. இரண்டாம் பதிப்பை 1978 -இல் மதுரை சர்வோதய இலக்கியப்பண்ணை வெளியிட்டது.

பேராசிரியர் தெ.பொ.மீ அவர்களை மின்வெட்டுப் பேராசிரியர் என நாங்கள் அழைப்பதுண்டு. இடியுடன் கூடிய நல்ல மழை. கும்மிருட்டு அப்போது உலகில் ஒருபொருளும் தெரியாது. அவ்விருட்டில் திடீரென மின்னல் அடித்தால் உலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும் அம்மின்னல் வெளிச்சத்தில் காணமுடியும். அதுபோன்று அவர் ஆய்வுலகில் நிறைய ஒளிகளைத் தந்தவர். அதில் ஒன்று கானல்வரி என்ற நூல்.

அவர் கற்பனையில் மிதப்பார். கனவில் சஞ்சரிப்பார். சிலவேளைகளில் பூமியில் இருப்பதையே மறந்துவிடுவார். இலக்கியத்தோடு இரண்டறக்கலந்துவிடுவார். அத்தகைய ஆற்றலுடைய பேராசிரியர். கானல்வரிக்குப்பல புதியவிளக்கங்கள் அவர் தந்துள்ளார். அவர் எண்ணங்களோடு புதிய எண்ணங்களையும் சேர்த்து மறுவாசிப்புப் போன்று இக்கானல்வரி நூல் அமைகிறது.

அவர் கூறாத செய்திகளாகக் கானல்வரி யாப்பு, கானல்வரி இசை, கானல்வரியில் பாடவேறுபாடுகள், சில புதிய திறன்ஆய்வுகள் தரப்பெற்றுள்ளன.

வாழ்க்கையில் முன்னோடியாக அமைந்த பேராசிரியர் அவர்கள் இந்நூலுக்கும் முன்னோடியாக அமைகிறார். அதனால் அவர்பெயரில் அமைந்த அறக்கட்டளைச் சொற்பொழிவினை நிகழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கானல்வரி பற்றி கருத்துரைகள் நல்கிய என் மாணாக்கர் அன்னிதாமசுக்கும், சிவகாமிக்கும் என் நன்றியும் வாழ்த்துக்களும்,

# உள்ளே

முன்னுரை - சிலப்பதிகாரம், புகார்க் காண்டம்,
கானல்வரி பெறும் இடம். — 1

யாழின் அமைப்பு — 29

ஆற்றுவரிப் பாடல்கள் - கோவலன்,
மாதவி பாடியவை — 39

சாத்துவரிப் பாடல்கள்- கோவலன்,
மாதவி பாடியவை — 51

முகமில் வரி - கானல்வரி -கோவலன் பாடியவை
திணைநிலைவரி- மாதவி பாடியவை — 62

நிலைவரி - கோவலன் பாடியவை -மயங்குதிணை
நிலை வரி - மாதவி பாடியவை — 71

முரிவரி - கோவலன் மாதவிபாடியவை — 75

சாயல்வரி - கோவலன் -மாதவிபாடியவை — 79

முகமில்வரி - கோவலன், -மாதவிபாடியது — 84

கானல்வரி - மூலம், யாப்பு,இசைக்குறிப்புக்களுடன் — 93

கானல்வரியில் பாட வேறுபாடுகள் —105

பயன்கொண்ட நூல்கள் —112

# குறுக்கவிளக்கம்

(அ) - அங்கயற்கண்ணி

(அ-ள்) அருஞ்சொற்பொருள்

(சி-பு) சிறப்புக் குறிப்பு

(தெ-ரை) தெளிவுரை

(பா-று) பாடவேறுபாடு

(வி-ரை) - விளக்க உரை

# முன்னுரை

## சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய இன்று கிடைக்கின்ற காப்பியங்களில் முதல் காப்பியம்; முதன்மையான காப்பியம்; முத்தமிழ்க் காப்பியம். சிலம்பிற்குப் பிறகு சிலம்பு போன்று முத்தமிழ்க் காப்பியம் தமிழில் தோன்றவில்லை.

தமிழில் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே காப்பியங்கள் இருந்து உள்ளன என்பதைத் தொல்காப்பியத்தின் தோல், தொன்மை போன்ற செய்யுளியல் நூற்பாக்கள் குறிக்கின்றன.

*தொன்மை தானே (சொல்லுங்காலை)*
*உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே (தொல் 1493)*

இதற்கு உரை எழுதுகின்ற நச்சினார்க்கினியர் சிலப்பதிகாரத்தையும் சான்றாகக் காட்டுவார்.

இளம்பூரணர் இராமசரிதமும் பாண்டவசரிதமும் முதலியவற்றின் மேல்வருஞ்செய்யுள் என்று எழுதுவார்.

பேராசிரியர் பெருந்தேவனாரால் பாடப்பட்ட பாரதமும் தகடூர்யாத்திரையும் போல்வன என்று எழுதுவார்.

நச்சினார்க்கினியர், அவை பெருந்தேவனார் செய்த பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன. சிலப்பதிகாரமும் அதன்பால் படும் என்று எழுதுவார்.

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தைத் தோல் என்ற இலக்கணத்துள் அடக்குவார்.

இழுமென்மொழியான் விழுமியது நுவலினும
பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும்
தோல் என மொழிப தொன்மொழிப் புலவர் (தொல். 1496)

"இவ் இயல் இசை நாடக பொருள் தொடர் நிலைச்

செய்யுளை அடிகள் செய்கின்ற காலத்து இயற்றமிழ்நூல் தொல்காப்பியம் ஆதலானும் பிறர்கூறிய நூல்கள் நிரம்பா இலக்கணத்தன ஆவதானும் அந்நூலின் முடிபே இதற்கு முடிபென்றுணர்க. அந்நூலில் செய்யுளியலின் கண்ணே ஆசிரியர் பாவும் இனமும் என நான்கின் நீக்கிய பாவினைத் தொகைவரையறையான் இரண்டென அடக்கியும் விரிவரையறையான் ஆறென விரித்தும், அவற்றை அறம்பொருள் இன்பத்தாற் கூறுக. என்றும் கூறிப் பின்பு அம்மை முதலிய எட்டுவனப்பும், தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கணம் என்று கூறியவர்,

"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும் பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும்"

என்பதனால் குவிந்து மெல்லென்ற சொல்லானும் பரந்து வல்லென்ற சொல்லானும் அறம்பொருள் இன்பம் பயப்ப வீடென்னும் விழுமிய பொருள் பயப்ப ஒருகதைமேற் கொச்சகத்தானும் ஆசிரியத்தானும் வெண்பா வெண்கலிப்பாவானும் மற்றும் இன்னோரன்ன செய்யுட்களானும் கூறுக என்றமையான். இத்தொடர் நிலைச்செய்யுள் அங்ஙனங் கூறிய தொடர்நிலை என உணர்க" என்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தைத் தோல் என்ற காப்பிய இலக்கணத்துள் அடக்குவார். நச்சினார்க்கினியர் தொன்மை என்ற இலக்கணத்துள் அடக்குகின்றார். தொன்மை என்பது **primitive epic** என்றும் தோல் என்பது **cultured epic** என்றும் மேல்நாட்டினர் கூறும் இலக்கணத்துள் அடங்கும். அதனால் சிலப்பதிகாரத்தைக் காப்பியத்தின் இருநிலைகளிலும் அடக்கலாம்.

சிலப்பதிகாரம் கலைச்சுரங்கம். கவிதை ஊற்று. நாட்டார்பாடல்களின் நடுவிடம். பக்திப்பாடல்களின் தோற்றுவாய். இசைக்கலையின் எழிலிடம். கூத்துக்கலையின் குடியிருப்பு. உள்ளுறைகளின் உறைவிடம். இறைச்சிகளின் இருப்பிடம். குறியீடுகளின் கோயில். தொடர் உவமைகளின் தொகுப்பிடம். இதிகாசங்களின் இயவிடம். சொற்சுவைகள்

வாழிடம். பொருள் சுவைகளின் புகலிடம். பனித்துளியில் மலையைக் காட்டும் மாண்பிடம். காவிய ஓவியம். மெய்ப்பொருளை உணர்த்தும் மேலிடம். தத்துவங்களை உணர்த்தும் தகவிடம். சிற்றிலக்கியங்களைத் தோற்றுவிக்கும் சிறப்பிடம்.

இளங்கோவடிகள் கலைஞர். கவிஞர். முத்தமிழ் வித்தகர். யாப்பில் புதுமைகளைத் தோற்றுவித்தவர். சமயங்களை இணைத்தவர். சக்தி வழிபாட்டைத் தோற்றுவித்தவர். பத்தினியின் பெருமையை உணர்த்தியவர். கற்பனையே ஆனாலும் ஐம்பெருமன்றங்களை உருவாக்கிச் சமுதாயத்தைச் சீராக்க நினைத்தவர். விருத்தப்பாக்களுக்கு வித்திட்டவர்.

சிலம்பு கோவலன் கண்ணகி கதையைக் கூறுவது. கண்ணகி புகார் நகரில் மாநாய்கன் மகளாகத் தோன்றினாள். அவளுக்கும் மாசாத்துவான் மகன் கோவலனுக்கும் திருமணம் நடந்தது. இருவரும் எட்டு ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்தனர். கோவலன் மாதவியின் அரங்கேற்றத்திற்குச் சென்றபோது சூழ்நிலை காரணமாக மாதவியை மணம் செய்துகொள்கிறான். மணம் செய்துகொண்ட அடுத்த ஆண்டு மணிமேகலை பிறக்கிறாள். கோவலன் மாதவியோடு பன்னிரண்டு ஆண்டுகள் ஒன்றாக வாழ்கிறான். ஊழ்வினை காரணமாக மாதவியை விட்டுப்பிரிந்து கண்ணகியை அடைகிறான்.

பொருள் ஈட்டுவதற்காகக் கோவலன் கண்ணகியையும் உடன் கூட்டிக்கொண்டு மதுரை செல்கிறான். மதுரையில் கண்ணகியின் ஒரு கால் சிலம்பு விற்பதற்காகப் பொற்கொல்லனை நாடுகிறான். பொற்கொல்லன் சூழ்ச்சியால் கோவலன் பாண்டிய அரசனால் கள்வன் என்று கருதிக் கொலை செய்விக்கப்படுகிறான். இதை அறிந்த கண்ணகி பாண்டியனின் முன் வழக்குரைத்துக் கோவலன் கள்வன் அல்லன் என்பதை நிரூபிக்கிறாள். தன் தவறை உணர்ந்த பாண்டியன் உயிர் துறக்கிறான். பாண்டிமாதேவி கணவனுடன் மேல் உலகம் செல்கிறாள்.

கண்ணகி மதுரையை எரித்து அதன் பின்பு வையையாற்றின்

தெற்குக் கரைவழியாக மேற்கே சென்று நெடுவேள் குன்றம் அடைகிறாள். அங்கு வேங்கைமரத்தடியில் நின்று கொண்டு இருக்கிறாள். வானவர் மலர்மாரி பொழிந்து கோவலனையும் அழைத்துவந்து அவனைக் காட்டிக் கண்ணகியையும் வான் உலகிற்கு அழைத்துச் செல்கின்றனர். இக்காட்சியைக் குன்றக்குறவர் கண்டு மகிழ்ந்து கண்ணகியைத் தங்கள் தெய்வமாக ஆக்கிக் குரவைக் கூத்து ஆடுகின்றனர். இச்செய்தியைக் குணவாயில் கோட்டத்து அரசு துறந்திருந்த இளங்கோவடிகளிடம் சென்று உரைத்தனர்.

குணவாயிற் கோட்டத் து அரசு துறந்திருந்த
குடக்கோச் சேரல் இளங்கோ வடிகட்குக்
குன்றக் குறவர் ஒருங்குடன் கூடிப்
பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்
ஒருமுலை இழந்தாளோர் திருமா பத்தினிக்கு
அமரர்க் கரசன் தமர்வந்து ஈண்டி அவள்
காதற் கொழுநனைக் காட்டி அவளொடு எம்
கட்புலங் காண விட்புலம் போயது
இறும்பூது போலும் அஃது அறிந்தருள் நீயென
(ப 1–9 )

அவர் சொற்கோயில் கட்டினார். அது சிலப்பதிகாரம். சிலப்பதிகாரம் உலகம் இருக்கும் வரை வாழும். உலகம் இருக்கும் வரை தமிழ் மொழி இருக்கும். இதே குன்றக்குறவர் சேரன் செங்குட்டுவனிடம் சென்று கண்ணகி கதையைக் கூறினர்.

ஏழ்பிறப் படியேம் வாழ்கநின் கொற்றம்
கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை இழந்து தனித்துயர் எய்தி
வானவர் போற்ற மன்னொடுங்கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்
எந்நாட்டாள்கொல் யார்மகள்கொல்லோ
நின்னாட்டு யாங்கண் நினைப்பினும் அறியேம்
பன் **னூ** றாயிரத்து ஆண்டு வாழியர் என (25–;56–63)

அவன் கற்கோயில் கட்டினான். அது இப்போது கேரளப் பகுதியில் இருக்கிறது.

சிலம்பு என்ற சொல்லுக்கு மலை, ஒலித்தல், ஓசை, மகளிர்

காலணி இவ்வாறு பல பொருள்கள் உண்டு. இங்குச் சிலப்பதிகாரத்தைக் குறிக்கிறது.

இளங்கோவடிகள் தமிழின் முதல் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திற்குச் சிலம்பு என்ற காலணியைத் தலைப்பாகக் கொண்டார். அதனால்தான் பிற்காலக் காப்பியங்கள் மகளிர் அணிகளால் பெயர்பெற்றன. காலில்இருந்து மேலேவரும்போது இடையில் அணிவது மேகலையாக இருப்பதால் மணிமேகலைக் காப்பியமும் அடுத்து, கையில் வளையல்களை அணிவதால் வளையாபதியும், அதற்குமேல் காதில் குண்டலங்களை அணிவதால் குண்டலகேசியும், தலையில் ஒளிபொருந்திய மணியுடைய ஆபரணத்தை அணிவதால் சிந்தாமணியும் தோன்றின என்று சொல்லலாம்.

சிலம்பு, காப்பிய முடிச்சை அவிழ்ப்பதற்குத் துணையாக அமைகிறது. "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்" என்பது சிலப்பதிகார நோக்கங்களில் ஒன்றாகப் பதிகம் கூறுகிறது. இங்கு அரசியல் பிழைத்தற்கு, பாண்டியன் தவறு செய்வதற்கு, காரணமாக அமைவது சிலம்பு. பாண்டிமாதேவியின் சிலம்பு முத்துப்பரல்களையுடையது. ஏன் எனில் பாண்டிய நாட்டில் முத்து அதிகமாகக் கிடைக்கும். கண்ணகியின் சிலம்பு மாணிக்கப் பரல்களையுடையது. நவமணிகளையுடையது என்றும் சொல்லலாம். வழக்குரை காதை சிலம்பில் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதை நிரூபிக்கிறது. இதற்கு அடிப்படையாக அமைவது பாண்டிமாதேவி கண்ணகி ஆகியோரின் சிலம்புகள் தாம். அதிலும் முக்கியமாக அமைவது சிலம்பில் உள்ள பரல்கள்தாம். புறத்தோற்றத்தில் இரண்டு சிலம்புகளும் ஒன்றாக இருந்ததால்தான் பொற்கொல்லன் பாண்டியனை ஏமாற்ற முடிந்தது. சிலம்பின் உள்ளே அகத்தில் வேறுபட்ட பொருள்கள் உள்ளன. புறம் பொன்னால் செய்யப் பெற்றதுதான். உள்ளேதான் முத்தும், மாணிக்கங்களும், வேறுபட்டு அமைக்கப்பெற்றன.

கண்ணகி கணவனைப் பிரிந்திருந்தபோது சிலம்பை அணியவில்லை எனச் சொல்கிறார். இளங்கோவடிகள் 'அம்செஞ்சீறடி அணிசிலம்பு ஒழிய' (4-47). ஆனால் கோவலன் தன்பொருள்களை எல்லாம் இழந்து மறுபடியும் கண்ணகியை வந்து சேரும்போது, அவள் "சிலம்பு உள கொண்ம்" என்று (9-73) கூறுகிறாள். அவன் "சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன்" (9-75) என்று சிலம்பையே தன் வணிகத்திற்கு முதலாகக் (**Capital**) கருதினான். ஆனால் அவன் உயிரைக்குடிப்பதற்கு, உயிரை இழப்பதற்குக் காரணமாக இருந்தது சிலம்பு தான். இது புறநிலை. அவன் செய்த வினைகள் அவன் உயிர் இழக்கக் காரணமாக இருந்தன. அது அகநிலை. "சீர் அடிச்சிலம்பின் ஒன்று கொண்டு" (16-92) சென்று விற்பதற்கு முயல்கிறான். அது "போற்றரும் சிலம்பாகவும்" (16-116), "சித்திரச் சிலம்பாகவும்" (16-119) அமைந்தது. ஆனால் பாண்டியன் "கோயில் சிலம்பு கொண்ட கள்வனாகிய" (16-145) பொற்கொல்லன் "கோப்பெருந்தேவிக்கு அல்லதை இச்சிலம்பு" (16-121). பிறருக்குப் பொருந்தாது, மற்றவர்களுக்கு அதனை வாங்கும் திறன் இல்லை என ஏமாற்றுகிறான். பாண்டியன் கொல்லச் சிலம்பு கொணர்க என்பதற்குப் பதில் வினை விளைவு காரணமாகக் கொன்றச் சிலம்பு கொணர்க" என்று சொல்கிறான். (16-153).

பொற்கொல்லன் "செய்வினைச் சிலம்பின் செய்தியை எல்லாம் (16-160) கூறுகிறான். கோவலன் முற்பிறவியின் தீவினை காரணமாக உயிர் இழக்கிறான். கண்ணகி கதறுகிறாள். 'தன் கையில் உள்ள நின்ற சிலம்பைக் கையேந்தி' (19-2), அரசனைக் காணச் செல்கிறாள். மதுரை நகர மக்கள் 'செம்பொன் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால் வம்பப் பெருந்தெய்வம் வந்தது இதுவென்கொல்'' (19-23) என்று பேசுகின்றனர். பாண்டியனின் அரண்மனைக் காவலன் இணை அரிச்சிலம்பு ஒன்று ஏந்திய கையள்' (20-27) அரண்மனை வாயிலில் நிற்கின்றாள் என்று கூறுகின்றான். கண்ணகி பாண்டியனிடம் "என்கால் சிலம்பு" (20-67) விற்றல் வேண்டி நின்பால் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி' கண்ணகி

என்பது என் பெயரே என்று சொல்கிறாள்.

பாண்டியன் "யாம்உடைச் சிலம்பு முத்துடை அரியே" (20-69) என்கிறான். கண்ணகி அணிமணிக் கால் சிலம்பை உடைக்கிறாள் (20-71).

"காவி உகுநீரும் கையில் தனிச்சிலம்பும்"(20 வெ. 1)

எனவும்

"மெய்யில் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்–வையைக்கோன்
கண்டளவே தோற்றான் அக்காரிகைதன்
சொல்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர் (20 வெ. 3)

என்ற வெண்பா பாடுவதற்கும் அச்சிலம்பு காரணமாக அமைந்தது.

"தீவினைச் சிலம்பு" (25-69) எனச் சிலம்பிற்கும் வினையை ஏற்றுகின்றநிலையை இங்குப் பார்க்கிறோம் அதேவேளையில் "சிலம்பின் வென்றனள் சேயிழை" (27-73) என்றும் சிலம்பின் வென்ற சேயிழை நங்கை (22-135) தேராமன்னனைச் சிலம்பின் வென்று (22-145), என்றும் சிலம்பினைப் பற்றிய குறிப்புக்கள் சிலம்பில் உள்ளன.

கண்ணகி சேரன் செங்குட்டுவனுக்குக் காட்சி தருகின்றாள். அக்காட்சியிலும் சிலம்பு இடம்பெறுகிறது.

"என்னேஇஃது என்னே! இஃது என்னேஇஃது
என்னே! கொல்
பொன்னஞ் சிலம்பில் புனைமேகலை வளைக்கை
நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக் கொடி ஒன்று மீவிசும்பின் தோன்றுமால்"
(29–9)

வஞ்சிநாட்டு மகளிர்,

"செஞ்சிலம்பால் வென்றாளைப் பாடுதும்
வம்மெல்லாம்" (29–11–4)

என்று பாடுகின்றனர்.

**அதிகாரம்** - என்ற சொல்லுக்கு ஆட்சி முறைமை, உரிமை, இடம், தகுதி, நூலின் உட்பிரிவு, எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பொருள் அதிகாரம் போன்று, நூல், சந்தர்ப்பம், போன்று பல பொருள்கள் உண்டு. இங்குச் சிலம்பை அடிப்படையாகக் கொண்டு முறைமையாகத் தகுதியுடன் உரிமையுடன் ஆட்சி செய்த நிலையைக் குறிக்கின்றது. என்று கொள்ளலாம்.

## காண்டம்

காண்டம் என்ற சொல் நூலின் பெரும் பிரிவு, மலை, எல்லை, காடு, நீர், அம்பு, கோல், குதிரை, அடிமரம், ஆயுதம், முடிவு, சமயம், திரள், அணிகலச் செப்பு, கமண்டலம், நிலவேம்பு, திரைச்சீலை, ஆடை, சீந்தில், புத்தி என்று பல பொருள்களை உடையது. இங்கு நூலின் பெரும் பிரிவைக் குறிக்கிறது.

சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களால் ஆயது. ஒவ்வொரு காண்டமும் அந்தந்த நாட்டின் தலைநகரின் பெயரைக் கொண்டு உள்ளது. முதல் காண்டம் புகார்க்காண்டம். புகார் சோழர்களின் தலைநகரம். இரண்டாவது மதுரைக் காண்டம். மதுரை பாண்டியர்களின் தலைநகரம். மூன்றாவது வஞ்சிக்காண்டம் வஞ்சி சேரர்களின் தலைநகரம். இன்றும் கேரள மாநிலத் தலைநகராகிய திருவனந்தபுரத்தில் வஞ்சியூர் என்ற ஓர் ஊர் உள்ளது.

### சிலப்பதிகார நிகழ்ச்சிகளின் காலம்

**புகார்க் காண்டம்**

புகார்க்காண்ட நிகழ்ச்சிகள் இருபது ஆண்டுகளில் நிகழ்ந்தவை. கோவலன் கண்ணகியைத் தன் பதினாறாவது வயதில் திருமணம் செய்தான். எட்டு ஆண்டுகள் அவளோடு வாழ்ந்தான். மனையறம்படுத்த காதையில் இளங்கோவடிகள்.

> யாண்டுசில கழிந்தன இல்பெருங்கிழமையிற்
> காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென். (2:89–90)

என்று கூறுகிறார். இங்கு யாண்டு சில என்பதற்கு விளக்கம் எழுதுகின்ற அடியார்க்கு நல்லார் "கண்ணகிக்குச் சில யாண்டு கழிந்தன எனவே மாதவிக்குப் பல யாண்டு கழிதலும்

கொள்ளப்பட்டது. இன்னும் மேல் கனாத்திறம் உரைத்த காதையில், தேவந்தி, கண்ணகி நல்லாளுக்கு உற்றகுறைஉண்டு என்று (41) என்புழி எச்சவும்மை விரிக்க, இவட்கு அவள் இளமைப்பருவந்தொடங்கி நிகழும் பார்ப்பனத்தோழியாய் மாநாய்கன் மனைவளர்தலின், ஒருகாலத்தே குடிபுக்குச் செல்கின்றுழிப் பிரிவும் ஒருகாலத்தாயிற்று என்பதாகலின்;" "நாலீராண்டு நடந்ததன் பின்னர்." (30:85) என்பதனை இருவர்க்குமாக்கி மாதவிக்கு எட்டினிறந்த பல ஆண்டு சேறலில் கண்ணகிக்குச் சிலயாண்டு கழிந்தளனப் பொருள்கூறலும் ஒன்று. இதனால் மிக்க பலமின்று; ஏற்குமேற் கொள்க. இது போலி, என்று எழுதுகிறார். அதனால் கோவலன் கண்ணகியோடு வாழ்ந்த ஆண்டுகள் எட்டு என்று கூறுவது பொருந்தலாம்.

மாதவியைத் தன் இருபத்து நான்காவது வயதில் திருமணம் செய்தான். திருமணம் ஆன அடுத்த ஆண்டு மாதவிக்குப் பெண்குழந்தைபிறந்தது. அதற்கு மணிமேகலை என்று பெயர் சூட்டினான். கோவலன் இறக்கும் போது மணிமேகலைக்குப் பதினொரு வயது. அதனால் மாதவியோடு பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தான். இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் புகார் நகரில் நிகழ்ந்தன. இருபது ஆண்டுநிகழ்ச்சிகள் புகார்க் காண்டம்

**மதுரைக்காண்டம்**

மதுரைக்காண்ட நிகழ்ச்சிகள் ஏறத்தாழ இரண்டரை மாத நிகழ்ச்சிகள். கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகியை அடைந்து மதுரை புறப்படுவது வைகாசி மாதம் பௌர்ணமி நாளுக்கு அடுத்தநாள். புகார் நகரில் சித்திரை மாதம் சித்திரை நாளில் இந்திரவிழாத் தொடங்கி ஒரு மாதம் நடைபெறும். இளங்கோ இதனை,

சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென (5: 64)

எனக் காட்டுவார்.

இந்திரவிழா முடிந்த நாளில் அதாவது வைகாசி பௌர்ணமிக்கு அடுத்தநாள் மதுரை புறப்படுகிறான்.

*வான்கண் விழியா வைகறை யாமத்து*
*மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்*
*கார் இருள் நின்ற கடைநாட் கங்குல்          (10:1—3)*

இதற்கு விளக்கம் எழுதுகின்ற அடியார்க்கு நல்லார். "என்பது அந்தச் சித்திரைத் திங்கள் புகுதிநாள் - சோதி, திதி - மூன்றாம் பக்கம், வாரம் - ஞாயிறு, இத்திங்கள் இருபத்தெட்டில் சித்திரையும், பூரணையுங்கூடிய சனி வாரத்தில் கொடியேற்றி நாலேழ் நாளினும்** (மணிமேகலை 1:8) என்பதனால் இருபத்தெட்டு நாளும் விழா நடந்து கொடியிறக்கி வைகாசி இருபத்தெட்டினில் பூருவபக்கத்தில் பதின்மூன்றாம் பக்கமும் சோம வாரமும் பெற்ற அனுடத்தில் நாட்கடலாடி ஊடுதலின் வைகாசி இருபத்தொன்பதில் செவ்வாய்க்கிழமையும் கேட்டையும் பெற்ற நாசயோகத்து நிறைமதிப் பதினாலாம் பக்கத்து வைகறைப் பொழுதினிடத்து நிலவுப்பட்ட அந்தரத்திருளிலே என்றவாறு, அது பூருவ பக்கம் என்று தோன்றக் காரிருள் நின்ற கடைநாட்கங்குல் என்றார். "குணமுதற் தோன்றிய ஆர்இருண்மதியின் தேய்வென கெடுக நின் தெவ்வராக்கம்" (195-6) என இருண்மதியென்றார் மதுரைக்காஞ்சியுள்ளும் என்று எழுதுகிறார்.

ஆடிமாதம் அமாவாசைக்கு முன்பு கண்ணகி மதுரையை எரிக்கிறாள்.

*ஆடித்திங்கள் பேர் இருள்பக்கத்து*
*அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று*
*வெள்ளி வாரத்து ஒள்ளரி உண்ண   (23: 133—135)*

என மதுரை எரிக்கப்பெற்றகாலம் குறிப்பிடப் பெறுகிறது. அதனால் வைகாசி ஆனி, ஆடி, அமாவாசை இதற்குள் மதுரைக்காண்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இரண்டரை மாத நிகழ்ச்சிகள் மதுரைக்காண்டம்.

**வஞ்சிக்காண்டம்**

வஞ்சிக்காண்ட நிகழ்ச்சிகள் கண்ணகி வானுலகம் சென்றதிலிருந்து சேரன் செங்குட்டுவன் இமயம் சென்று கல்

எடுத்துக் கங்கையில் நீராட்டி வஞ்சிக்குக் கொணர்ந்து சிலை அமைக்கச் சென்று வர ஐந்துஆண்டுகள் ஆகின்றன.

சேரன் செங்குட்டுவன் கல் எடுத்து நீராட்டிய காலத்தில் கணியன் காலத்தைக் கூறுகிறான்.

*எண் நான்கு மதியம் வஞ்சி நீங்கியது*
*மண்ணாள் வேந்தே வாழ்க என்று ஏத்த (27:149--150)*

இமயம் செல்ல 32 மாதங்களும் திரும்புவதற்கு 32 மாதங்களும் ஆக 64 மாதங்கள் ஆகின்றன. அதனால் ஏறத்தாழ ஐந்தரையாண்டு நிகழ்ச்சிகள் வஞ்சிக்காண்ட நிகழ்ச்சிகள்.

சிலப்பதிகாரக்கால நிகழ்ச்சிகள் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் நிகழ்ந்தவை என்று சொல்லலாம்.

வஞ்சிக்காண்டத்தில் ஏழுகாதைகள் உள்ளன. குன்றக்குரவை, காட்சிக் காதை, கால்கோள் காதை, நீர்ப்படைக் காதை, நடுகல் காதை, வாழ்த்துக்காதை, வரந்தரு காதை என. இவற்றுள் ஐந்து காதைகள் தொல்காப்பியம் கூறிய புறத்திணையியலிலுள்ள வெட்சித்துறைகளின் படி அமைந்தவை. போர்க்களத்தில் வீரம் காட்டி மேல்உலகம் அடைந்த வீரர்க்கு நடுகல் எடுத்து வழிபடுவது வழக்கம். போர்க்களத்தில் தன் ஆற்றல் முழுவதையும் காட்டி, வென்று இறந்தவீரனைத் தெய்வத்தொடு ஒப்ப நினைந்து வழிபடும் வழக்கம் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இருந்தது. அவ்வீரனின் பெயரையும் பெருமையையும் எழுதி அவ்வீரனின் உருவத்தைச் செதுக்குவதற்குரிய கல்லினைத் தேர்ந்தெடுத்து கல்லைக் காணுதல் காட்சி. கல்லைக் கொள்ளுதல், அக்கல்லை வைத்தற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்தல் கால்கோள். வீரன் உருவம் பொறித்த கல்லைத் தூய்மைசெய்ய நீராட்டுதல் நீர்ப்படை. அதனை உரிய இடத்தில் வைத்தல் நடுகல். அவ்வீரனின் சிறப்புக்களைக் கூறிப் பெரும்படையினர் வாழ்த்துதல் வாழ்த்தல் என அமையும்.

**காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்,**
**சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று**
**(தொல்– 1006;19–20)**

தொல்காப்பியம் சுட்டும்.

இளங்கோவடிகள் மரபுக்கவிஞர். ஆனால் புரட்சிக் கவிஞர். அதனால் பெண்ணாகிய கண்ணகிக்கு முதல் முதல் இவற்றைச் செயல்படுத்துகிறார். சிலப்பதிகாரத்தில், குன்றக்குரவையில் குன்றக்குறவர் கண்ணகியைத் தெய்வமாக்குகின்றனர். மலைவளம் காணவந்த செங்குட்டுவனிடம் கண்ணகி கதையைக் குன்றக்குறவர் பின்பு கூறுகின்றனர்.

மலைவளம் காண வந்ததையும் கல்லைக் காணச் சென்றதையும், காட்சிக் காதை என்று கொள்ளலாம். செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எடுத்து வழிபட முடிவுசெய்கிறான். அதற்காக இமயம் சென்று பத்தினிப் படிமத்திற்குரிய கல்லைக் கொள்கிறான் (கால்கோள்காதை). அதைக்கங்கை ஆற்றில் நீராட்டித் தூய்மைப்படுத்துகிறான். (நீர்ப்படைக் காதை). அக்கண்ணகி படிமத்தைக் கோயில் கட்டி அங்கு அமைக்கிறான். அது நடுகல்காதை வஞ்சிமகளிரும் - புகார் மகளிரும் கண்ணகியை வாழ்த்திப் பாடுகின்றனர் அது வாழ்த்துக்காதை கண்ணகி வரம் தருகிறாள். (வரம்தருகாதை). எனப் பாடியுள்ளார்.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குப் பொதியமலையில் எளிதாகக் கல்எடுத்துச் சிலைசெய்து கோயில் கட்டி இருக்கலாம். ஆனால் இமயமலைசென்று கல்எடுப்பதற்குக் காரணம் தமிழரின் பெருமையை வடநாட்டு வேந்தர்கள் குறைவாகப் பேசியதால், கனகவிசையர் முடித்தலை நெறிக்கும் வகையில் கண்ணகி சிலையை அவர்கள் தலையில் சுமத்திச் சேரநாட்டிற்குக் கொணர்கிறான். தமிழ் இலக்கியத்தில் முதல் முதல் தமிழின் பெருமைக்காகக் குரல் கொடுத்தவர் இளங்கோவடிகள். சிலம்புக் கதையில் தம்மையும் ஒரு பாத்திரமாக வரந்தருகாதையில் அமைத்துக்கொள்கிறார் இளங்கோவடிகள்.

## கானல் வரி பெறும் இடம்

சிலப்பதிகாரத்தில் கானல் வரி திருப்புமையமாக அமைகின்றது. கோவலன் மாதவியைப் பிரிந்த காரணத்தால்

தான் மதுரை செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மதுரை சென்றதால் தான் கோவலன் பிழையாகக் கள்வன் என்று பொற்கொல்லனால் பழிகூறப்பட்டு கொலை செய்யப்படுகிறான். கண்ணகி மதுரையை எரிக்கிறாள். சிலப்பதிகாரப் பின் செயல்கள் அனைத்திற்கும் கானல்வரியே காரணமாக அமைகின்றது. அதனால் அது காப்பியத்தின் திருப்புமையமாக அமைகின்றது.

சிலம்பில் வரி என்ற தலைப்புடைய காதைகள் மூன்று. கானல்வரி இசையால் பெற்ற பெயர். வேட்டுவரியும் ஊர்சூழ்வரியும் கூத்தால் பெற்ற பெயர்கள்.

**சந்தி ஐந்தும், முழுநிலையும்**

நாடகக் காப்பியத்துள்ளமைப்பு பொதுநிலையில் சந்தி எனக் கூறப்பெறும். ஐந்து நிலைகள் அமையும். 1. முகம், 2. பிரதிமுகம், 3. கருப்பம், 4. விளைவு, 5. துய்த்தல். இந்த ஐந்தும் எல்லா நாடகங்களுக்கும் எல்லாக் கதைகளுக்கும் எல்லா இலக்கியங்களுக்கும் பொதுக்கூறுகளாக அமையும் என்று சொல்லலாம்.

முகமாவது - ஏழுவகைப்பட்ட உழவினாற் சமைக்கப்பட்ட பூழியுள் இட்டவித்துப் பருவஞ்செய்து முளைத்து முடிவதுபோல்வது.

பிரதிமுகமாவது - அங்ஙனம் முளைத்து முதலாய் இலைதோன்றி முடிவது போல்வது

கருப்பமாவது - அந்நாற்று முதலாய் கருவிருந்து பெருகித் தன்னுள் பொருள் பொதிந்து கருப்பம் முற்றி நிற்பது போல்வது

விளைவாவது-கருப்பமுதலாய் விரிந்து கதிர் திரண்டிட்டு காய்தாழ்ந்து முற்றி விளைந்து முடிவது போல்வது.

துய்த்தலாவது - விளையப்பட்ட பொருளை அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலிசெய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வது போல்வது. இவை ஐந்து சந்தியும் நாட்டியக்கட்டுரை.

(சிலம்பு - அடியார்க்கு நல்லார் உரை 3-13).

சிலப்பதிகாரத்தில் முகம் என்பது மங்கல வாழ்த்துப்பாடல். அது காப்பியத்தின் தோற்றமாக அமைகிறது. காப்பியத்தலைவன் தலைவியரின் அறிமுகமாக அமைகிறது.

பிரதிமுகமாக கோவலன் மாதவியை அடையும் அரங்கேற்று காதையையும், திருப்பு மையமாக அமையும் கானல்வரியையும், சொல்லலாம்.

கருப்பமாகக் கோவலன் கண்ணகி மதுரைசெல்லும் நிலையைச் சொல்லலாம். மதுரை சென்ற காரணத்தால் வினையின் விளைவால் கோவலன் கொலை உண்ணப்படுகின்றான். கோவலன் கொலையுண்ட காரணத்தால் அவன் கள்வன் அல்லன் என்பதைக் கண்ணகி நிரூபித்து மதுரையை எரிக்கிறாள். அதுவிளைவாக அமைகின்றது.

மனித வாழ்க்கையின் முழுநிலை பெறுதல் என்பது துய்த்தல் என்ற நிலையில் அமைதல். இங்குக் கண்ணகி முழுநிலைபெற்று மேலுலகம் செல்வது வாழ்க்கையின் துய்த்தலாக அமையும் வாழ்க்கையின் இறுதிக்கட்டம் துய்த்தல் என்று கொள்ளலாம். அவளைத் தெய்வமாக்குதல் குன்றக்குரவையில் நடைபெறுகிறது. அதுதான் வாழ்க்கையின் துய்த்தல். அதனால் குன்றக்குரவைதான் காப்பியத்தின் முழுநிலையைத்தரும் காதையாக அமைகின்றது.

வாழ்க எம்கோ மாதவி மடந்தை
கானல்பாணி கனக விசயர் தம்
முடித்தலை நெரித்தது, (27:49–51)

மாதவியின் கானல்வரிப்பாடல்களால் தான் சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று தமிழரின் பெருமையை நிறுவி இமயத்தில் கல்எடுத்து கங்கையில் நீராட்டி வஞ்சியில் கண்ணகிக்குக் கோவில் அமைத்தான் என்பதை மாடலன் வாயிலாக அறிகிறோம். இங்கு இசையாகிய மென்மையான இனிமையான சுவையான பொருள் வன்மையான ஆற்றலுடைய வெற்றிக்கு அடிப்படையாக அமைவதை உணர்கிறோம். மென்மை வன்மையை வெல்லும் என்பதைக் கண்ணகி பாண்டியனை வென்றதிலிருந்தும் அறிகிறோம்.

கா - என்ற சொல்லுக்குச் சோலை, கற்பகமரம், பாதுகாப்பு, காவடித் தண்டு, துலாக்கோல், ஒரு நிறையளவு, தோள்சுமை, பூ முதலிய இடும் பெட்டி, கலைமகள் போன்ற பல பொருள்கள் உள்ளன. அது அசைச்சொல்லாகவும் பயன்படும்.

சிலம்பில் கா என்ற சொல் சோலை என்ற பொருளில் உள்ளது.

தடந்தாழ் வயலொடு தண்பூங் காவொடு (11–89)
காவும் கானமும் கடிமலர் ஏந்தத் (14– 114)
பொலம்பும் காவும் புனல் யாற்றுப் பரப்பும் (25–12)
இலங்குநீர்த் துருத்தியும் இளமரக் காவும் (25–13)

இங்கு, கா என்ற சொல் சோலை என்ற பொருளில் பயன்கொள்ளப்பெறுகிறது.

காளரி யூட்டிய நாள்போல் கலங்க (22–112)

இங்கு, காடு என்ற பொருளில் பயன்படுகிறது.

கான் என்ற சொல்

கான் - என்ற சொல் கா என்ற சொல்லில் இருந்து வளர்ந்து உள்ளது. கான் என்ற சொல்லுக்கு மணம், காடு, பூ, சலதாரை, வாய்க்கால், மரக்கலத்தின் அறை, இசை, செவி, புகழ் போன்று பல பொருள்கள் உள்ளன. கான் என்பது எழுத்தின் சாரியையாகவும் அமையும்.

கான் என்ற சொல்லும் காடு என்ற பொருளில் சிலப்பதிகாரத்தில் பயன்படுத்தப்பெறுகிறது.

மாயிரும் பீலி மணிநிற மஞ்ஞைநின்
சாயற்கு இடைந்து தண்கான் அடையவும் (2–53,54)

கண்ணகியின் சாயலைத் தான் பெறவில்லையே என்று வருந்தி மயில் குளிர்ந்தகாட்டை நோக்கிச் சென்றுவிட்டதாகக் கோவலன் கூறுகிறான்.

கானக்கோழியும், நீர்நிறக்காக்கையும் (10–116)

கானக்கோழி என்ற தொடர் காட்டுக்கோழியை உணர்த்துகிறது.

கானுறை தெய்வம் (11– 171), கானக்கோழியும் (12–1–34),
காதலி தன்னொடு கானகம் போனதற்கு

*ஊதுலைக் குருகின் உயிர்த்தனன் கலங்கி (13–43,44)*

கோவலன் கண்ணகியுடன் காட்டுவழியாக மதுரை செல்லும் போது வருந்தும் நிலையை இங்குப் பேசுகிறார்.

*அரசே தஞ்சம் என்று அருங்கான் அடைந்த (13–64)*

இங்கு அரசப் பதவியைப் பெரிதாகக் கருதாது இராமன் காட்டை அடைந்ததைக் குறிப்பிடுகிறார்.

*மெல்லியல் தன்னுடன் வெங்கான் அடைந்தோன் (14–51)*
*அடவிக் கான் அகத்து ஆயிழை தன்னை*
*இடையிருள் யாமத்து இட்டு நீக்கியது. (14–54,55)*

இங்கு நளன் தமையந்தியுடன் காட்டுக்குச் சென்றதையும், தமையந்தியைக் காட்டில் விட்டுவிட்டுப் பிரிந்ததையும் குறிப்பிடுகிறார்.

**கானல்** - என்ற சொல் கா, கான் என்ற சொல்லில் இருந்து வளர்ந்து விரிந்துள்ளது. கானல் என்ற சொல்லுக்கு மணம், கடற்கரை, கழி, உப்பளம், உவர்நிலம், மலைசார்ந்த சோலை, கடற்கரைச் சோலை, வெப்பம், சூரியக்கதிர், பேய்த்தேர், பரல் நிரம்பிய நிலம், போன்ற பல பொருள்கள் உள்ளன. இங்கு, கடற்கரைச் சோலையில் மணம் பொருந்திய மலர்கள் பல உள்ளன. கடற்கரையில் கழி உள்ளது. உப்பளமும் உள்ளது. கடற்கரையில் கோவலனுக்கும் மாதவிக்கும் மனவெம்மை மிகுதியானதால் கோவலன் பிற பெண்ணைப் பாடுவதாக மாதவி நினைக்கும் நிலையில் கண்ணகியைப் பற்றிப் பாடுகிறான். மாதவி வாழ்க்கை பேய்த்தேராக அமைவதற்கு உரிய சூழ்நிலை கானல் வரிப் பாடல்களால் ஏற்படுகின்றன.

**வரி** என்ற சொல்லுக்குக் கோடு, தொய்யில் முதலிய வரி, கைரேகை, ஒழுங்குநிரை, எழுத்து, புள்ளி, தேமல், வண்டு, கடல், கட்டு, பல தெருக்கள் கூடுமிடம், வழி, இசை, இசைப்பாட்டு, கூத்து வகை, கடைச்சங்கத்து நூல்களுள் ஒன்று, உயர்ச்சி, நீளம், குடியிறை, தீ, நிறம், அழகு, வடிவு, நெல். இவ்வாறு பல பொருள்கள் உள்ளன. அதில் இங்கு இசைப்பாடல்களைக் குறிக்கும்.

சிலம்பில், வரி எனும் இச்சொல் இசைப்பாட்டு எனும் பொருண்மையுடன் பல சொற்களுடன் இணைந்தும் வருகின்றது.

இசையெனும் பொருளில், கானல்வரி என்பது காதைத் தலைப்பாகவும் அமைகின்றது. கானல் வரிப்பாடல் (7-24, 1) கானல் வரிப் பாடற்பாணி (7.-24-4) கானல்வரி பாட, (7-52-2) எனும் தொடர்கள் அதன் இசைப்பண்பையும், பாடப்பட்ட தன்மையினையும் நிறுவுகின்றன. 'வரிக்கும் ஆடற்கும்' (3-29) என்பதில் வரியென்பதற்குச் செந்துறை வெண்டுறை எனப் பாடாநின்ற இருவகைப் பாடல்கள் என்ற விளக்கம் தருகின்றார் நல்லார். வரியென்பது இசைப்பொதுப் பெயராகச் செந்துறை வெண்டுறை அனைத்தையும் அடக்கும்முழுமைக் கருத்தாய் அமைந்தமை இங்குத் தெரிகின்றது. ஆடலும் வரியும்(14-150) வரியுங் குரவையும் (30-க9, நூக-13) என்பன, கூத்திலிருந்து வேறுபட்டு, ஆயின் கூத்தோடு இணைந்த இசை நிலையினது வரி என்பதனைக் காட்டுகின்றன. வரிநவில் கொள்கை (13-38) வரிநவில் பாணி (27-58) எனும் குறிப்புக்கள், சொல்லோடு கலந்த பாடற்றன்மையை விளக்குகின்றன. மாதர்ப்பாணி வரியொடு தோன்ற (26-115) எனும் இடத்துத் தாள இணைவுடன் இசை அமைந்தமை தெரிகின்றது. திணைநிலைவரி இணைநிலை வரி (10-க-12) உள்வரிப் பாணி (17-28-7) என்பன, இதன் பொருள் செறி நிலையால் ஏற்பட்ட வகைகளைக் குறிக்கின்றன.

### அரும்பத உரையாசிரியர்

இனி வரிப்பாடலாவது :- பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒரு நெறியன்றி மயங்கச் சொல்லப்பட்ட எட்டன் இயல்பும் ஆறன் இயல்பும், பெற்றுத் தன் முதலும் இறுதியும் கெட்டு இயல்பும் முடமுமாக முடிந்து கருதப்பட்ட சந்தியும் சார்த்தும் பெற்றும் பெறாதும் வரும். அதுதான் தெய்வம் சுட்டியும் மக்களைப் பழிச்சியும் வரும்.

அவற்றுள், தெய்வஞ்சுட்டிய வரிப்பாட்டு வருமாறு:-

"அழலணங்கு தாமரை அருளாழி உடையகோன் அடிக்கீழ்ச் சேர்ந்து,

நிழலணங்கு முருகுயிர்த்து நிரத்தலர்ந்து தோடேந்தி நிழற்றும்
போலும்,
தொழலணங்கு அன்புடையார் சூழொழியும் வீழ்கரியும் சொல்லா
அன்றே,

இது கூடைச் செய்யுள்.

"கூடை என்பது கூறுங்காலை,
நான்கடி யாகி இடையடி மடக்கி,
நான்கடி அஃகி நடத்தற்கும் உரித்தே"

வாரம் என்பது வகுக்கும் காலை,
நடையினும் ஒலியினும் எழுத்தினும் நோக்கித்
தொடையமைந்து ஒழுகும் தொன்மைத் தென்ப
இவை அடிவரையிட்டன.

**இனி மக்களைச் சுட்டிய வரிப்பாட்டு வருமாறு :-**

திங்கள் மாலை . . . . . . . . .
காவேரி என்பது போல வருவது

**கானல் வரி யாப்பு**

சங்க இலக்கியங்களில் பெரும்பாலானவை ஆசிரியப்பாக்களால் ஆயவை. கலித்தொகை கலிப்பாடலால் ஆயது. பரிபாடல் பரிபாட்டு என்னும் ஒருவகையைச் சார்ந்தது.

சிலப்பதிகாரம் ஆசிரியப்பா, கலிப்பா, வெண்பா, விருத்தங்கள் போன்ற பல வகைப்பாக்களால் ஆயது. விருத்தப்பாவிற்கு வித்திட்டவர் இளங்கோவடிகள். பிற்கால காப்பியங்களாகிய சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, கம்பராமாயணம், பெரிய புராணம், அனைத்தும் விருத்தப்பாக்களால் ஆயவை. பக்திப்பாடல்களும் விருத்தப்பாக்களால் ஆயவை. இவற்றிற்கு எல்லாம் தொடக்கமாக அமைவது. கானல் வரியின் யாப்பு.

கானல் வரியில் அறுசீர் ஆசிரியவிருத்தத்தால் அமைந்த பாடல்கள் 15. கோவலன் மாதவி பாடிய ஆற்றுவரிப்பாடல்கள் 3+3=6 பாடல்கள். சார்த்துவரிப் பாடல்கள் 3+3=6. மாதவி பாடிய மயங்குதிணை நிலைவரிப்பாடல் 3 ஆகப் பதினைந்து.

கலிவிருத்தமாக அமைந்த பாடல்கள் 23. அதில் 13 பாடல்கள் கோவலன் பாடியவை. 10 பாடல்கள் மாதவி பாடியவை.

ஆசிரியத்துறையாக அமைந்த பாடல்கள் 9. அவற்றில் கோவலன் பாடியவை 3. மாதவி பாடியவை 6. இவ்வாறு இளங்கோவடிகள் கானல்வரியில் யாப்பின் அமைப்பைச் சங்க காலத்தில் இருந்து வேறுபடுத்துகின்றார்.

சிலப்பதிகாரத்தில் நாட்டார் பாடல்கள் கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, வாழ்த்துக்காதை, ஆகிய 5 காதைகளிலும் உள்ளன. அக்காதைகளில் உள்ள பல பாடல்கள் அறுசீர் ஆசிரியவிருத்தப்பாடல்களாகவும், கலிவிருத்தப்பாடல்களாகவும் உள்ளன.

கானல்வரியில் உள்ள பாடல்கள் கட்டுரைபோக எல்லாப்பாடல்களும், துறை, விருத்தப் பாடல்களே!.

கானல்வரி இசைப்பாடல்கள்

கானல்வரியில் கோவலன் பாடிய பாடல்கள் 22. மாதவிபாடிய பாடல்கள் 26. ஆக 48 பாடல்கள் அவற்றில்

| | கோவலன் பாடியவை | மாதவி பாடியவை |
|---|---|---|
| 1. | ஆற்றுவரி பாடல்கள் -3 | ஆற்றுவரி பாடல்கள் -3 |
| 2. | சார்த்துவரிப் பாடல்கள்-3 | சார்த்துவரிப் பாடல்கள்-3 |
| 3. | முகமில் வரி - 1 | முகமில் வரி -5 |
| 4. | கானல் வரி - 2 | |
| 5. | நிலை வரி - 3 | திணைநிலை வரி - 6 |
| 6. | முரிவரி - 3 | |
| 7. | திணைநிலை வரி - 7 | மயங்குதிணைநிலைவரி - 6 |
| 8. | | சாயல் வரி -3 |

வரிப்பாடல்களின் அமைப்பை இளங்கோவடிகள்

குறிப்பிட்டார் என்று கூறுவதற்கு இல்லை. சில சுவடிகளில் வேறுபட அமைந்துள்ளன. சான்றாக 20, 21, 22 ஆகிய கோவலன் பாடிய பாடல்கள் திணைநிலைவரி என்ற தலைப்பின் கீழ் வந்துள்ளன. அதற்குச் சாமிநாதையர் அடிக்குறிப்பில் "இச்செய்யுள் முதலிய மூன்றும் நிலைவரியென்றும் துள்ளல்வரி என்றும் துள்ளலோசை என்றும் மூலமட்டும் உள்ள சில பிரதிகளில் எழுதப்பெற்றுள்ளன" என்று எழுதுகிறார். ஆனால் இதே ஓசை அமைப்புள்ள மாதவி பாடிய 43, 44, 45 ஆகிய பாடல்கள் சாயல் வரி என்ற தலைப்பின் கீழ் உள்ளன. அதனால் கோவலன் பாடிய பாடல்களும் சாயல் வரியாக இருக்கவேண்டும் என்று கருதி, சாயல் வரி என்றே அமைத்துள்ளேன். இங்குப் பொருள் அடிப்படையிலும் யாப்பு அடிப்படையிலும் வரிப்பாடல்கள் வகுக்கப்பட்டு இருத்தல் வேண்டும் என்ற உணர்வு தோன்றுகிறது.

வரிப்பாடல்களில் அடிமடக்கி வருதல் ஓசைச்சிறப்புக்கும், இசை இனிமைக்கும் இடம் தருவதால் கானல்வரிப்பாடல்கள் பெரும்பாலும் அடிமடக்கி வந்துள்ளன. ஒருபாடலில் மூன்று அடிகள் ஒரேநிலையில் அமைகின்றன.

*சேரல் மடஅன்னம் சேரல் நடை ஒவ்வாய்*
*சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய்*
*ஊர்திரை நீர்வேலி உழக்கித் திரிவாள் பின்*
*சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய்* (7-23)

இங்கு ஒருவரி மட்டும் தான் வேறுபட்டு அமைகிறது. சில இடங்களில் சீர்மடக்கும் அமையலாம்.

*செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்*
*திங்களோ காணீர்.* (7-11)

யாப்பருங்கல விருத்தி உரை மேற்கோளாகச் சில மடக்குகள் கூறப்பட்டுள்ளன. அதில் அடங்காத மடக்குகளும் சிலப்பதிகாரம் கானல்வரியில் உள்ளன.

*இரண்டாம் அடியை இனிதின் மடக்கலும்*
*இரண்டாம் அடியின் இறுதிச்சீர் மடக்கலும்*
*இரண்டாம் அடியின் ஈற்றசை மடக்கலும்*
*இவ்வா றென்ப மடக்குதல் தானே* (யாப்.வி.76.உரை. மேற்.)

சிலப்பதிகாரத்தில் எதுகை, மோனை, தொடைகள் இல்லாத பாடல்கள் கானல்வரியில் இல்லை எனலாம். மடக்குகள் மிகுதியாக அமைகின்றன. அவை கருத்துக்கு அழுத்தம் தருவதற்கும் சுவையைக் கூட்டுவதற்கும் துணையாக அமைகின்றன.

இசையோடு தொடர்புடையதாக வண்ணத்தைக் குறிப்பிடலாம். தொல்காப்பியம் இருபது வண்ணங்களைக் குறிப்பிடுகிறது.

அவைதாம்
பாஅ வண்ணம், தாஅ வண்ணம்
வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம்,
இயைபு வண்ணம், அளபெடை வண்ணம்,
நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம்,
சித்திர வண்ணம், நலிபு வண்ணம்,
அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம்,
ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம்,
எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம்,
தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம்,
உருட்டு வண்ணம், முடுகு வண்ணம் என்று
ஆங்ஙனம் அறிப அறிந்திசினோரே. (தொல் – 1469)

கானல்வரியில் கோவலன் பாடிய ஆற்றுவரிப்பாடல்களை அரும்பத உரையாசிரியர் ஒழுகுவண்ணம் என்று குறிப்பிடுகிறார். அதன் அடிப்படையில் வீ.ப.கா. சுந்தரம் தம்முடைய கானல்வரி இசைக்குறிப்புக்களில் பொழில் தரும் நறுமலரே என்னும் முரிவரி (7-14) குறில் வண்ணம் ஆகும் எனவும் கடல்புக்கு ... உடல்புக்கு... மிடல் .. இடர்புக்கு... (7-17) என்பவற்றில் தொடக்கங்கள் வல்லிசை வண்ணம் எனவும், திரைவிரி தருதுறையே (7-15) என்னும் பாடல் இடையோசை வண்ணம் என்றும் குறிப்பிடுகிறார். கானல்வரிப்பாடல்கள் முழுவதற்கும் வண்ணமும் அமைத்தால் இன்னும் சிறப்பாக அமையலாம்.

பதிற்றுப்பத்துப் பாடல்களைத் தொகுத்தோர் அப்பாடல்களுக்கு வண்ணம் தந்துள்ளனர் என்பதும் இங்கு நினைக்கத்தக்கது.

**கானல்வரி இலக்கியச் சுவை**

சிலப்பதிகாரம் தோண்டத்தோண்டச் சுரங்கம் போன்று பொருள் வந்துகொண்டே இருக்கும். அதற்குரிய காரணங்கள் பலவற்றுள் ஒன்று குறியீடுகள். திங்களைக் கண்ணகியாகவும், கதிரவனைக் கோவலனாகவும், குறியீட்டுநிலையில் அமைக்கிறார். கானல்வரியில் கதிரவக் குறியீடு தெளிவாகத் தெரிகிறது.

மனையறம்படுத்த காதையில் "கதிரொருங்கிருந்த காட்சி போல" (2-31) என்று சூரியனும் சந்திரனும்,ஒன்றாக இருப்பதைப்போன்று கோவலனும், கண்ணகியும் இருந்தனர் என்று காட்டுகிறார். இவ்வாறு இருகதிர்களும் இருப்பது அருமை - இயலாமை என்று கூடச் சொல்லலாம். ஆனால் தொடக்கமுதலே இளங்கோவடிகள் கண்ணகியைத் திங்களாகவும், கோவலனைக் கதிரவனாகவும், காட்டுகிறார். அது கானல்வரியில் மிகுதியாகிறது.

மாதவிக்கு ஒளி தந்தவன், வாழ்க்கை தந்தவன் கோவலன். அவளை மணந்து மனைவியாகவே கொண்டு வாழ்ந்தான். இளங்கோவடிகளின் நோக்கத்தில் ஒன்றாகிய பரத்தமையை ஒழித்தல் என்பதைக் கோவலனை மாதவியை மணக்கச்செய்து அவன் மடிந்தபின்பு அவளைத் துறவியாக்கி அவள் மகள் மணிமேகலையையும் துறவியாக்குவதில் தருகிறார். கானல்வரி பாடும்போது

இளையிருள் பரந்ததுவே எல்செய்வான் மறைந்தனனே (7-40-1)

இங்கு எல்செய்வான் என்பது எல் - ஒளி - தனக்கு ஒளியைத் தந்தவன் கோவலன் அவன் மறைந்தனன் என்றே கூறுகிறாள். இது பின் வருவதை முன்சுட்டுகிறது. அன்று இரவே மாதவி வாழ்க்கையில் இருந்து கோவலன் மறைந்துவிடுகிறான். அதை மறுபடியும் சுட்டுகிறாள்.

கதிரவன் மறைந்தனனே கார் இருள்பரந்ததுவே (7-41-1)

முதலில் இளையிருளாக இருந்தது இப்போது கரிய பெரிய முழுஇருளாக அவளுடைய வாழ்க்கை அமையப்போகிறது. என்பதைச் சுட்டுகிறார் அடிகள். அடுத்து

மதிஉமிழ்ந்து கதிர் விழுங்கி வந்த இம்மருண்மாலை (7-41-4)

இங்கு, கதிர் விழுங்கப்படுதல் கோவலன் இவள் வாழ்வில் இருந்து நீங்குதல், மதி உமிழ்தல் என்பது இவள் துறவியாகி அருள் வாழ்வு வாழ்வதைக் கொள்ளலாம். அடுத்து,

*பறவை பாட்டு அடங்கினவே பகல் செய்வான் மறைந்தனனே (7–42–1)*

இங்குப் பறவை பாட்டு என்பது பறவைகள் ஒலியோடு வாழ்ந்த வாழ்க்கை போன்று கோவலன் மாதவியரின் ஆரவாரமான பிறரால் பாடத்தகுந்த பெருமிதம் உடைய வாழ்வு அடங்கிவிட்டது. இவளுக்கு ஒளியைச் செய்தவனாகிய பகலவன் மறைந்துவிடுகிறான். அடுத்துக் கோவலன் இறந்துவிடுவான் என்பதையும் குறிப்பாகக் குறிப்பிடுகிறார் அடிகள்.

*பையுள் நோய் கூரப் பகல் செய்வான் போய்வீழ*
*வையமோ கண்புதைப்ப வந்தாய் மருள் மாலை. (7–50.1,2)*

இதுவரை ஒளிதந்தவன் வீழ்ந்து விடுகிறான் இறந்துவிடுகிறான். அதனால் உலகமே நோயுற்று துன்பப்படுகிறது. அதனை அரும்பதஉரையாசிரியர் “தான் சாக உலகம் கவிழும்” என்னும் பழமொழிபோல என்று எழுதுவார். கோவலன் இறந்துவிட்டால் இவளுடைய வாழ்க்கை கவிழ்ந்து விடுகிறது. அதனை இங்குக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

படிமமும் குறியீடும் பற்றிய ஆய்வு கதிரவனுக்குப் பன்முக நோக்கின் ஆழ்பொருள் தருகின்றது. இவை, இளங்கோ காட்டும் பல கதிர்க்காட்சிகளிலும் பொருந்திக் காணப்பெறுகிறது. சூரியகுலத்தோன்றலாகச் சோழர் குலத் தோற்றம் அமைகிறது. ஞாயிறுபோற்றுதும் என்பதில் காவிரி நாடன் திகிரிபோன்ற ஞாயிறு என்பதில் அவன் ஆணைச்சக்கரமாக அமைகிறது. அதற்கு வல்லமையும் அதிகாரமும் மேன்மையும், சிறப்பும் வேண்டும். (might splendour. magnificance. authority.) அதோடு தூய்மை நேர்மை, உண்மை (purity righteousness. truth.) என்பனவும், கதிரவனுக்கு அமைகின்றன. உலகில் நடக்கும் செயல்கள் அனைத்தும் அவன் அறிகிறான். அதோடு ஒரு பால்கோடாத நீதிபதியாகவும் அமைகிறான். (Impartial benefactor or judge. seeing all) அதனால்தான் கண்ணகி காய்கதிர்ச்

செல்வனே! கள்வனோ என் கணவன்? என்று கேட்கிறாள். கதிரவன் விடை அளிக்கிறான். கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய் ஒள்ளெரி உண்ணும் இவ்வூர் என்றது ஒருகுரல். (18-51,53).

இளமை மகன்மைத் தன்மைகளால் கதிரவன் தலைவனுக்கு இணையாதல் எனும் கருத்து சிலம்புக்கும் ஏற்புடையது. தொடுவானில் கதிரவன் திடீர் மறைவு சாம்சன், ஹெர்குலிஸ்,போன்ற வீரரின் இறப்புடன் பொருந்தும் பொதுமை கோவலனிலும் இணைகிறது. கதிரவனின் மறைவு, இறப்பு என நின்று விடாது மீட்டுயிர் பெறல் (resurrection) எனவும் தரப்படுகிறது. கண்ணகி தழுவக் கோவலன், "பழுதுஒழிந்து எழுந்திருந்தான் பல்அமரர் குழாத்துளான்". (19-66) என்று எழுதுகிறார், அடிகள். வானத்தின் கண்ணாகக் கதிரவனைக் கூறுவதும் உண்டு. அதனை "வான்கண்விழியா வைகறை யாமத்து" (10-1) என்பார் அடிகள். கண்ணகியாகிய மாமழைக்கு கணவன் கோவலனே கண்-அவனாக அமைகிறான் எனவும் கூறல் பொருந்தும்.

அவன் இறந்தபோது அதைக்காண விரும்பாத கதிரவன் சுருங்கி ஒளிக்கிறான் என்பார் அடிகள்.

மல்லன்மா ஞாலம் இருள்ஊட்டி மாமலைமேல்
செவ்வன் கதிர்சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்பப்
புல்லென் மருண் மாலைப் பூங்கொடியாள் பூசலிட
ஒல்லென் னொலி படைத்த தூர். (19–31–34)

முரண் தொடையில் இன்பம் காண்பார் இளங்கோவடிகள், மாலைக்காலம் வருகிறது. அதனை பலவகைகளில் சொல்லலாம். ஆனால் அவர் கூறும் வகை மாலைக்காலமும் கதிரவனை விழுங்கி சந்திரனை உமிழ்கிறது என்று பேசுகிறார். விழுங்குதல் உமிழ்தல் என்பது முரண்.

மதிஉமிழ்ந்து கதிர்விழுங்கி வந்த இம்மருண்மாலை (7–41 – 4)

**அகத்தையும் புறத்தையும் இணைத்தல்**

கானல்வரிப்பாடல்கள் முழுவதும் அகப்பாடல்களே. ஆனால் அடிகள் புறத்திணையையும் இங்கு இணைக்கிறார். மாதவி

மாலைக்காலத்தில் துன்பத்தைக் கூறும்போது ஒரு உவமை தருகிறார். இரண்டு அரசர்களுக்குள் மனவேற்றுமை காரணமாக போர் ஏற்படுகிறது. ஒரு அரசன் தான் கட்டிய அரணுக்குள் இருக்கிறான். மற்றொரு அரசன் அரண்வெளியில் இருந்து போர் செய்கிறான். மதிலுக்குள் இருக்கின்ற அரசன் தன் ஆற்றலும் வலிமையும் குறைவால்தான் மதிலுக்குள் இருக்கிறான். இதைத் தெரிந்திருந்தும் மதிலுக்கு வெளியே இருக்கின்ற அரசன் உள்இருப்பவனைத் துன்புறுத்துகிறான். அதுபோன்று மாலைக்காலம் தலைவன் பிரிவால் தலைவி வருந்துவாள் என்பது தெரிந்திருந்தும் மிகுதியான துன்பத்தைத் தருகிறது. இதனைப் பிரிந்தார் பரிந்துரைத்த என்ற பாடலில் தருகிறார்.

**கானல் வரி சுட்டும் காப்பியக் கூறுகள்**

கானல் வரியிலுள்ள ஆற்றுப்பாடல்கள் தான் பிற்காலக் காப்பியங்களில் ஆற்றுப்படலம் என்று அமைகிறது.

சார்த்துவரிப்பாடல்கள்தான் நாட்டுப்படலம் நகரப்படலம் போன்ற நிலையில் அமைகின்றன.

கோவலன் பாடிய பாடல்களில் அவன் கண்ணகியோடு வாழ்ந்த வாழ்க்கை பற்றிய எண்ணங்கள் குறிக்கப்பெறுகின்றன. இது முன் நிகழ்வைப் பின்சுட்டல் என்ற நிலையில் அமையும்.

மாதவி பாடிய பாடல்களில் கதிரவன் மறைந்தனனே (41) பகல் செய்வான் போய்வீழ (50) போன்றவை பின்வருவதைச் சுட்டுகின்றன. அதாவது கதிரவன் என்பது கோவலனைக் குறிக்கிறது. பகல் செய்வான் என்பதும் கோவலனைக் குறிக்கிறது. பகல் செய்வான் போய்வீழ என்பது அவன் மதுரை சென்று மடிய என்பதை உணர்த்துகிறது. இவ்வாறு கானல்வரியில் காப்பியக்கூறுகளும் உள்ளன.

கானல் வரியில் நெய்தல் நில கடற்கரை மக்கள் பாடிய பாடல்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. இன்றும் கடற்கரையில் இப்பாடல்களைப் பாடலாம். கானல் வரிப் பாடல்கள் அனைத்தும் அகப்பாடல்கள். அதனால் தலைவன் தலைவி பெயர்

சுட்டப் பெறுவதில்லை. இதனாலேயே கோவலனுக்கும் மாதவிக்கும் மனவேறுபாடு ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது என்றும் சொல்லலாம்.

இந்திர விழாவில் மாதவி பலர் முன்னிலையில் பதினொரு ஆடல்களை ஆடி எல்லோரையும் மகிழ்வித்தாள். அங்கு கோவலனும் இருந்தான். கோவலன் உள்ளத்தில் தனி உரிமை எண்ணம் மிகுதியாயிற்று. அதாவது மாதவி தனக்கே உரியவள் அவள் பொதுச்சொத்து அன்று தனிச்சொத்து என்று நினைக்கிறான். அவளுடைய ஆடல் எல்லோரையும் கவரும்போது எல்லோர் உள்ளமும் அவள்பால் செல்வது இயல்பு. அதனால் அவனால் அதைப் பொறுத்துக்கொள்ளமுடியவில்லை இதுதான்அடிப்படைக் காரணம். அவன் உள்ளத்தில் மனவேறுபாடு ஏற்பட்டு ஊடல் ஏற்பட்டது. ஊடல் கோலமோடு இருந்த கோவலனைத் திருப்திப்படுத்துக்கிறாள் மாதவி. அதனை,

ஊடற்கோலமோடு இருந்தோன்உவப்ப (6–75) என்பார் அடிகள்.

மாதவி தன்னைப் பத்து வகை மணப்பொருள்களையும் முப்பத்திருவகை சிறந்த மணப்பொருள்களையும். பயன்படுத்தி ஒப்பனைசெய்து, தனக்குள்ள ஆபரணங்கள் அனைத்தையும் அணிந்துகொண்டு அவன் ஊடலைத் தணிக்க முயல்கிறாள். அதனை,

கூடலும் ஊடலும்கோவலற்கு அளித்து (6–109)

என்பார் அடிகள். இவ்வாறு ஊடல் நிலையில் இருந்த கோவலனை அவ்வூடலை நீக்குவதற்காகத்தான் மாதவி கடலாடச் செல்கிறாள். அங்குக் கடற்கரைச் சோலையில் புதுமணல் பரப்பி அழகு பொருந்திய ஓவியங்கள் அமைந்த திரைச் சீலைகளைச் சுற்றிலும் அமைத்துக் கொண்டு மேற்கட்டியாகவும் விதானத்தை அமைத்துக் கொண்டு யானைத் தந்தங்களால் அமைந்த இருக்கையில் கோவலனும் மாதவியும் இருந்து கானல்வரிப் பாடல்கள் பாடத் தொடங்குகின்றனர்.

கானல்வரிப்பாடல்கள் அனைத்தும் அகப்பாடல்கள். நெய்தல்

நிலப்பாடல்கள். நெய்தல் நில முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் அனைத்தும் இங்கு உண்டு.

நிலமும் பொழுதும் பொதுநிலையில் முதல்பொருளாக அமையும். கடலும் கடல் சார்ந்த இடமும் முதல்பொருளாகும். புகார் நகரம் நெய்தல் நிலத்தில் உள்ளது.

தொல்காப்பியர் நெய்தலுக்குப் பெரும்பொழுது கூறவில்லை சிறுபொழுதாக எற்பாட்டைக் கூறுகிறார்.

**(வைகறை விடியல் மருதம்;) எற்பாடு**
**நெய்தலாதல் மெய்பெறத் தோன்றும் (தொல் – 954)**

இதற்கு உரைகூறுகின்ற நச்சினார்க்கினியர் இளவேனிலும் முதுவேனிலும் பெரும் பொழுதாகக் கொள்வர் என்றற்கு மெய்பெறத் தோன்றும் என்று தொல்காப்பியர் குறிக்கிறார் என விளக்கம் எழுதுவார். கானல்வரிப் பாடல்கள் அனைத்தும் எற்பாட்டுக் காலத்தில் பாடியவை. எல்- சூரியன். படு மறையும் நேரம் அல்லது மறைதல். சூரியன் மறையும் நேரம்.

சிறுபொழுது ஆறு வகைப்படும். வைகறை, விடியல், நன்பகல், எல்பாடு, மாலை, யாமம் என. வைகறை காலை இரண்டுமணிமுதல் ஆறுமணிவரை; விடியல் ஆறுமணிமுதல் பத்துமணிவரை; நண்பகல் பத்துமணிமுதல் இரண்டுமணிவரை; எல்பாடு இரண்டுமணிமுதல் ஆறுமணிவரை; மாலை ஆறுமணி முதல் பத்துமணிவரை. இன்றும் மேல்நாடுகளில் சூரியன் மறைவதற்குப் பத்துமணிவரை ஆகும். யாமம் இரவு பத்துமணிமுதல் காலை இரண்டு மணிவரை. இவ்வாறு ஆறு சிறுபொழுதுகளையும் ஒவ்வொரு பொழுதிற்கும் நான்கு நான்கு மணிநேரமாகப் பிரிக்கும் போது சிறுபொழுது தெளிவாகிறது.

கருப்பொருள் தெய்வம், உணவு, விலங்கு, மரம், செடிகொடிகள், பறவைகள், பறை, தொழில், யாழ் என அமையும்.

**மாக்கடல் தெய்வம் நின்மலரடி வணங்குதும் (7–51–4)**

என்று தன் கானல்வரிப்பாடல்களை நிறைவு செய்வாள் மாதவி. அவள் 'நிலத்தெய்வம் வியப்பெய்த நீள் நிலத்தோர்

மனம் மகிழக் கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தால் பாடத்தொடங்கும்' (7-24) என்பார் அடிகள். அவள் பாடிய பாடல்களை 1800 ஆண்டுகளுக்குப் பின்பு இன்றும் பாடி நீள்நிலத்தோர் மனம் மகிழ்ந்துகொண்டு இருக்கின்றனர். தொல்காப்பியர் கூறிய "வருணன் மேய பெருமணல் உலகமும் " (தொல் 951) என்ற வருணனை மாக்கடல் தெய்வம் என்று மாதவி அழைத்தாள் போலும்.

புன்னை, ஞாழல், அடும்புக்கொடி, நெய்தல், குவளை போன்றவை மரம்,செடி, கொடிகளாக நெய்தல்நிலக்கடற்கரையில் உள்ளன.

அன்னம்,குருகுபோன்றவை நெய்தல்நிலப் பறவைகளாக உள்ளன.

மீன்பிடித்தல் நெய்தல்நில மக்கள் தொழில். மீன்களை உலரப்போட்டு விற்றுப்பிழைக்கும் நிலையும் உண்டு என்பதை அறிகிறோம்.

சுற்றுப்புறச்சூழலைத்தான் கருப்பொருள் என்று பேசியது தொல்காப்பியம். இன்று Environmental Sciences என்று அந்தக் கல்வி சிறப்பாக வளர்ந்து வருகிறது.

உரிப்பொருள் இரங்கலும் இரங்கல் நிமித்தமுமாக அமையும் இங்குக் கோவலனும் மாதவியும் இரங்கித் துன்புறுவதை அவர்கள் பாடல்கள் வழி அறிகிறோம்.

# கானல் வரி

## கட்டுரை

### யாழின் தன்மை கூறல்

சித்திரப் படத்துள் புக்குச் செழுங்கோட்டின் மலர்புனைந்து
மைத்தடம் கண் மணமகளிர் கோலம்போல் வனப்பு எய்தி
பத்தரும்கோடும் ஆணியும் நரம்பும் என்று
இத்திறத்துக் குற்றம் நீங்கிய யாழ்கையில் தொழுதுவாங்கிப்

பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல்
கண்ணிய செலவு, விளையாட்டு, கையூழ்,
நண்ணிய குறும்போக்கு என்று நாட்டி
எண்வகையால் இசை எழீஇப்
பண்வகையால் பரிவு தீர்ந்து

மரகதமணித் தாள் செறிந்த மணிக்காந்தள் மெல் விரல்கள்
பயிர்வண்டின் கிளைபோலப் பல் நரம்பின் மிசைப்படர
வார்தல் வடித்தல் உந்தல் உறழ்தல்
சீருடன் உருட்டல், தெருட்டல், அள்ளல்
ஏர் உடைப்பட்டடை என இசையோர் வகுத்த

எட்டுவகையின் இசைக் கரணத்து
பட்டவகை தன் செவியின் ஓர்த்து
ஏவலன் பின் பாணியாது என,
(ஏவலன் பின் பணி யாதெ (க)ன)
கோவலன் கை யாழ் நீட்ட – அவனும்,
காவிரியை நோக்கினவும் கடல் கானல்வரிப் பாணியும்
மாதவி தன் மனம் மகிழ வாசித்தல் தொடங்கும் – மன்

(அ-ள்) சித்திரம் - ஓவியம், படம் - உறை, மை - கண்மை, தடம் - பெரிய, வனப்பு - அழகு, எழீஇ - எழுப்பி, தாள் - மோதிரம்.

(வி-ரை) ஓவியம் வரையப் பெற்ற உறையுள் இருந்தது யாழ்.

அவ்யாழுக்குக் கோட்டுமலர் சூட்டி இருந்தனர். மைதீட்டிய கண்களையுடைய மணமகள் போன்ற அழகுடையதாக இருந்தது. யாழின் அடிப்படை உறுப்புக்களாகிய பத்தர், கோடு, அணி, நரம்பு என்ற நான்கும் பொருந்திய, குற்றம் இல்லாத நிலையில் இருந்தது. அந்த யாழைத் தொழுது வாங்கினாள் மாதவி. பண்ணல்,

***பண்ணலாவது :-***

*வலக்கைப் பெருவிரல் குரல் கொளச் சிறுவிரல்,*
*விலக்கின்றி இளிவழி கேட்டும்... ....*
*இணைவழி ஆராய்ந்து இணைகொள முடிப்பது*
*விளைப்பரும் மரபிற் பண்ணலாகும்.*

***பரிவட்டணை,***

*பரிவட்டணையின் இலக்கணம் தானே,*
*மூவகை நடையின் முடிவிற்றாகி*
*வலக்கை இருவிரல் வனப்புறத் தழீஇ*
*இடக்கை விரல் இயைவதாகத்*
*தொடையொடு தோன்றியும் தோன்றாதாகியும்,*
*நடையொடு தோன்றி நயத்ததாகும்.*

***ஆராய்தல்,***

*ஆராய்தல் என்பது அமைவரக் கிளப்பின்*
*குரன்முதலாக இணைவழி கேட்டும்*
*இணையிலா வழி பயனொடு கேட்டும்*
*தாரமும் உழையும் தம்மில் கேட்டும்*
*விளரி கைக்கிளை, விதியுளிக் கேட்டும்,*
*தளராதாகிய தன்மைத் தாகும்.*

***தைவரல்,***

*"தைவரல் என்புது சாற்றுங் காலை,*
*மையறு சிறப்பின் மன்மகிழ்வு எய்தித்*
*தொடையொடு பட்டும் படாஅ தாகியும்,*
*நடையொடு தோன்றி யாப்புநடை இன்றி,*
*ஓவாச் செய்தியின் வட்டணை ஒழுகிச்*
*சீரேற்றியன்றும் இயலாதாகியும்,*
*நீர வாகும் நிறைய தென்ப"*

**கண்ணிய செலவு,**

*செலவெனப்படுவதன் செய்கை தானே*
*பாலை பண்ணே திறமே கூடமென*
*நால்வகை இடத்தும் நயத்த தாகி*
*இயக்கமும் நடையும் எய்திய வகைத்தாய்ப்*
*பதினோராடலும் பாணியும் இயல்பும்*
*விதிநான்கு தொடர்ந்து விளங்கிச் செல்வதுவே*

**விளையாட்டு,**

*விளையாட்டென்பது விரிக்கும் காலைக்*
*கிளவிய வகையின் எழுவகை எழாலும்,*
*அளவிய தகையதாகும் என்ப.*

**கையூழ்,**

*கையூழ் என்பது கருதும் காலை*
*எவ்விடத்தானும் இன்பமும் சுவையும்,*
*செவ்விதிற் தோன்றி சிலைத்து வரல் இன்றி*
*நடைநிலை திரியாது நண்ணித் தோன்றி*
*நாற்பத்தொன்பது வனப்பும் வண்ணமும்*
*பார்ப்படத் தோன்றும் பகுதித் தாகும்*

**நண்ணிய குறும்போக்கு,**

*துள்ளற் கண்ணுங் குடக்குத் துள்ளும்,*
*தள்ளா தாகிய வுடனிலைப் புணர்ச்சி,*
*கொள்வன எல்லாம் குறும்போக்காகும்.*

இவ்வாறு - அரும்பத உரையாசிரியர் பழங்கால இலக்கண நூல்களில் இருந்து இவற்றை எழுதுகிறார். இவை யாழ்நூலில் இருக்கலாம். இவற்றின் விளக்கங்கள் எல்லாம் விரித்து உரைப்பின் பெருகும் என்று கூறி மேற்கண்டனவற்றைத்தருகிறார்.

இந்த எட்டு வகையால் யாழ் நரம்பின் இசையை இயக்கி, பண்வகையும் பார்த்து, மரகதமணியாலான மோதிரங்கள் அணிந்த காந்தள் போன்ற மென்மையான விரல்கள் வண்டினங்கள் ஓசை போன்று பல நரம்புகளின் மேல் செல்ல அதனால் ஓசை தோன்ற, பின்பு,

வார்தல் - என்றது சுட்டுவிரல் செய் தொழில்; வடித்தல்,

என்பது சுட்டுவிரலும் பெருவிரலும் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல்; உந்தல் என்பது நரம்புகளை உந்தி வலிவிற்பட்டதும் மெலிவிற்பட்டதும் நிரல்பட்டதும் நிரலிழிப்பட்டதும் என்று அறிதல்; உறழ்தல் என்றது ஒன்றிடை எட்டும் இரண்டிடை எட்டும் ஆராய்தல்; சீருடன் உருட்டல் என்றது இடைக்கைச் சுட்டுவிரல் தானே உருட்டலும், வலக்கைச் சுட்டுவிரல் தானே உருட்டலும், சுட்டொடு பெருவிரல் கூட்டி உருட்டலும், இருபெருவிரலும், இயைந்து உருட்டலும் என வரும்.

**தெருட்டல்,**

*தெருட்டல் என்றது செப்பும் காலை*
*உரட்டி வருவ தொன்றே மற்ற,*
*ஒன்றன் பாட்டுமடை ஒன்ற நோக்கின்*
*வல்லோர் ஆய்ந்த நூலே ஆயினும்,*
*வல்லோர் பயிற்றும் கட்டுரை ஆயினும்,*
*பாட்டொழித்து உலகினில் ஒலிந்த செய்கையும்*
*வேட்டது கொண்டு விதியுற நாடி – எனவரும்*

இவை இசைத்தமிழ் பதினாறு படலத்துள் கரண ஓத்துள் காண்க. என அரும்பத உரையாசிரியர் எழுதுகிறார்.

இதனின்றும் அறிவது இசைத்தமிழ் பதினாறு படலம் என்றொரு நூல் இருந்திருக்க வேண்டும். அதிப்பல வகை பகுதிகள் இருத்தல் வேண்டும். அதில் கரணஓத்து என்ற பகுதியில் இவ்எட்டுவகை இசைக்கரணம் பற்றிக் கூறிஇருத்தல்வேண்டும். இங்கு அள்ளல், பட்டடை, என்ற இரண்டிற்கும் விளக்கம் தரவில்லை.

அள்ளல், சிறப்புப் பொருந்திய பட்டடை என இசை நூலார் வகுத்துள்ள எட்டுவகை இசைக்கரணத்தையும் செய்து, தன் செவியில் அவ்வோசைகளை எல்லாம் ஆராய்ந்த பின்பு, கோவலனிடம், ஏவலன், பாட்டுவகை எது என்று கேட்டு, அவன் கையில் யாழை நீட்டினாள். ஏவல், அன்பின் பாணி யாது? எனப் பிரித்தும் பொருள் கொள்ளலாம். பாணி யாதென என்பதற்குப் பணி யாதென என்ற பாடம் உள்ளது. மாதவி

யாழை செம்மைப் படுத்திய பின்பு நான் என்னசெய்யவேண்டும், எனக்கு என்ன பணி என்று கேட்கிறாள். இந்தப் பாடம் சிறப்பாக உள்ளது. பாணி யாதென என்று கேட்டால் என்ன பாடவேண்டும் எந்த இசையில் பாடவேண்டும் என்று கேட்பதுபோல் அமையும். பணி யாதென என்று கேட்டால் கோவலன் கூறுகின்ற பணியை, ஏவலைச் செய்யத்தயாராக இருக்கிறாள் என்பதைப் பணி யாதென என்ற பாடம் விளக்குகிறது. அதோடு கோவலனிடம் மாதவி பணிவாக இருப்பதையும் இப்பாடம் உணர்த்துகிறது. அவன் யாழைப் பெற்று காவிரியைப் பற்றியும், கடற்கரைச் சோலையில் பாடப் பெறும் வரிப்பாட்டுக்களையும், மாதவி மனம் மகிழ யாழை வாசிக்கத் தொடங்கினான். கண்டத்தால் பாடவில்லை.

“யாழ் நான்கு வகைப்படும். பேர் யாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டு யாழ், என. இவை நாலும் பெரும்பான்மைய, சிறுபான்மையான் வருவன பிறவும் உள” என்பது அடியார்க்கு நல்லார் கருத்து.

“பேரியாழ் பின்னும் மகரஞ் சகோடமுடன்,
சீர்பொலியும் செங்கோடு செப்பினார் – தார் பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே,
பின்னும் உளவே பிற”

இந்நால்வகை யாழிற்கும் நரம்புகொள்ளுமிடத்துப் பேர் யாழிற்கு இருபத்தொன்றும், மகரயாழுக்குப் பத்தொன்பதும், சகோட யாழுக்குப் பதினாலும், செங்கோட்டுயாழுக்கு ஏழும் கொள்ளப்படும். என்னை.

“ஒன்றும் இருபதும் ஒன்பதும் பத்துடனே,
நின்ற பதினான்கும் பின் ஏழும் – குன்றாத
நால்வகை ஏழிற்கு நரம்பு சொல்முறையே
மேல்வகை நூலோர் விதி”
என்றார் ஆகலின்.

இனி இவ்யாழ் என்னும் ஒன்றிற்கு அமைந்த பலஉறுப்பாகிய

“கோட்டினது அமைதியுங் கொளுவிய ஆணியும்
ஆட்டிய பத்தரின் வகையும் மாடகமும்,

*தந்திரி அமைதியும் சாற்றிய பிறவு*
*முந்திய நூலின் முடிந்தவகையே"*

வகுக்கப்பட்டனவெல்லாம் கானல்வரியில் **"குற்றம் நீங்கிய யாழ்"** என்பதன் கண் விரியக் கூறுதும். " - என அடியார்க்கு நல்லார் அரங்கேற்று காதை (3-26) உரையில் எழுதுகிறார். நமக்கு அடியார்க்கு நல்லார் உரை கானல்வரிக்குக் கிடைக்காதது. பெரும் இழப்பாக அமைகிறது. கானல்வரிக்கு உரைஎழுதவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்ததை மேற்கண்ட பகுதி உறுதிப்படுத்துகிறது.

**சிலம்பில் யாழ் பற்றிய குறிப்புக்கள்**

**(ஒ–மை)**

*குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தநின்*
*மழலைக் கிளவிக்கு வருந்தின ஆகியும் (2–58–59)*

*யாழிடைப் பிறவா இசையே என்கோ? (2–79)*

*யாழும் குழலும் சீரும் மிடறும் (3–26)*

*வாங்கிய வாரத்து யாழும் குழலும் (3–50)*

*வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்கு (3–64)*

*யாழ்மேல் பாலை இடமுற மெலிய (3–91)*

*குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்*
*தண்ணுமை நின்றது (3–139)*

*குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும் (5–35)*

*பண்ணியாழ்ப் புலவர் பாடல் பாணரொடு (5–185)*

*பண்மொழி நரம்பின் திவவுயாழ் மிழற்றி (5–225)*

*திருந்துகோல் நல்யாழ் செவ்வனம் வாங்கி (6–178)*

*அதிரா மரபின் யாழ்கை வாங்கி (8–23)*

*அணைவுறக்கிடந்த யாழின் தொகுதியும் (10–க– 13)*

*செந்திறம் புரிந்த செங்கோட்டு யாழில்*
*தந்திரி கரத்தொடு திவவுறுத்து யாஅத்து*
*ஒற்று உறுப்பு உடைமையின் பற்றுவழிச் சேர்த்தி*
*உழைமுதல் கைக்கிளை இறுவாய்க் கட்டி*
*வரன்முறை வந்த மூவகைத் தானத்துப்*
*பாய்கலைப் பாவை பாடல் பாணி*
*ஆசான் திறத்தின் அமைவரக் கேட்டுப்*
*பாடல் பாணி அளைஇ (13–106–113)*

*பண்ணுக்கிளை பயிரும் பண்யாழ்ப் பாணியொடும் (22–141)*

*இரும்குயில் ஆல இனவண்டு யாழ்செய (26–112)*

*பயில்இளம் தாமரை, பல்வண்டு யாழ்செய (27–194)*

*வணக்கோட்டு சீறியாழ் வாங்குபு தழீஇப்*
*புணர்புரி நரம்பின் பொருள்படு பத்தர்க்*
*குரல் குரலாக வருமுறைப் பாலையில்*
*துத்தம் குரலாத் தொன்முறை இயற்கையின்*
*அம்தீம் குறிஞ்சி அகவன் மகளிரின்*
*மைந்தர்க்கு ஓங்கிய வருவிருந்து அயர்ந்து (28–31–36)*

*மண்கனை முழவும் வணர்கோட்டு யாழும்*
*பண்கனி பாடலும் பரந்தனஒருசார் (28–55,56)*

*சங்க இலக்கியங்களில் யாழ் பற்றிய குறிப்பும், வருணனைகளும் உள்ளன. **"வணர் அமை நல்யாழ்"** பதிற்று (41:2) **"வணர்கோட்டு சீறியாழ்"** (புறம் -155,1). பத்துப்பாட்டில் சிறிய யாழைக்கொண்டு அதாவது ஏழுநரம்புகளையுடைய செங்கோட்டு யாழைக்கொண்டு செல்கின்றவன் சிறுபாணன் என்று அழைக்கப்படுகிறான். அவனை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது, சிறுபாண் ஆற்றுப்படை. சிறுபாண் ஆற்றுப்படையிலும் யாழ்பற்றிய வருணனை உண்டு.*

*பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன*
*அம்கோட்டுச் செறிந்த அவிழ்ந்துவீங்கு திவவின்*
*மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து*
*வயிறு சேர்பு ஒழுகிய வகைஅமை அகளத்து*
*கானக் குமிழின் கனிநிறம் கடுப்ப*
*புகழ்வினைப் பொலிந்த பச்சையோடு தேம்பெய்து*
*அமிழ்து பொலிந்து பயன்தெரி கேள்விக்*
*கூடுகொள் இன்இயல் குரல் குரலாக*
*நூல்நெறி மரபின் பண்ணி ஆனாது.* *(சிறுபாண். 221–230)*

நரம்புகள் மிகுதியாக உடைய பேரியாழைப் பயன்படுத்தியவன் பெரும்பாணன் என்று அழைக்கப்பட்டான் போலும் பெரும்பாண் ஆற்றுப்படையிலும் யாழின் வருணனை உண்டு. (1-16). பொருநர் ஆற்றுப்படையிலும், யாழ் பற்றிய வருணனை அமைந்துள்ளது.

*குளப்புவழி அன்ன கவடுபடு பத்தல்*
*விளக்கு அழல் உருவின் விசிஉறு பச்சை,*
*எய்யா இளஞ்சூற் செய்யோள் அவ்வயிற்று*
*ஐதுமயிர் ஒழுகிய தோற்றம் போல*
*பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை*
*அளை வாழ்அலவன் கண்கண்டன்ன*
*துளைவாய் தூர்ந்து துரப்புஅமை ஆணி*
*எண்நாள் திங்கள் வடிவிற்று ஆகி,*
*அண்–நா இல்லா அமைவரு வறுவாய்;*
*பாம்பு அணந்தன்ன ஓங்குஇரு மருப்பின்*
*மாயோள் முன்கை ஆய்தொடி கடுக்கும்,*
*கண்கூடு இருக்கைத் திண்பிணித் திவவின்*
*ஆய்தினை யரிசி அவையல் அன்ன*
*வேய்வை போகிய விரல் உளர் நரம்பின்*
*கேள்வி போகி நீள்விசித் தொடையல்,*
*மணம்கமழ் மாதரை மண்ணி யன்ன,*
*அணங்கு மெய்ந்நின்ற அமைவரு காட்சி*
*ஆறு அலை கள்வர் படைவிட அருளின்*
*மாறுதலை பெயர்க்கும் மருவு இன்பாலை*
*வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்*
*சீருடை நன்மொழி நீரொடு சிதறி* *(பொருநர் – 4–24)*

மலைபடுகடாமிலும் யாழ்பற்றிய வருணனை மிகத்

தெளிவாக உள்ளது.

*தொடித்திரிவு அன்ன தொண்டுபடு திவவின்*
*கடிப்பகை அனைத்தும் கேள்வி போகாக்*
*குரல் ஓர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பின்*
*அரலை தீர உரீஇ, வரகின்*
*குரல்வார்ந் தன்ன நுண்துளை இரீஇ*
*சிலம்பலை பத்தல் பசையொடு சேர்த்தி*
*இலங்குதுளை செறிய ஆணி முடுக்கிப்*
*புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத்துப்*
*புதுவது போர்த்த பொன்போல் பச்சை*
*வதுவை நாறும் வண்டுகமழ் ஐம்பால்*
*மடந்தை மாண்ட நுடங்குஎழில் ஆகத்து*
*அடங்குமயிர் ஒழுகிய அவ்வாய் கடுப்ப,*
*அகடுசேர்பு பொருந்தி அளவினில் திரியாது,*
*கவடுபடக் கவைஇய சென்றுவாங்கு உருவின்,*
*வணர்ந்து ஏந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்,* (மலை. 21 – 37)

சங்க காலத்தில் இசைப்பாணர்கள் யாழையே தங்களுடைய வாழ்க்கைக் கருவியாகப் பயன்படுத்தி வாழ்ந்தனர் என்பதை மேற்கண்ட பகுதிகள் தெரிவிக்கின்றன. யாழின் உறுப்புக்கள், யாழின் அமைப்பு, யாழை இயக்குகின்ற தன்மை, இவை பற்றி எல்லாம் இவ்வொப்புமை வழித் தெளிவாக அறியலாம்.

## ஆற்றுவரிப் பாடல்கள்

கோவலன் யாழை மாதவியிடம் இருந்து வாங்கி வாசிக்கத் தொடங்கும் முன்பு அவனுக்குத் தான் கண்ணகியிடம்

*யாழிடைப் பிறவா இசையே என்கோ?* (2–79)

என்று பேசிய பேச்சும் நினைவுக்கு வந்து இருக்கும். கண்ணகியை யாழிடைப் பிறவாத இசை என்று அவன் நினைக்கிறான்.

ஆறு என்ற சொல்லுக்கு நதி, வழி, பக்கம், பயன், சமயம், அறம், சூழ்ச்சி, விதம், இயல்பு, ஓர் எண்ணிக்கை எனப் பல பொருள்கள் உள்ளன. இங்கு ஆறு என்பது சொற்சேர்க்கை அல்லது புணர்ச்சி காரணமாக ஆற்று என்றாகிறது.

உலகம் முழுவதும் ஆற்றங்கரை நாகரிகம் என்பது பொதுச் செய்தி. உலகில் எல்லாப் பெருநகரங்களும் ஆற்றின் கரையில் தான் அமைந்துள்ளன. காரணம் மக்களுக்கு நீர் மிக இன்றியமையாதது. நீர் இன்றி அமையாது உலகு. தேம்ஸ் நதிக்கரையில் லண்டன் நகரம் உள்ளது. நைல் நதிக்கரையில் கெய்ரோ நகரம் உள்ளது. செக்கோஸ்லோவேவின் தலைநகரமாகிய பிராக்கில் பெரிய நதி ஓடுகிறது. இதேபோன்று கங்கை நதிக்கரையில் , கோதாவரி நதிக்கரையில் - காவிரி நதிக்கரையில் இன்று திருச்சி ஸ்ரீரங்கம் போன்ற நகரங்கள் உள்ளன. காவிரி நதி கடலோடு கலக்கும் இடத்தில் புகார் நகரம் இருந்தது. வையைநதிக்கரையில் மதுரை உள்ளது. தாமிரபரணி நதிக்கரையில் திருநெல்வேலி உள்ளது. இவ்வாறு நதிக்கரைகளில் தான் நகரங்கள் அமைப்பது இயல்பு. அதனால் கோவலனும் மாதவியும் ஆற்றுவரிப் பாடலை முதலில் பாடுகின்றனர்.

கம்பன் நதியைக் கவிதையோடு ஒப்பிடுகிறான்.

புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள் தந்து, புலத்திற்று ஆகி,
அவியகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவி,
சவி உறத் தெளிந்து, தண்ணென் ஒழுக்கமும் தழுவி, சான்றோர்
கவி என, கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார். (கம்ப –2732)

இப்பாடலுக்கு இலக்கியமாக இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தைக் கூறலாம். அதனை, மணி ஆரம் படைத்த தமிழ்நாடு என்று கூறுவான் பாரதி. ஆகவே தமிழகத்திற்கும் உலகிற்கும் அணியாக அமைகின்றது சிலப்பதிகாரம். அறம் பொருள் இன்பம் வீடு என்ற நால்வகைப் பொருள்களையும் தருகிறது. அகத்துறை, புறத்துறைகளையும் தாங்கியுள்ளது. ஐந்திணைகளையும் பற்றிப் பேசுகின்றது. கருத்துக்களைத் தெளிவாகச் சொல்கிறது. மனிதநிலையைத் தெய்வநிலையாக்க வழிவகுக்கிறது. இந்நிலையில் சிலப்பதிகாரம், கம்பன் பாடலுக்கு இலக்கணமும் இலக்கியமும் ஆகின்றது.

இளங்கோவடிகள் ஆற்றினை அரசன் மனைவியாகக் காட்டுகிறார் மக்களின் தாயாகவும் காட்டுகிறார்.

## ஆற்றுவரிப் பாடல்கள்

இனி வரியாவது :- முகமுடைவரி, முகமில்வரி, படைப்புவரி என மூன்று வகைப்படும். வரிப்பாட்டுக்கு முகமாக நிற்றலின் முகம் எனப்படும்; என்னை

நிலமுதலாகிய உலகியல் வரிக்கு,
முகமாய் நிற்றலின் முகம் எனப்படுமே"
என்றார் ஆகலின்.

அம்முகமுடையவரி மூன்றடி முதலாக ஏழுஅடி ஈறாக வரும்.
சிந்து நெடிலும் சேரினும் வரையார்.

முகமில் வரியாவது முகம் ஒழிந்து ஏனைய உறுப்புக்களான் வருவது. படைப்புவரியாவது எல்லா உறுப்பும் பலவானும் வெள்ளையானும் ஆசிரியமானும் கொச்சகம் பெற்றும் பெறாதும் வேறுவேறாகி வருவது. இவற்றுள் திங்கள் மாலை முதலாயின மூன்றும் முகமுடையவரி என்க. இவை கண்டன கூறிற்றாக யாழின் இட்ட பாட்டு." என்கிறார் அரும்பத உரையாசிரியர்.

### கோவலன் பாடியவை

2 திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோல் அதுஓச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாது ஒழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெரும் கற்புஎன்று அறிந்தேன் வாழிகாவேரி

(அ-ள்) சென்னி- தலைமை, உச்சி, சிறப்பு, சோழன், போன்ற பல பொருள்கள் இங்கே பயன்படுகின்றன. புலத்தல் - மனம் வேறுபடுதல், புலவாய் - மனம் வேறுபடமாட்டாய். மாதர் - பெண், அழகு, பொன், காதல் போன்ற பல பொருள்கள் உள்ளன. இங்கு மங்கையாகிய கண்ணகியின் பெருங்கற்பு என்று பொருள் கொள்ளலாம்.

(தெ-ரை) திங்கள் போன்ற புகழ் மாலைகள் பலவற்றை உடையவெண் கொற்றக்குடையை உடைய சோழன், செம்மையான தன் செங்கோலைச் செலுத்தி கங்கையாறு ஓடும்

நாட்டுப் பகுதிகளையும் தன் நாட்டோடு இணைத்து, கங்கையையும் கூடினான். அவ்வாறு அவன் கங்கையைக் கூடினாலும் காவிரியே நீ அவனை வெறுக்கமாட்டாய். அவ்வாறு வெறுக்காமல் இருப்பதற்குக் காரணம் கயல் மீன்களைக் கண்களாக உடைய காவிரியே மங்கையர் விரும்பும் அழகு பொருந்திய பெருமை வாய்ந்த கற்புத் தான் என்பதை அறிந்தேன். காவிரியே வாழ்வாயாக.

(வி-ரை) சோழனின் வெண்கொற்றக்குடை திங்கள் போன்று உள்ளது. வெண்கொற்றக் குடையில் மாலைகள் அணிந்துள்ளனர். குடைக்கு மாலைகள் அணிவது புறத்தோற்றம். சோழன் புகழ்மாலைகளால் அணிவிக்கப்பெற்றுள்ளான். இங்கு சிபிச் சக்கரவர்த்தி கதையும் மனுநீதிச் சோழன் கதையும், நினைக்கப் பெறலாம். தலைமையையுடைய சோழன் செங்கோலை நிலைநாட்டி சோழநாட்டின் ஆட்சியை நடத்துகிறான். அவன் அரசியல் காரணமாக கங்கையாறு ஓடும் பகுதியையும் வென்று கங்கை நதியையும் ஆட்சி செய்கிறான். கங்கை நதியையும் காவிரி போன்று தன் மனைவியாகக் கொள்கிறான் சோழன். கங்கை நதியை ஆட்சி செய்வதால் காவிரி நதி சோழனோடு மனவேறுபாடு கொள்வதில்லை. இங்கு நதிகளைப் பற்றிப் பேசும்போது கற்பைப் பற்றிப் பேசவேண்டிய அவசியம் இல்லை. கோவலன் மாதவியோடு உள்ளத்தில் மனவேறுபாடு கொள்ளும் போது, புலக்கும் போது, ஊடல் கொள்ளும் போது, கண்ணகி அவன் உள்ளத்தில் மேலே வருகிறாள். கோவலன் உள்ளத்தில் கண்ணகியும் மாதவியும், எப்போதும் உள்ளனர். இதில் சில வேளைகளில் மாதவி மேலே இருக்கிறாள். சில வேளைகளில் கண்ணகி மேலே வந்துவிடுகிறாள். மாதவி அவன் எண்ணத்தில் குறைந்த நிலை அடைகிறாள். அதுபோன்ற சூழலுக்குக் காரணம் தனக்குரிய உடைமைப் பொருளாகிய மாதவி பொதுப் பொருள் ஆகக் கூடாது என்ற தன் உணர்வுதான்.

இங்குச் சோழனாகக் கோவலனும் காவிரியாகக் கண்ணகியும், கங்கையாக மாதவியும், அமைகின்றனர். இளங்கோவடிகளின்

ஆற்றல் சாதாரண நாட்டுப் பாடலை அல்லது நாட்டார் பாடலில் தன் கருத்தை ஏற்றிக் கூறுகின்ற தன்மைதான். அதாவது சோழ அரசன் கங்கை நதி ஓடும் நாட்டை வெல்வது இயல்பு. அதனை இளங்கோவடிகள் தன் காப்பியக் கதைக்குப் பயன்படுத்திக் கொள்கிறார். இது உள்ளுறை என்று கூறப் பொருந்துகின்றது.

நாட்டை வளம் கொழிக்கச் செய்வது ஆறு. வீட்டை வளமுடையதாக்குபவள் பெண். அதனால் காவிரியையும், கங்கையையும், பெண்ணாகப் பேசுகிறார் அடிகள்.

இங்குக் காவிரியின் பெருமையைப் பேசவரும் கோவலன், புணர்தல், புலத்தல், கற்பு போன்ற பெண்ணோடு தொடர்புடைய சொற்களைப் பயன்கொள்கின்றான். அதற்கு அடிப்படை அவன் மனத்தில் கண்ணகியின் எண்ணம் மேலோங்கி நிற்கின்றது. கோவலன் சோழனாகவும், காவிரி கண்ணகியாகவும், மாதவி கங்கையாகவும், உருவகிக்கப் பெறுகின்றனர். சோழன் கங்கை ஓடும் நாட்டுப் பகுதியை வென்றது பிழையில்லை. அதே போன்று கோவலன் மாதவியைப் பெற்றதும் தவறில்லை என்பது அடிகள் கருத்து. இவ்வாறு நாட்டார் பாடல்களில் உள்ளுறைப் பொருளையும் இணைத்து அமைக்கிறார் இளங்கோ.

இங்கு, கயற்கண்ணாய் என்பது கண்ணகியைச் சுட்டுகிறது.

கோவலனைப்பிரிந்து இருந்தபோது கண்ணகி தன்னுடைய கயல்போன்ற நீண்டகண்களுக்கு மைஎழுதவில்லை என்பதைக் குறிப்பிடுகிறார்.

*செங்கயல் நெடும்கண் அஞ்சனம் மறப்ப (4–53)*

கோவலன் கண்ணகியை நினைத்துப் பாடுகிறான் என்பதை அடுத்து வரும் பாடலும் புலப்படுத்தும்.

*நிறைமதி வாண்முகத்து நேர்கயல் கண்செய்த*
*உறைமலி உய்யாநோய் ஊர்சுணங்கு மென்முலையே தீர்க்கும் போலும்*
*(7–8.3)*

அடுத்து தன் தலைவியை நினைத்துப் பாடும்போது

கயல்எழுதி வில் எழுதி கார் எழுதி (7-11-1) என்று பாடுகிறான். பின்பும் அவன் கண்ணகியையே பாடுகிறான் என்பதை

இருகயல் இணைவிழியே எனைஇடர் செய்தவையே (7–15–4)
என்பதில் இருந்து அறிகிறோம்

கவுந்தியடிகள் கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் செல்லும்போது துணையாக உடன் செல்கிறாள். அவர் கோவலனைப் பார்த்துப் பேசும்போது

கயல்நெடும் கண்ணி காதல் கேள்வ (10–76)
என்று பேசுகிறாள். இங்கும் இளங்கோவடிகள் கண்ணகியைக் கயல் நெடுங்கண்ணி என்றே கவுந்தியடிகளையும் பேசவைக்கிறார்.

கவுந்தியடிகள் மாதரியிடம் கண்ணகி கோவலனை அடைக்கலமாகக் கொடுக்க, ஆயர் குலப்பெண்கள் கண்ணகியை நீராட்டி அழகுபடுத்துகின்றனர். அப்போதும் அவள் கண்களை

செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் தீட்டி (15–132)
என்று பேசுகிறார் அடிகள். கோவலன் கண்ணகியை அழைத்துப் பேசுவதற்கு முன்பும்.

கருங்கயல் நெடும்கண் காதலி தன்னை (16–94)
என்று குறிப்பிடுகிறார். கண்ணகி கதிரவனிடம் தன் கணவன் கள்வனா? என்று கேட்கிறாள் அதற்குப் பதிலாகக் கதிரவன்

கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய் (18–52)
எனக் கருங்கயற்கண் மாதராய் என்றே கண்ணகியைக் குறிப்பிடுகிறான். கண்ணகி அரசனிடம் சென்று தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிரூபிக்க செல்லும் போதும்

நின்றாள் நினைந்தாள் நெடுங்கயற் கணீர் சோர (19–73,74)
நெடுங்கயற் கணீர் சோர என்றே அடிகள் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு கண்ணகியைக் குறிப்பிடும் இடங்களில் எல்லாம் பெரும்பாலும் நெடுங்கயற்கண் என்றே குறிப்பிடுகிறார் அடிகள். கண்ணகிக்குக் குறியீடாகக் கயல்கண்ணை அமைக்கிறார் அடிகள் என்று தோன்றுகிறது.

அதே போன்று மாதவியை நினைக்கும்போது "மாமலர் நெடுங்கண் மாதவி" என்றே பேசுவார். இங்கும் ஒரு செயல்தன்மை இருப்பதைப் பார்க்கிறோம். மலர் மென்மையானது அழகானது. பார்த்து மகிழக்கூடியது. மலரால் செயல்படமுடியாது. அது ஓரறிவுயிர்.

கயல் பிறழ்ச்சியை உடையது, செயலை உடையது, பல இடங்களுக்கும் செல்லக்கூடியது. கண்ணகி புகாரினின்றும் மதுரை வந்து துன்புற்று பாண்டியனிடம் வழக்குரைத்து வெல்லுகின்ற தன்மையையும் அதோடு கயல்மீனை தன் கொடியில் பொறித்துள்ள பாண்டியனை வெல்கின்ற ஆற்றலுடைய கயல்மீன் கண்களையுடைய கண்ணகி என்பதையும் நினைத்தும் அடிகள் இவ்வாறு அமைத்திருக்கலாம்.

மாதர் என்ற சொல்லைக் கண்ணகிக்குச் சில இடங்களில் குறிப்பிடுகிறார்.

பொற்றொடி மாதர் கணவன் மணம் காணப்
பெற்றி உடையது இவ்வூர். (24:25–4,5)

இங்குப் பொற்றொடி மாதர் என்பது கண்ணகியைக் குறிக்கிறது.

கற்பு என்ற சொல் கண்ணகியைக் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை.

மாசில் கற்பின் மனைவியோடு இருந்த (13–102)
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண்டிலம் ஆல் (15–143,144)
பேணிய கற்பும் பெருந்துணையாக
என்னொடு போந்தூங்கு என்துயர் களைந்த
பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்! (16–87–89)
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி! (16–91)
பொற்பு வழுதியும்தன் பூவையரும் மாளிகையும்
வில்பொலியும் சேனையும்மா வேழமும் – கற்பு உண்ணத்
தீத்தரு வெம்கூடல் தெய்வக் கடவுளரும்
மாத்துவத்தான் மறைந்தார் மற்று. (21.–வெ.)
கற்புக்கடம்பூண்டு காதலன் பின்போந்த

*பொற்றொடி நங்கைக்குத் தோழிநான் கண்டீர்*
*பூம்புகார்ப் பாவைக்குத் தோழிநான் கண்டீர் (29–4,3,5)*

கோவலன் கண்ணகியிடம் நேரில் பேசும்போது கொலைக்களக்காதையில் பேணியகற்பும் பெருந்துணையாக எனவும் கற்பின் கொழுந்தே எனவும் பேசுகிறான். அதற்கு முன்பே கவுந்தி அடிகள் கற்புக்கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடை தெய்வம் யாம் கண்டிலமால் என்று பேசுகிறார். அதனால் ஆற்றுவரிப்பாடலில் மங்கை மாதர் பெருங்கற்பு என்ற தொடரும் மன்னும் மாதர் பெருங்கற்பு என்ற தொடரும் கண்ணகியைக் குறிக்கின்றன என்பதில் ஐயம்இல்லை.

3 *மன்னும் மாலை வெண்குடையான் வளையாச் செங்கோல்அதுஓச்சிக்*
*கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழிகாவேரி*
*கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாது ஒழிதல் கயல்கண்ணாய்*
*மன்னும் மாதர் பெரும் கற்பு என்று அறிந்தேன் வாழி காவேரி*

(அ-ள்) மன்னும் - நிலைபெறும். கன்னி என்பது இன்று கடலுள் இருக்கின்ற லெமூரியாக் கண்டத்தில் பழங்காலத்தில் ஓடிய குமரி ஆற்றின் பெயர்.

(தெ-ரை) நிலைபெறுகின்ற, ஒளிபொருந்திய மாலைகளையுடைய வெண்கொற்றக் குடையைக் கொண்ட சோழன், தனது நேர்மையான, வளையாத செங்கோலைச் செலுத்தி கன்னியாற்றையும், துறையையும் சேர்த்துக் கொள்கின்றான். அவ்வாறு கன்னியைக் கூடினாலும் நீ அவனை வெறுப்பதில்லை. வாழ்வாயாக காவேரி. கயல் மீனைக் கண்களாக உடைய காவிரியே அதற்கும் என்றும் நிலைபெறுகின்ற, பெருமையுடைய சிறந்த கற்புத் தான் காரணமென்றறிந்தேன். காவேரி நீ வாழ்வாயாக!

(வி-ரை) கன்னி பாண்டிய நாட்டு ஆறு, துறைமுகத்தைக் குறிக்கும், மாதவியையும் உள்ளுறைப் பொருளில் குறிக்கும். இங்கும் சோழன் கோவலன், காவிரி கண்ணகி, கன்னி மாதவி. சோழ அரசன் வட நாட்டுப் பகுதியையும், பாண்டிய நாட்டுப் பகுதியையும் தன் போர் ஆற்றலால் வெல்கிறான். அது தவறில்லை. அதுபோன்று கோவலன், கலை ஆர்வத்தல்

ஆற்றலால் மாதவியைப் பெறுகிறான். அதுவும் பிழை இல்லை என்பது கருத்து.

4. உழவர்ஓதை மதகுஓதை உடைநீர்ஓதை, தண் பதம்கொள்
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப நடந்தாய் வாழி காவேரி
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப நடந்த எல்லாம் வாய்காவா
மழவர் ஓதை வளவன் தன் வளனே வாழி காவேரி

(அ-ள்) மதகு - நீர் போகும் பாதை, ஓதை - ஓசை, பதம் - நீர் உணவு, சோறு, தண்ணீர், ஈரம், அழகு, இனிமை, இன்பம் போன்ற பல பொருள்களை இங்கே கொள்ளலாம். விழவர் - விழா எடுப்போர். ஆர்ப்ப - பேரொலி, மகிழ்ச்சி, சிரிப்பு, போன்ற பொருள்களைக்கொள்ளலாம். வளவன் - சோழன்.

(தெ-ரை) காவிரி நீர் பெருக்கெடுத்து ஓடுகின்றது. நீர்ப் பெருக்கைக் கண்ட உழவர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்து ஆரவாரம் செய்யும் ஓசையும், மதகுகளில் நீர்தங்கிச் செல்லும் ஓசையும், கால்வாய், வரப்புக்களில் உடைப்பெடுத்து அதனால் ஏற்படுகின்ற ஓசையும் புதுப்புனல் விழா எடுக்க மக்கள் எழுப்பும் ஓசையும் சிறந்து ஒலிக்க நடந்து வருகின்றாய் காவேரி - நீ வாழ்வாயாக, இவ்வாறு பல ஓசைகள் இணைந்து ஒலிக்க நீ நடப்பதற்குக் காரணம், காவல் இடத்தைக் காவல் செய்யத்தேவையில்லாத வீரர்கள் ஓசையும், சோழனின் வளம்பொருந்திய நாடுமே காரணம் - காவேரியே நீ வாழ்வாயாக.

(வி-ரை) இளங்கோவடிகள் திங்கள் என்ற சொல்லைக் காப்பியத் தொடங்கமாக மங்கலச் சொல்லாக அமைக்கிறார். திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும் என. இங்கும் திங்கள் என்ற சொல்லை வைத்துத்தான் கானல் வரிப்பாடல்கள் தொடங்குகின்றன.

"இவை மூன்றும் ஆற்றுவரி. வண்ணம் ஒழுகுவண்ணம்."

**மாதவி பாடியவை**

25 மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அது போர்த்து
கரும்கயல் கண் விழித்து ஒல்கி நடந்தாய்வாழி காவேரி
கரும் கயல் கண் விழித்து ஒல்கி நடந்த எல்லாம் நின் கணவன்

திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி.

(அ-ள்) மருங்கு - பக்கம். ஆர்ப்ப - ஒலிக்க, மணி - அழகு, ஒல்குதல் -அசைதல்,

(தெ-ரை) கரையின் இருபக்கமும் வண்டுகள் மிகுதியாக ஒலிக்க, அழகிய பூக்களாகிய ஆடையைப் போர்த்துக்கொண்டு, கரிய கயல் மீன்களாகிய கண்களால் விழித்து பார்த்துக்கொண்டு அசைந்து நடக்கின்ற காவிரிப் பெண்ணே! நீ வாழ்க! அவ்வாறு நடப்பதற்குக் காரணம், உன் கணவனாகிய சோழனின் திருந்திய செங்கோல் வளையாது ஆளுகின்ற செம்மையான ஆட்சி தான் என்று அறிந்தேன், காவிரியே நீ வாழ்வாயாக!

(வி-ரை) இங்குக் காவிரியாக மாதவி தன்னை நினைக்கின்றாள். மாதவி கோவலனின் மனைவியாகத்தான் வாழ்ந்து வந்தாள். இருப்பினும் சமுதாயம் மாதவியின் கணவன் கோவலன் என்று சொல்ல வேண்டும் என்ற ஏக்கம் அவள் உள்ளத்தில் இருந்து கொண்டே இருந்தது. அதன் வெளிப்பாடு தான் 'நின் கணவன்' என்ற சொற்றொடர்.

**26** பூவர் சோலை மயில் ஆலப் புரிந்து குயில்கள் இசைபாட
காமர் மாலை அருகு அசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை அருகு அசைய நடந்த எல்லாம் நின்கணவன்
நாமவேலின் திறம் கண்டே அறிந்தேன் வாழி காவேரி.

(அ-ள்) ஆர் - நிறைந்த, மலிந்த அழகு. ஆல - ஆட, காமர் காதலர்,விருப்பம், நாமம் - அச்சம்.

(தெ-ரை) பூக்கள் மலிந்த சோலையில் மயில்கள் ஆட, அதைப் புரிந்துகொண்ட குயில்கள் அதற்குத் தக இசை பாட, புதுப் புனல் ஆடும் காதலர்அணிந்த மாலைகள் அசைய நடக்கின்றாய் வாழ்க காவேரி! அவ்வாறு மாலைகள் அருகு அசைய நடப்பதற்குக் காரணம், பிறர் அஞ்சுகின்ற திறத்தையுடைய வேலை நின் கணவன் கொண்டிருப்பதால் தான் என்று அறிந்தேன். காவிரியே வாழ்வாயாக!

**27.** வாழி அவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி

ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாது ஒழுகல் உயிர் ஓம்பும்
ஆழி ஆள்வான் பகல் வெய்யோன் அருளே வாழி காவேரி.

(அ-ள்) ஊழி - ஊழிக்காலம், உய்க்கும் - செலுத்தும், ஓம்பும்-பாதுகாக்கும், ஆழி - ஆணைச் சக்கரம். பகல் வெய்யோன் - கதிரவன், சூரியகுலத்து உதித்த சோழன்,

(தெ-ரை) சோழனாகிய நின் கணவன் வளநாடு வாழ்க! அந் நாடுமகவாக, நீ அந்நாட்டை வளர்க்கும் தாயாகி, ஊழிக் காலமெல்லாம் பாதுகாக்கின்ற பேருதவியைச் செய்துகொண்டிருக்கின்றாய். அதை ஒழியாது செய்க, காவிரியே நீ வாழ்வாயாக. அவ்வாறு செய்வது, உயிர்களைப் பாதுகாக்கும், ஆணைச் சக்கரத்தையுடைய நடுவுநிலையுடைய சூரியகுலத் தோன்றலாகிய சோழன் அருளே! காவிரியே நீ வாழ்வாயாக!

(வி-ரை) ஆற்றுவரிப் பாடல்களில் கோவலன் பாடும்போது சோழனின் மனைவியாகக் காவிரியையும், கங்கையையும், முதல்பாடலிலும், குமரி ஆறாகிய கன்னியை அடுத்த பாடலிலும், பேசுகிறான். அவன் காவிரியைப் பார்க்கின்ற கோணம் கற்புடைய மனைவி என்ற நிலையில் மட்டுமே.

கண்ணகி கோவலனோடு அவள் வாழ்நாள் முழுவதும், மனவேறுபாடு கொண்டதில்லை. ஊடல் கொண்டதும் இல்லை இதனால் தான் புலவாய் வாழி காவேரிஎன்று பேசுகிறான். மாதவி அடிக்கடிபுலத்தல் செய்கிறாள். ஊடலும் செய்கிறாள். ஊடுதல் காமத்திற்கு இன்பம் என்ற குறளின் படி ஊடலும் கூடலும் வாழ்க்கைக்குத் தேவை என்று மாதவி கருதுகிறாள். கண்ணகி புலத்தலையோ ஊடுதலையோ அவள் வாழ்நாள் முழுவதும் நினைத்ததே இல்லை போல் தோன்றுகிறது. அதனால் கண்ணகியைக் கோவலனுக்கு மிகுதியாகப் பிடிக்கிறது. அந்த உணர்வால் தான் கங்கையாகிய பிற பெண்ணைக் கன்னியாகிய பிற பெண்ணைச் சோழன் சேர்ந்தாலும் காவிரி கவலைப் படுவதில்லை. அதே போன்று கோவலன் மாதவியோடு சேர்ந்தாலும் கண்ணகி அதற்காக மனவேறுபாடு கொண்டு புலத்தலோ ஊடலோ செய்ததில்லை. இதனைத் தான் புலவாய்

என்ற தொடர் குறிப்பிடுகின்றது.

மாதவி பாடுகின்ற ஆற்றுவரிப்பாடல்களில் சோழனின் மனைவியாகக் காவிரியைக் கூறினாலும் கணவனின் சிறப்பு காரணமாகக் காவிரி மகிழ்ந்து நடக்கிறாள். என்று நினைக்கிறாள். கோவலன் பாடல்களைக் காட்டிலும் மாதவியின் பாடல்களில் கலை உணர்வு மிகுதியாக இருக்கிறது. காவிரியாறு கலைப் பெண்போன்று மலர் ஆடையைப் போர்த்திக்கொண்டு நடக்கிறது.

பொது நிலையில் கார் காலத்தில் மயில் ஆடும், வேனில் காலத்தில் குயில் பாடும். இரண்டும் ஒரே காலத்தில் இணைந்து ஆடுவதும் பாடுவதும் இல்லை. கானல்வரிப் பாடல்கள் பாடிய காலம் இளவேனில் காலம். அடுத்த காதை வேனில் காதை, குயில்கள் பாடுகின்ற காலம். கடற்கரைச் சோலை, கதிரவன் கதிர்கள் நுழைய முடியாத அளவிற்கு நெருக்கமாக மரங்களைக் கொண்டுள்ளது. அதனால் எப்போதுமே கார்காலம் போல் தோன்றுகின்றது. அதனால் மயில்கள் ஆடுகின்றன. இயற்கைக் காலத்தில் நடைபெறாத இரண்டையும் அடிகள் இணைக்கக் காரணம், மயிலாக மாதவியையும், குயிலாகக் கண்ணகியையும் உள்ளுறையாக்குகிறார். இளவேனில் காலத்தில் குயில்கள் பாடும். கண்ணகி இருக்க வேண்டிய இடத்தில் மாதவி இருக்கிறாள். தொடக்கம் முதல் இறுதி வரை கண்ணகி, மாதவியைப் பற்றி ஒரு வார்த்தைக் கூடக் குறைவாகப் பேசியதில்லை. மாதவி கண்ணகியைக் 'குலப்பிறப்பாட்டி' எனப் பெருமையோடு கூறுகிறாள். இருவரும் புற நிலையால் இணையாவிடினும், அக நிலையில் இணைவதைக் காட்டவே இங்கு மயிலையும், குயிலையும் இணைக்கின்றார் அடிகள்.

மாதவி பாடியமூன்றாவது பாடலில் காவிரியைத் தாயாகவும், சோழநாட்டை மகவாகவும் பார்க்கிறாள். காரணம் ஏற்கெனவே மணிமேகலையைப் பெற்று, கானல்வரிப் பாடல்கள் பாடும்போது மணிமேகலைக்குப் பதினொரு வயது ஆகிறது கண்ணகி தாய்மைப் பேறு பெறாத காரணத்தால் கோவலன் மாதவியை

அடைந்தான், என்ற எண்ணமும் ஆய்வாளர்களுக்கு உண்டு. மாதவி தாய்மைப் பேறு அடைந்ததைப் பெருமையாகக் கருதுகிறாள். அதனால் தான் மூன்றாவது பாட்டில் தாய் மகவு என்ற தொடர்கள் வருகின்றன.

கோவலன் முன்றாவதுபாடலில் **"வளவன் தன் வளனே வாழி காவேரி"** என்று பாடுகிறான். அவன் தன்னுடைய வளத்தால் மாதவி வாழ்கிறாள் என்று நினைக்கிறான். மாதவி **"பகல் வெய்யோன் அருளே வாழி காவேரி"**. என்று பாடுகிறாள். இங்குப் பகல் வெய்யோன் என்பது கதிரவனைக் குறித்து சூரிய குலத்தில் தோன்றிய சோழர்களையும் குறித்தாலும், கதிரவனோடு கோவலனையும் பல இடங்களில் இணைத்துப் பாடுகிறார் இளங்கோவடிகள். (மங்கல வாழ்த்துப் பாடல் - நூலில் கதிரவன் என்ற கட்டுரையைப் பார்க்க.)

"மழைவளமும் ஆற்றுவளமும் கற்பின் வளமாகும். களவிலும், இந்தக் கற்பென்னும் திண்மை உண்டு. காதற்பாட்டிலும், இந்தக் கற்பினை அடிப்படையாக நேரே வைத்து ஆற்றைப் புகழ்தல் இயல்பாகும். அவ்வாறு நேராகக் கற்பினைக் குறிப்பிடாமலும் ஆற்றினைப் பாடல் நோக்கம்இதுவேயாம். இதனை ஆற்றுப்படலம் பாடவந்த கம்பன் எடுத்த எடுப்பிலேயே கூறிவிடுகிறான்.

"ஆச லம்புரி ஐம்பொறி வாளியும்
காச லம்பு முலையவர் கண்ணெனும்
பூச லம்பும் நெறியிற் புறஞ்செலாக்
கோச லம்புனை ஆற்றணி கூறுவாம். (12)

என ஆற்றின் வளத்தோடு கற்பெனும் திண்ணிய அறநெறியையும் படைத்துவிடுகிறான்." - (தெ.பொ. மீ- கானல்வரி பக்கம். 107,108.).

இங்குக் கவுந்தி அடிகள் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலம் கொடுக்கும் போது அவளைப்பற்றிக் கூறுவதை நினைக்கலாம்.

இன்துணை மகளிர்க்கு இன்றியமையாக்

*கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது*
*பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலம் ஆல்*
*வானம் பொய்யாது வளம்பிழைப்பு அறியாது*
*நீள்நில வேந்தர் கொற்றம் சிதையாது*
*பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு என்னும்*
*அத்தகை நல் உரை அறியா யோ நீ? (15:142–148)*

இங்கு வானம் பொய்யாது வளம் பிழைப்பு அறியாது என்ற தொடர்கள் ஆழமாக நினைக்கத்தக்கன. காவிரியின் வளம் கண்ணகியின் கற்பின் திண்மையோடு இணைக்கப்படுகிறது. அதனைக் கோவலன் "மங்கை மாதர் பெருங்கற்பென்று அறிந்தேன் வாழி" என்று பாடுவதில் இருந்து உணர்கிறோம்.

இளங்கோவடிகள் ஆற்றைப் பெண்ணாகப் பார்ப்பது அவருடைய பொது எண்ணம். வையை ஆற்றையும் பெண்ணாகப் பார்க்கிறார்.

*"பன்மலர் விரிந்து.... ......... ........ .....*
*...... .......... .............. பிணங்கரில் மணந்த*
*கொடுங்கரை மேகலைக் கோவை யாங்கணும்*
*மிடைந்து, சூழ்போகிய அகன்று ஏந்து அல்குல்*
*வாலுகம் குவைஇய மலர்ப் பூந் துருத்தி*
*பால்புடைக் கொண்டு, பன்மலர் ஓங்கி*
*எதிர்எதிர் விளங்கிய கதிர்இள வனமுலை*
*கரைநின்று உதிர்த்த கவர் இதழ்ச் செவ்வாய்*
*அருவி முல்லை அணி நகை ஆட்டி*
*விலங்கு நிமிர்ந்து ஒழுகிய கரும் கயல்நெடும் கண்*
*விரைமலர் நீங்கா அவிர் அறல் கூந்தல்*
*உலகு புரந்து ஊட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்*
*புலவர் நாவில் பொருந்திய பூம்கொடி*
*வையை என்ற பொய்யாக் குலக்கொடி*
*தையற்கு உறுவது தான் அறிந்தனள்போல்*
*புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்*
*புனல் யாறு அன்று இது பூம்புனல் யாறுஎன (13:154–174)*

ஆற்றுவரிப் பாடல்கள் பிற்காலக் காப்பிங்களில் ஆற்றுப்படலம் என்று விரிவாக அமைந்துள்ளன. ஆற்றுப்படலத்திற்கு விதை ஆற்றுவரிப்பாடல்கள்.

# சார்த்துவரிப் பாடல்கள்

*"பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரொடும்,*
*சார்த்திப் பாடிற் சார்த்தெனப் படுமே*

- இங்குப் பாட்டுடைத் தலைவன் சோழன். அதுதான் முகச்சாத்து முரிச்சாத்து கொச்சகச் சார்த்தென மூவகைப் படும். அவற்றுள் முகச் சாத்தாவது மூன்று அடிமுதல் ஆறு அடி ஈறாகவரும். இடை நான்கடியானும் ஐந்தாடியானும் வரும். முரிச்சாத்தாவது முரிந்தவற ..... ..... ..... குற்றெழுத்தியலாற் குறுகிய நடையாற் பெற்றஅடித்தொகை மூன்றும் இரண்டும் குற்றமில்லென கூறினர் புலவர் கொச்சகச் சார்த்து கொச்சகம் போன்று முடியும். இவற்றுள் இவை மூன்றம் முகச் சார்த்து". என எழுதுவார். அரும்பத உரையாசிரியர்.

## பாட்டுடைத் தலைவன் ஊரொடும், பெயரொடும் சார்த்திப் பாடுவது

### கோவலன் பாடியவை

கோவலன் பாடிய மூன்று சார்த்துவரிப் பாடல்களும் தோழிகூற்றாய் அமைந்துள்ளன. கோவலன் பாடிய பாடல்களுள் இம்மூன்று பாடல்களும் பெண்ணாய் நின்று பாடியவை. அவனுடைய உள்ளத்தில் இப்போது கண்ணகி மேல் எழுந்து நிற்கிறாள். அவன் பிரிவால் அவள் எவ்வளவு துன்புறுவாள் என்பதை அவன் இப்போது நினைத்துப் பார்க்கிறான். தோழி தலைவனிடம் எம் தலைவியை விரைவில் திருமணம் செய்துகொள்க என்று கேட்பது போன்று பாடிய பாடல்கள். அவை வரைவுகடாயவை என்று கூறுவர்.

தலைவியின் ஊர்பற்றிப் பாடியவை சார்த்துவரிப்பாடல்கள் அதாவது பிற்காலத்தில் காப்பியத்தில் நகரப் படலம் என்ற ஒன்று அமையும், அதற்கு விதை இந்த சார்த்துவரிப்பாடல்களே!.

5 *கரிய மலர் நெடும் கண் காரிகை முன்கடல் தெய்வம்காட்டிக்காட்டி*
*அரியசூள் பொய்த்தார் அறனிலர்என்றேஏழையம்யாங்குஅறிகோம்ஐய*
*விரிகதிர் வெண்மதியும் மீன்கணமும் ஆம்என்றே விளங்கும்வெள்ளைப்*
*புரிவளையும் முத்தும் கண்டு ஆம்பல் பொதி அவிழ்க்கும்புகாரேஎம்ஊர்.*

(அ-ள்) காரிகை - பெண், இங்குத் தலைவி, சூள்- சபதம், சத்தியம், வளை- சங்கு.

(தெ-ரை) காதலனும் காதலியும் கடற்கரையில் தினந்தோறும் சந்திப்பர். கரும் குவளைமலர் போன்ற நீண்ட கண்களையுடைய காதலியிடம் கடல்தெய்வமாகிய வருணனைக் காட்டி உறுதியாகத் திருமணம் செய்து கொள்வதாகச் சபதம் செய்தார். இப்போது அந்தச் சபதம் பொய்யாகிவிட்டது. அறமுடையவர் அல்லர் என்பதை அறிவில்லேமாகிய யாம் எங்ஙனம் அறிவோம்? கடற்கரைப் பொய்கையிலுள்ள ஆம்பல் மலர்கள் கடற்கரையிலுள்ளபெரியவெண்சங்கை விண்மதி என்றும் அருகிலுள்ள வெண்முத்துக்களை நட்சத்திரக் கூட்டங்கள் என்றும் நினைத்து ஏமாந்து கட்டவிழ்த்து மலர்ந்து விடுகின்றன. எங்கள் ஊர் இயற்கை ஆம்பல்கள் செயற்கையைக் கண்டு ஏமாந்து விட்டதைப் போல் நாங்களும் தலைவன் பேச்சை நம்பி ஏமாந்து விட்டோம் என்கிறாள் தோழி, தலைவி சார்பில்.

(வி-ரை) நெடுங்கண் என்ற தொடரை இங்குப் பயன்படுத்துவதற்குக் காரணம் மாதவியை இளங்கோவடிகள் அழைக்கும்போது எல்லாம் மாமலர் நெடுங்கண் மாதவி என்று அழைப்பார். கோவலன் உள்ளத்தைச் சுண்டி இழுத்தது மாதவியின் நீண்ட கண்களே!.

மாமலர் நெடுங்கண் மாதவி (3–170); (6–174); (8–16,118); (13–49)
மாநெடுங்கண் மாதவியும் (7–24–1)

இவ்வாறு ஏழு இடங்களில் மாதவியின் நீண்ட கண்களை அடிகள் கூறுகிறார். ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு உறுப்பு ஆற்றல் உடையதாக இருக்கும். மாதவியின் முகபாவத்தைத் தெளிவாக வெளிக்காட்டியன அவளுடைய நீண்ட கண்கள். அது கோவலன் உள்ளத்தில் நின்றுகொண்டே இருக்கின்றன; அதனால் தான் இங்கு, கரியமலர் நெடுங்கண் என்று கண்ணகியை நினைந்து பாடுவதால் நீண்ட கண் என்ற முறையில் குறிப்பிடுகிறான்.

நீண்ட கண்கள் அவனுக்குப் பிடிக்கும் அதனால் தான்

கரியமலர் நெடுங்கண் காரிகை என்று பேசுகிறான்.

காதலி கண்ட கனவு கருநெடுங்கண் (9–வெ.) எனவும் வரும்.

6. காதலர் ஆகிக் கழிக்கானல் கையுறை கொண்டு எம்பின்வந்தார்
ஏதிலர் தாம் ஆகி யாம் இரப்ப நிற்பதை யாங்கு அறிகோம் ஐய?
மாதரார் கண்ணும், மதி நிழல் நீர் இணைகொண்டு மலர்ந்த நீலப்
போதும் அறியாது வண்டு ஊசலாடும் புகாரே எம்ஊர்.

(அ-ள்) கழி - கடற்கரையில் உள்ள உவர்நீர்ப் பரப்பு; கையுறை - காணிக்கையாகிய பரிசுப் பொருள்; ஏதிலர் - அயலார், பிறர்;

(தெ-ரை) முன்பு எம் மீது காதல் உடையவராய்க் கடற்கரைச் சோலையில் காணிக்கையாகிய பரிசுப் பொருளையும் கொண்டு எம் பின் வந்து கொண்டிருந்தார். இப்போது அயலவர் ஆகி, யாம் அவர் பின் சென்று இரக்கும் நிலையில் உள்ளோம். இவ்வாறு நிற்போம் என்பதை எங்ஙனம் அறிவோம்? ஐய! பொய்கையில் பெண் நீராடிக் கொண்டிருக்கிறாள். மதிபோன்ற முகம், நீலமலர் போன்ற கண்கள், மாலைக்காலத்து அப்பொய்கையில் மதியின் நிழல் இரண்டு நீல மலர்கள் மேல் விழுகின்றது. வண்டு உண்மையான மலர் எது? நீராடும் பெண்களின் கண்கள் எவை? என்று அறியாது அங்குமிங்கும் அலைகின்றன. அவ்வாறு வண்டு ஊசாலாடுகின்ற புகாரே எம் ஊர் என்கிறாள்.

(வி-ரை) இங்கு வண்டு கோவலனைக் குறிக்கின்றது.

அவனுடைய மனம் உண்மை அன்பு கண்ணகியிடம் உள்ளதா? மாதவியிடம் உள்ளதா? என்று ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. பெண்ணின் கண்களுக்கும், நீலமலர்களுக்கும் வேறுபாடு அறியாது அங்குமிங்கும் அலையும் வண்டைப் போல் அவன் மனம் அசைகின்றது.

7. மோது முது திரையால் மொத்துண்டு போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரி மணல் மேல் வண்டல் உழுது அழிப்ப மாழ்கி ஐய,
கோதை பரிந்து அசைய மெல்விரலால் கொண்டு ஓச்சும் குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார் கண் போகாப் புகாரே எம்ஊர்.

(அ-ள்) திரை- அலை; முரல் - ஒலிக்கின்ற, சங்கம் - சங்குகள்; மாதர் - சிறுபெண்கள். வண்டல் - பெண்களின் சிறுவீடுகள். மாழ்கி - வருந்தி, துன்புற்று; கோதை - மாலை; பரிந்து - இரங்கி

(தெ-ரை) மோதுகின்ற பெரிய அலைகளால் அடிக்கப்பட்டு அங்கு மிங்கும் அசைகின்ற ஒலிக்கின்ற வாயையுடைய சங்குகள், சிறுபெண்கள் மணல் வீடுகட்டி விளையாடிய வீடுகளைச் சங்குகள் உழுது அழிக்க, வருந்தி, ஐயனே! குவளை மலர்களால் ஆகிய மாலைகள் அசைய அம் மாலையிலிருந்த மலர்களைப் பிய்த்து, சங்குகளை நோக்கி எறிய, அம்மலர் இதழ்கள், கண்கள் போல்தோன்றி, போவோர் கண்களைத் தடுத்து நிறுத்துகின்றது. அத்தகைய ஊர் எங்கள் புகார் என்கிறாள்.

(வி-ரை) கடற்கரையில் குழந்தைகள் சிறுவீடு கட்டி விளையாடுவது போலக் கோவலன் தன் எண்ணத்தில் மாதவியுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அவனுடைய கண்ணகியின் நினைவலைகள், அவன் கட்டிய எண்ணங்களை அழிக்கின்றது. இவன் சினத்தால் மாதவியியைப் பிரிந்துசென்று செயல்பட முயல்கிறான். இதைக்கண்ட புகார் நகர மக்கள் சிறங்கணித்துப் பார்க்கிறார்கள் என்பது உள்ளுறைப் பொருளாக அமைந்துள்ளது.

**மாதவி பாடியவை**

28 தீம்கதிர் வாள் முகத்தாள் செவ்வாய் மணிமுறுவல் ஒவ்வாவேனும்
வாங்கும் நீர்முத்து என்று வைகலும் மால் மகன் போல் வருதிர் ஐய
வீங்கு ஓதம் தந்து விளங்கு ஒளிய வெண் முத்தம் விரைசூழ்கானல்
பூங்கோதை கொண்டு விலைஞர் போல் மீளும் புகாரே எம் ஊர்.

(அ-ள்) தீம் - இனிமை; வாள் - ஒளி; முறுவல் - பற்கள்; வைகலும் - தினந்தோறும்; மால் - மயக்கம்; ஓதம் - அலைகள் விரை - மணம், கோதை - மாலை, விலைஞர் - வணிகர்.

(தெ-ரை) இனிமையான கதிர்களையுடைய ஒளி பொருந்திய திங்கள் போன்ற முகத்தினளின், சிவந்த வாயிலுள்ள அழகான பற்களுக்கு, நீர் தரும் முத்துக்கள் ஒவ்வாதன ஆயினும், தினந்தோறும் நான்தரும் முத்துக்களை வாங்கிக் கொள்ளுங்கள்

என்று மயக்கம் பொருந்திய மகன் போன்று வந்து கொண்டிருக்கின்றீரே! ஐயனே! ஒலி மிக்க கடலின் அலைகள், விளங்குகின்ற வெண்மையான முத்துக்களைக் கொணர்ந்து தந்து, மணம் பொருந்திய கடற்கரைச் சோலையிலுள்ள மகளிர் அணிந்து களைந்து போட்ட பூமாலைகளைக் கொண்டு செல்லும் வணிகர் போல மீண்டும் செல்லும் அலைகளையுடைய புகாரே எம் ஊர்.

(வி-ரை) நீரும் முத்துக்களைத் தந்து எம் மாலையைப் பெற விரும்புகிறீர் போலும் என்ற பொருள் அமைகின்றது.

**29 மறையின் மணந்தாரை வன்பரதர் பாக்கத்து மடவார் செங்கை**
**இறைவளைகள் தூற்றுவதை ஏழையம் எங்ஙனம் யாங்கு அறிகோம்ஐய!**
**நிறைமதியும் மீனும் என அன்னம் நீள் புன்னை அரும்பிப் பூத்த**
**பொறைமலி பூம்கொம்பு ஏற வண்டு ஆம்பல் ஊதும் புகாரே எம் ஊர்.**

(அ-ள்) மறை - பிறர் அறியாத செய்தி; வன் - வலிமை; பரதர் - நெய்தல் நிலமக்கள். பாக்கம் - கடற்கரையூர், இறை-முன்கை, தூற்றுதல் - தாழ்வாகப் பேசுதல், மலி - மிகுந்த, கொம்பு - கிளை.

(தெ-ரை) பிறரறியாமல் மறைவாக மணந்தவர்களை, வன்மையான பரதர் வாழ் பாக்கத்தில் உள்ள பெண்களின் சிவந்த முன் கைகளின் வளைகள், பிரிவால் மெலிய வீழ்தலால், பிறர் அறிய அவள் செயலைத் தூற்றுகின்றன. இதை ஏழையாகிய யாம் எங்ஙனம் அறியாதிருப்போம். அறிவோம், ஐயனே! எங்கள் புகார் நகர வண்டுகள், நெருங்கிய கிளைகளையுடைய மிகுதியாகப் பூத்த புன்னை மரக்கிளையில் அன்னப் பறவை ஏற, அன்னத்தை முழுமதியாகவும், புன்னைப் பூக்களை விண்மீன்களாகவும் கருதி, ஆம்பல் மலர்கள் மலர, வண்டுகள் ஒலிக்கும் புகார் எங்கள் ஊர்.

(வி-ரை) செயற்கையைப் பார்த்து இயற்கை என நினைத்து ஏமாறும் ஊர் எங்கள் ஊர். அது போன்று, எம் தலைவியும் உமது பேச்சை உண்மை என நம்பி ஏமாறுகிறாள் என உள்ளுறைப் பொருள் கூறப்பெற்றுள்ளது.

**30 உண்டாரை வெல்நறா ஊண் ஒழியாப் பாக்கத்துள் உறை ஒன்று இன்றித்**
**தண்டாநோய் மாதர் தலைத் தருதி என்பது யாங்கு அறிகோம் ஐய!**
**வண்டால் திரை அழிப்ப கையால் மணல் முகந்து மதிமேல் நீண்ட**
**புண்தோய் வேல் நீர்மல்க, மாதர் கடல் தூர்க்கும் புகாரே எம்ஊர்.**

(அ-ள்) நறா -கள்; உறை - மருந்து; தண்டா - தணியாத, குறையாத, வண்டால் - மகளிர் விளையாட்டாகக் கடற்கரையில் கட்டிய சிறுவீடுகள்

(தெ-ரை) உண்ணுகின்றவர்களை வெல்லுகின்ற கள் உண்டல் குறையாத மருவூர்ப் பாக்கத்தில், மருந்து ஒன்றும் இல்லாத குறையாத காமநோயை எங்கள் பெண்களிடம் தருகின்றாய் என்பதனை யாம் எங்ஙனம் அறிவோம் ஐயனே! கடல் அலைகள், பெண் குழந்தைகள் சிறுவீடுகட்டி விளையாடும் வீடுகளை அழித்ததால், சினம் கொண்டு, மதிபோன்ற முகமும், பிறரைத் துன்புறுத்துவதால் குருதி தோய்ந்த வேல்போன்ற கண்கள், கண்ணீர் வடிய, பெண்டிர் கடலைத் தூர்ப்பதற்கு மணலை அள்ளிவீசும் புகாரே எங்கள் ஊர்.

(வி-ரை) எவ்வாறு இப்பெண் குழந்தைகள் மணலை அள்ளி எறிந்து கடலைத் தூர்க்க முடியாதோ, அதே போன்று நாங்கள் உங்களிடம் சினப்பதால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை என்பது கருத்து.

இங்குக் கோவலனும் மாதவியும் பாடிய சார்த்துவரிப் பாடல்கள் புகார் நகரப் பெண்டிர் ஏமாறும் தன்மையுடையவர் என்றும் புகார் நகர ஆண்கள் பெண்களை ஏமாற்றும் தன்மையுடையவர்கள் என்றும் பாடுகின்றனர். கோவலன் பாடிய இருபத்திரண்டு பாடல்களில் இம்மூன்றுபாடல்களும் பெண்ணாக நின்று பாடியவை. அதனால் அவன் கானல்வரிப் பாடல்கள் பாடினானே தவிர பிற பெண்ணை நினைத்துப் பாடவில்லை. அவனுடைய உள்ளத்தில் கண்ணகி இருந்து கொண்டே இருந்தாள்.

கோவலன் பாடிய பாடல்களில் முதலில் ஆம்பல் என்ற

இயங்காப் பொருள் சங்கையும் முத்துக்களையும், பார்த்து ஏமாந்து மலர்கின்றது. இங்கு ஆம்பல் மலர் காதலி, சந்திரன் காதலன். சூரியன் தோன்றினால் தாமரை மலரும். சூரியன் தலைவன். தாமரை தலைவி. அதே போன்று சந்திரன் தலைவன் ஆம்பல் தலைவி. இயற்கைப் பொருளாகிய மலரே ஏமாறும்போது மனிதரும் ஏமாறுவது இயல்புதானே என்ற நிலையில் அவன் பாடல் அமைந்துள்ளது.

மாதவியின் சார்த்துவரி முதல்பாடலில் தலைவன் முத்துக்களை கொணர்ந்துகொடுத்து தலைவியின் அன்பைப் பெற முயல்கிறான். விலைஞர் என்ற சொல் வணிகனைக் குறிக்கின்றது. கோவலன் வணிகனாக நின்று பெரும்பொருளைத் தந்து தன்னிடம் உள்ள கற்பினை எடுத்துக்கொண்டான் என்ற நிலையில் பேசுவது போல் தோன்றுகிறது.

கோவலன் பாடிய இரண்டாம் பாடலில் வண்டு ஊசலாடுகின்றது. வண்டு இயங்கும் பொருள். பொய்கையில் பெண் நீராடிக்கொண்டு இருக்கிறாள். அதன் அருகே நிலாவின் ஒளி பொய்கையில் மலர்ந்த இருமலர்களின் மேல் விழுகிறது. நிலாவின் ஒளி முகமாகவும், அதில் இயல்பாக உள்ள மலர்கள் கண்களாகவும் தோற்றம் அளிக்கின்றன. வண்டு பெண்ணின் கண்களுக்கும் நீலமலர்களுக்கும் வேறுபாடு தெரியாது மயங்குகின்றது. வண்டுக்குத் தேவை மலர்கள்தான் ஆனால் பெண்டிர்கண்களும் மலர்கள் போன்று இருப்பதால் உண்மையான மலர் எது என்று தெரியாமல் ஊசல் ஆடுகின்றது.

கோவலன் உள்ளமும் கண்ணகியின் அன்பு உண்மையானது என்று தெரிந்திருந்தாலும் மாதவி காட்டிய மிகுதியான அன்பில் திளைத்ததால் இப்போது எந்த அன்பு உண்மையானது என மயங்குகிறது.

மாதவி பாடிய சார்த்துவரி இரண்டாவது பாடலிலும் வண்டு ஊசல் ஆடாமல் ஏமாந்து விடுகிறது. கடற்கரையில் புன்னைமரத்தில் ஏறிஇருந்த அன்னத்தைக் கண்டு ஏன் ஆம்பல்மலர் இன்னும் மலரவில்லை என்று கருதி ஆம்பலிடம்

சென்று வண்டு ஒலிக்கின்றது. இங்கு ஆம்பல் கோவலன். வண்டு மாதவி. ஆம்பல் இயல்பாக மதிவந்தால் மலரும். புன்னைமரத்தில் ஏறிய அன்னத்தை மதியாக ஆம்பல் கருதவில்லை அதனால் மலரவில்லை. ஆனால் வண்டு ஆம்பலை மலரச் செய்ய முயல்வது போன்று ஊதுகிறது. உண்மையான அன்பு கோவலனுக்குக் கண்ணகியிடம் இருக்கும் என்பதை தெரிந்திருந்தும் மாதவி அவன் அன்பை முழுநிலயில் பெற முயல்வது ஆம்பலை வண்டு மலர்விக்க முயல்வது போன்று தோன்றுகிறது.

சார்த்துவரி மூன்றாவது பாடலில் பெண்கள் சிறுவீடுகட்டி விளையாடிய செய்தியைக் கோவலன் மாதவியர் பாடுவது முன்பே கூறப்பட்டுள்ளது.

குடித்தவர்களை வெற்றிபெறும் தன்மையுடையது கள். அதேபோன்று காதலித்தவர்களை வெற்றிபெறும் தன்மையுடையது காதல். காதலில் மயங்கி ஏமாந்த பெண்டிர் கடற்கரை மணலை அள்ளி எறிந்து கடலைத்தூர்க்கமுயன்றதைப் போன்ற நிலைதான் அப்பெண்டிருக்கும் அமையும் என்று அவள் பாடுகிறாள்.

காப்பியங்களில் நகரப் படலம் என்று ஒன்று உண்டு. அந்த நகரப் படலத்தின் விதையாகச் சார்த்துவரிப் பாடல்கள் அமைகின்றன.

இங்கே கோவலனும் மாதவியும் காதலர்களாக இருப்பதால் ஆண்கள் ஏமாற்றும், பெண்கள் ஏமாறும் புகாரை இருவரும் காண்கின்றனர். உண்மையான புகார் நகரத்தை இளங்கோவடிகளும் கண்ணகியும் காண்கின்றனர்.

**இளங்கோவடிகள் கண்ட புகார்**

பொதியில் ஆயினும் இமயம் ஆயினும்
பதிஎழு அறியாப் பழங்குடி கெழீஇய
பொதுஅறு சிறப்பின் புகாரே ஆயினும்
நடுக்கு இன்றி நிலைஇய என்பது அல்லதை

*ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்*
*முடித்த கேள்வி முழுது உணர்ந்தோரே.* *(1 :14–19)*

இளங்கோவடிகள் பொதியமலை, இமயமலை, புகார் நகரம் மூன்றும் என்றும் நிரந்தரமாக நிலைபெறும் என்று நினைத்தார். ஆனால் பொதிய மலையும், இமயமலையும் உள்ளன. புகார் நகரம் கடலுள் மூழ்கிவிட்டது. உயர்ந்தவர்கள் புகார் நகரில் இருப்பதால் அது அழியாது என்று நினைத்தார் இளங்கோவடிகள். புகார் நகரில் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் ஆனதால் புகாரைக் கடல் கொண்டுவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**கண்ணகி கண்ட புகார்**

பாண்டியன் நெடுஞ்செழியன் பிழையாகப் பொற்கொல்லன் சொற்கேட்டுக் கோவலனைக் கொலைசெய்து விடுகிறான். நீதிகேட்கக் கண்ணகி பாண்டியன் அவைக்குச் செல்கிறாள். அரசன்

*நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்!*
*யாரையோ நீ? மடக்கொடியோய்!*

எனக் கேட்கின்றான். கண்ணகி பதில் உரைக்கின்றாள்.

*தேராமன்னா! செப்புவது உடையேன்*
*எள்அறு சிறப்பின் இமையவர் வியப்பப்*
*புள்உறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்*
*வாயில் கடைமணி நடுநா நடுங்க*
*ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான்தன்*
*அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்*
*பெரும்பெயர்ப் புகார் என் பதியே அவ்ஊர்*
*ஏசாச் சிறப்பின், இசை விளங்கு பெருங்குடி*
*மாசாத்து வாணிகன் மகனை ஆகி*
*வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்ப,*
*சூழ்கழல் மன்னா! நின்நகர்ப் புகுந்து, இங்கு*
*என்கால் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பால்*
*கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி*
*கண்ணகி என்பது என்பெயரே என –* *(20;50–63)*

இதோடு வஞ்சினமாலையில் கண்ணகி புகார் நகரில் வாழ்ந்த

பத்தினிப் பெண்டிர் எழுவர் கதையையும் கூறுகிறாள். கண்ணகிக்குப் புகார் நகரம் பற்றிய பெருமதிப்பை இவை காட்டுகின்றன.

இங்குக் கண்ணகி சிபிச்சக்கரவர்த்தியும் மனுநீதிச் சோழனும் ஆண்ட புகார் நகரத்தில் பிறந்தவள் நான் என்று கூறுகிறாள். புகார் நகரைப் பற்றிய பெருமிதமான எண்ணம் கண்ணகிக்கு இருந்தது. அவ்வெண்ணம் கோவலன் மாதவிக்கு இல்லாத நிலை சூழ்நிலையால் ஏற்பட்டது போல் தோன்றுகிறது.

வாழ்த்துக் காதையிலும் புகாரின் பெருமையைப் பற்றி அம்மானைவரிப் பாடல்களின் வழி இளங்கோவடிகள் பாடுகிறார்.

அம்மானை வரி - மகளிர் கழங்கு (கழற்சிக் காய்) வைத்து ஆடும்போது பாடும் இசைப்பாடல்கள். ஒருத்தி கேள்வி கேட்க. மற்றொருத்தி விடை கூறுவதாக அமையும். சோழனையும், புகாரையும் போற்றிப் பாடும் பாடல்கள். அவை

எல்லா நாம்
காவிரி நாடனைப் பாடுதும், பாடுதும்
பூவிரி கூந்தல் புகார். (29–15)

தோழி நாம் காவிரி ஆற்றைப் பாதுகாக்கும் நாட்டையுடையவனாகிய சோழனைப் பாடுவோம் பாடுவோம், பூக்கள் மிகுந்த கூந்தலை யுடையவளே! புகார் நகரைப் பாடுவோம்.

வீங்குநீர் வேலிஉலகு ஆண்டு விண்ணவர் கோன்
ஓங்கு அரணம் காத்த உரவோன்யார் அம்மானை?
ஓங்கு அரணம் காத்த உரவோன் உயர் விசும்பில்
தூங்குஎயில் மூன்றுஎறிந்த சோழன்காண் அம்மானை;
சோழன் புகார் நகரம் பாடு ஏல்ஓர் அம்மானை. (29–16)

(தெ-ரை) கடலே வேலியாக உடைய இந்த நில உலகத்தை ஆண்டு, வானோர் தலைவனாகிய இந்திரனின் உயர்ந்த மதிலைக்காத்த வலிமையுடையோன் யார்? என ஒருத்தி கேட்க. மற்றவள் பதில் சொல்கிறாள். உயர்ந்த மதிலைக் காத்த வலிமையுடையோன், உயர்ந்த ஆகாயத்தில் தொங்கிக்

கொண்டிருந்த கோட்டைகள் மூன்றையும் அழித்த சோழன் காண், அத்தகைய சோழனின் புகார் நகரத்தைப் பாடுவோம், தோழி ஓர் அம்மானைப் பாட்டு.

*புறவுநிறை புக்குப் பொன்னுலகம் ஏத்தக்*
*குறைவுஇல் உடம்பு அரிந்தகொற்றவன் யார்? அம்மானை*
*குறைவுஇல் உடம்பு அரிந்த கொற்றவன் முன்வந்த*
*கறவை முறைசெய்த காவலன் காண் அம்மானை*
*காவலன் பூம்புகார் பாடுஏல்ஓர் அம்மானை* *(29–17)*

(தெ-ரை) புறாவைக் காத்தல் பொருட்டாக, வானுலகம் போற்றும் நிலையில் குறைவற்ற தனது உடம்பை அரிந்து கொடுத்த அரசன் யார்? அம்மானாய், குறைவில் உடம்பு அரிந்த கொற்றவனுக்கு முன்பு ஆட்சி செய்த, பசுவுக்கு முறைமையினைச் செய்த காவலன் காண், அம்மானாய், அவ்வசரனின் பொலிவுடைய புகாரைப் பாடுவோம் தோழி, ஓர் அம்மானைப் பாடல். இங்கு சிபிச் சக்கரவர்த்தி, மனுநீதிச் சோழன் கதை இரண்டும் சுட்டப்பெற்றுள்ளது. வழக்குரை காதையில் கண்ணகி இவற்றைச் சொன்னாள். இப்பாடல் இருவரும் ஒருவர் போல் கருதுமாறு அமைந்துள்ளது.

*கடவரைகள் ஓர்எட்டும் கண்இமையா காண*
*வடவரைமேல் வாள்வேங்கை ஒற்றினன் யார்? அம்மானை;*
*வடவரைமேல் வாள்வேங்கை ஒன்றினன் திக்கு எட்டும்*
*குடைநிழலில் கொண்டு அளித்த கொற்றவன் காண் அம்மானை;*
*கொற்றவன் பூம்புகார் பாடுஏல்ஓர் அம்மானை.* *(29–18)*

(தெ-ரை) மதம் பொழியும் எட்டுத் திசை யானைகளும், கண்இமையாமல் வியந்து வெருவிப் பார்த்து நிற்க, வடமலையாகிய இமய மலையில் நீண்ட புலிக் கொடியினைப் பொறித்தவன் யார்? அம்மானாய் - இமயமலையில் நீண்ட புலிக் கொடியைப் பொறித்தவன், எட்டுத் திசைகளையும் தன் குடைக்கீழ்க் கொண்டு வந்து, பாதுகாத்த மன்னனாவான் காண், அத்தகைய மன்னவன் வாழ்ந்த பொலிவுடைய புகார் நகரைப் பாடு, தோழி, ஓர் அம்மானைப் பாட்டால்.

*அம்மனை தம்கையில் கொண்டு அங்குஅணி இழையார்*
*தம்மனையில் பாடும்தகையேல் ஓர் அம்மானை*

தம்மனையில் பாடும் தகைஎலாம்தார்வேந்தன்
கொம்மை வரிமுலை மேல் கூடவே அம்மானை
கொம்மை வரிமுலை மேல்கூடின் குலவேந்தன்
அம்மென் புகார் நகரம் பாடுஏல்ஓர் அம்மானை (29–19)

(தெ-ரை) அம்மானைக் காய்களைத் தம் கையில் கொண்டு, அங்கு அணிகலன்களை அணிந்த மகளிர் தம் வீட்டிலிருந்து பாடும் சிறப்பெல்லாம் மாலை அணிந்த வேந்தன், தமது திரண்ட அழகுடைய தொய்யில் எழுதிய கொங்கையின்மேல்கிடந்து கூடுவதற்காகவே அம்மானாய், அவ்வாறு அவன், திரண்ட தொய்யில் எழுதிய முலைமேல் கூடினால், சோழர்குல அழகிய மென்மையான புகார் நகரைப் பாடு, தோழி, ஓர் அம்மானைப் பாட்டால்.

இங்கு, புகார் நகரம் பற்றிய எண்ணங்கள் பலருக்கும் பலவிதமாக அமைகின்றன. புகார் நகரில் நன்றாக வாழ்ந்து மதுரையில் துன்புற்று வஞ்சியில் தெய்வமானவள் கண்ணகி. அவளுக்குப் புகார் பிறந்த இடமாகப் பெருமையையும் பெருமிதத்தையும் தந்துள்ளது. கோவலன் புகாரில் வாழமுடியாத சூழல் ஏற்பட்டதால்தான் மதுரைசென்று பொருள் ஈட்டி வாழவிரும்புகிறான். காதலர்களுக்கு புகார் நகரம் துன்பமாக ஏமாற்றப்படும் நகரமாக இருந்திருக்கலாம். ஆனால் குறிக்கோள் உள்ளவர்களுக்கு அந்நகரம் சிறந்ததாகத் தோன்றுகிறது போலும்.

## முகமில் வரி

### கோவலன் பாடியவை

கூற்று - இது குறியிடத்துச் சென்ற பாங்கன் தலைமகளது காதன்மிகுதியைக் குறிப்பினான் அறிந்து கூறியது.

8. துறைமேய் வலம்புரி தோய்ந்து மணல் உழுத தோற்றம் மாய்வான்
பொறைமலி பூம்புன்னை பூ உதிர்ந்து நுண்தாது போர்க்கும் கானல்
நிறைமதி வாள் முகத்து நேர்கயல் கண் செய்த
உறைமலி உய்யாதோய் ஊர்சுணங்கு மென்முலையே தீர்க்கும்
போலும்.

(அ-ள்) வலம்புரி - வலம்புரிச் சங்கு, மாய்வான் - மறைய,

பொறைமலி - பாரம்மிக்க, கானல் - கடற்கரைச் சோலை, உறை- மருந்து, உய்யா - போக்கமுடியாத, ஊர் - ஊர்கின்ற, பரவுகின்ற, சுணங்கு - மார்பில் தேமல்போன்று அமையும் வேறுபாடு.

(தெ-ரை) முகமில்வரி என்பது முன்னுரை ஒன்றுமின்றிக் காதலின் முழுவடிவையும் கூறும் இசைப்பாட்டு. முகம் என்பது முன்னுரை என அமையும்.

கடற்கரைத் துறையில் வலம்புரிச் சங்குகள் ஊழுது மணலில் ஏற்படுத்திய கோடுகளையும் வடுக்களையும் அங்குள்ள பாரம் மலிந்த பூக்களையுடைய புன்னை மரங்களிலிருந்த பூக்களும், பூந்தாதுக்களும் விழுந்து மறைத்துப் போர்த்துள்ள கடற்கரைச் சோலை. அங்கு முழுமதி போன்ற ஒளியுடைய முகத்திலுள்ள கயல்மீன் போன்ற கண்கள் செய்த காமநோயை, மருந்துகளால் தீர்க்க முடியாத நோயை, அப்பெண்ணின் மார்பில் ஊர்ந்து பரந்துள்ள தேமல் போன்ற சுணங்கு தான் தீர்க்க முடியும் போலும் என்கிறான்.

மரபின்படி பாங்கன் தலைமகனிடம் தலைவியின் குறிப்பறிந்து கூறுவதாகக் கூறுவர்.

(வி-ரை) கோவலன் வேறொரு பெண்ணை விரும்பிப்பாடுவதாக அமைந்துள்ள பாடல்கள் இனிவரும் பாடல்கள். அவன் உள்ளத்தில் இருப்பவள் கண்ணகிதான். அவளை நினைத்துப் பாடுகிறான். மாதவி தன்னை விட்டு மற்றொரு பெண்ணை நினைத்து இவன் பாடுவதாகக் கருதுகிறாள்.

இதனைப் பாங்கன் அதாவது தோழன் தலைவியைக் கண்டு அவள் தன்மையை உணர்ந்து தலைவனிடம் கூறுவதால் பாங்கன் கூற்று எனக் கூறுவது உண்டு. ஆனால் தலைவன் கூற்றாகக் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது.

இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து. (குறள்– 1091)

பொதுநிலையில் தலைவியின் ஒருபார்வை நோயைத் தந்தும்

மற்றொரு பார்வை நோயை நீக்கியும் உதவும் என்பது பொதுக் கருத்து. இங்குத் தலைவியின் கயல் போன்ற கண்ணால் செய்த நோயை அவள் மார்புதான் தீர்க்கும் என்று தலைவன் கருதுகிறான்.

### கானல்வரி– கடற்கரைச் சோலை இசைப்பாட்டு

கூற்று - பாங்கன் தலைவியை வியத்தல் - என நம்பி அகப்பொருள் களவியல் 21 நூற்பாவிற்கும் இலக்கண விளக்கம் 505 நூற்பாவிற்கும் தக்கையாகப் பரணி 28 பாடல் உரையிலும் உரையாசிரியர்கள் இக்கூற்றைத் தருகின்றனர்.

9 நிணம் கொள் புலால் உணங்கல் நின்று புள் ஒப்புதல்
தலைக்கீடு ஆக
கணம் கொள் வண்டு ஆர்த்து உலாம் கன்னி நறு
ஞாழல் கையில் ஏந்தி
மணம் கமழ் பூங்கானல் மன்னி மற்று ஆண்டு ஓர்
அணங்கு உறையும்என்பது அறியேன், அறிவேனேல் அடையேன்
மன்னோ

(அ-ள்) நிணம் - தசை, உணங்கல் - வற்றல், ஓப்புதல் - விரட்டுதல், தலைக்கீடு - காரணமாகக் கற்பித்தல், ஆர்த்தும் - ஒலிக்கும், ஞாழல் - புலி நகக் கொன்றை, மன்னி - விரும்பி, அணங்கு - அழகால் வருத்தும் தெய்வம், உறையும் -தங்கும்.

(தெ-ரை) கொழுப்புப் பொருந்திய காயப்போட்டிருக்கின்ற புலால்வற்றலைப் பறவைகள் கொத்தித் தின்ன வருகின்றன. அப்பறவைகளை விரட்டுவதாகப் போலிக் காரணம் காட்டி கையில் புலிநகக் கொன்றை மலர்களை ஏந்திக்கொண்டு நிற்கின்றாள் ஒரு அணங்கு. அஞ்ஞாழல் மலர்களைச் சுற்றி வண்டுகள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அத்தகைய மணம் பொருந்திய கடற்கரைச் சோலையில் அச்சுறுத்தும் அணங்கு நிற்பதறிந்திருந்தால், அங்குச் சென்றிருக்க மாட்டேன். முன் கூட்டி நான் அறியேன், அதனால் அங்குச் சென்றேன் என்கிறான் தலைவன்.

துறை - இப்பாடல் இயல் இடம் கூறல் என்பதாக இறையனார் களவியல் 3 நூற்பாவிற்கு உரையாசிரியர் தருகிறார்.

10 வலைவாழ்நர் சேரி வலை உணங்கு முன்றில் மலர்கை ஏந்தி
விலைமீன் உணங்கல் பொருட்டாக வேண்டு உருவம் கொண்டு வேறுஓர்
கொலைவேல் நெடும் கண்கொடும் கூற்றம் வாழ்வது
அலை நீர்த் தண் கானல் அறியேன் அறிவேனேல் அடையேன் மன்னோ.

(அ-ள்)சேரி - மக்கள் சேர்ந்திருக்கும் இடம். இங்குப் பரதவர் சேரி, வலை - மீன்பிடிக்கும் வலை, உணங்கு - காயும், கூற்றம் - எமன்.

(தெ-ரை) மீன்பிடிக்கும் வலை வளத்தால் வாழ்கின்ற பரதவர் சேரியில் வலையையும் மீன் வற்றலையும் உலரப் போட்டிருக்கின்ற முற்றத்தில், மலரைக் கையில் ஏந்தி கொடிய கூற்றம் தன் வடிவத்தை மாற்றிக்கொண்டு தான் விரும்பும்பெண் வடிவத்தை எடுத்து கொலை புரியும் வேல் போன்ற நீண்ட கண்களையும் கொண்டு இக்கடற்கரைச் சோலையில் வாழ்வதை நான் முன்பு அறிய மாட்டேன். அறிந்திருந்தால் அப்பகுதிக்குச் சென்றிருக்க மாட்டேன் என்கிறான் தலைவன்.

## திணைநிலை வரி

### மாதவிபாடியவை

இதற்குப் பதிலாக மாதவி திணைநிலைவரி என்ற நிலையில் ஆறுபாடல்களைப் பாடுகின்றாள்.

31 புணர்துணையோடு ஆடும் பொறி அலவன் நோக்கி
இணர்ததையும் பூங்கானல் என்னையும் நோக்கி
உணர்வு ஒழியப் போனஒலிதிரை நீர்ச்சேர்ப்பன்
வணர்சுரி ஐம்பாலோய்! வண்ணம் உணரேனால்.

(அ-ள்) அலவன் - நண்டு, இணர் -பூங்கொத்து, ததையும் - நெருங்கி இருக்கும், உணர்வு - தன்னிலை, சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன். வணர் - வளைவு, சுரி - சுருண்ட , ஐம்பால் - கூந்தலை ஐந்து பிரிவாகப் பின்னிக் கட்டுதல்.

(தெ-ரை)கடற்கரையில் தன் துணையோடு கலந்த, புள்ளிகளையுடைய நண்டினையும் பார்த்து, பூங்கொத்துக்கள்

செறிந்த கடற்கரைச் சோலையையும், என்னையும் பார்த்து, தன் நிலை தளர்ந்து போன, ஒலிக்கும் அலைகளையுடைய கடற்கரைத் தலைவனின், மனத்தியல்பினை, கடைகுழன்ற சுருண்ட ஐம்பிரிவுகளாகப் பகுத்த கூந்தலையுடையவளே நாம் உணர இயலவில்லை.

(வி-ரை) தலைவியோடு கூடும் விருப்பத்தினை, புணர்ந்த நண்டையும், அதற்குரிய இடமாகிய சோலையையும் பார்த்து குறிப்பால் உணர்த்துகிறான் தலைவன்.

**32 தம்முடைய தண்ணளியும் தாமும் தம் மான் தேரும்**
**எம்மை நினையாது விட்டாரோ? விட்டு அகல்க**
**அம்மென் இணர அடும்புகாள்! அன்னங்காள்!**
**நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்!**

(அ-ள்) தண் - குளிர்ச்சி, அளி - அன்பு, அருள்; மான் - குதிரை, இணர - கொத்துக்களையுடைய; அடும்பு - அடும்பங்கொடி.

(தெ-ரை) பல நாட்களாக வந்து சென்ற தலைவன், இப்போது சில நாட்களாக வரவில்லை. அவன் குளிர்ச்சி பொருந்திய பெரும்கருணையையும், விரைவாகச் செல்லும் குதிரையையும் தேரினையும், எம்மை நினைக்காமல் மறந்து விட்டு விட்டான் போலும், போகட்டும், மென்மையான கொத்துக்களையுடைய அடும்புக் கொடிகளே! அன்னங்களே! "அவர் நம்மை மறந்தாலும், நாம் அவரை மறக்க மாட்டோம்" என்கிறாள்.

(வி-ரை) அவர்கள் இருவரின் சேர்க்கையையும் அறிந்தவை அடும்புக் கொடிகள், அன்னங்கள் போன்ற அஃறிணைப் பொருள்களே. தன் காதல் மிகுதியால் அவற்றிடம் பேசுகிறாள். இதைக் 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்பர்.

(சி-பு) கடைசி வரியில் நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டேமால் என்பது மிகப் பெரிய பண்பாட்டை உணர்த்துகிறது. தலைவியைத் தலைவன் மறந்தாலும் தலைவி தலைவனை மறக்கமாட்டாள் என்பது தெளிவுபடுத்தப் படுகிறது.

நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்!
எம்மை மறந்தாரை யாம் மறக்க மாட்டேமால்!

நம்மை என்பதற்கு எம்மை என்றும் நாம் என்பதற்கு யாம் என்றும் பாடவேறுபாடு தி.க. சுப்பராயச் செட்டியார் (1880). புகார்க் காண்டப் பதிப்பில் உள்ளது. இதுவே பொருந்தும். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் நம்மை நாம் போன்ற சொல் வடிவங்கள் பிற்காலத்தன என்று கூறி, சிலம்பின் காலத்தைப் பின்னுக்குத் தள்ளுவதற்கு ஒரு காரணமாகக் கூறுகிறார். ஆனால் சிலப்பதிகாரக் கால வடிவமாக எம்மை, யாம் போன்ற வடிவங்கள் இருந்தன என்று கொள்வது பொருத்தமாக அமையும்.

33 புன்கண் கூர் மாலைப் புலம்பும் என் கண்ணே போல்
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள் வாய் நெய்தால்! நீ எய்தும் கனவினுள்
வன்கணார் கானல் வரக் கண்டுஅறிதியோ!

(அ-ள்) புன்கண்- துன்பம், நோய், அச்சம்; மாலை - மாலைப் பொழுது, புலம்பும் - வருந்தும், உழவாய் - உறுதலால்; துயில் - தூக்கம்; நெய்தல் - நெய்தல் நில மலர், வன்கணார் - கொடுமையுடையோர்.

(தெ-ரை) பெண்கள் கண்களைப் போன்றிருக்கும் நெய்தல் மலரைப் பார்த்துப் பேசுகின்றாள் தலைவி. இனிய தேனையுடைய நெய்தல் மலரே! மிகுந்த துன்பத்தைத் தருகின்ற இம் மாலைப் பொழுதில் என் கண்கள் அவரை நினைத்துப் புலம்புகின்றன. தூக்கம் வரவில்லை. நீ தூங்குகின்றாய், அவ்வாறு தூங்கும்போது உன் கனவில், கொடிய தன்மையுடைய எம் காதலர், வருகின்றாரா? சொல்க என்கிறாள்.

(வி-ரை) காதலன் பிரிவால், தலைவிக்குத்தூக்கமில்லை. தூங்கினால்தானே கனவு வரும். கனவில் அவனைக் காண முடியும். தன்னால் கனவிலும் காணமுடியாத தலைவனைத் தன்னோடு வாழ்கின்ற நெய்தல் மலராவது கண்டால் போதும் என நினைத்துத் தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றாள்.

(சி-பு) மனிதர்கள், பறவைகள் விலங்குகள் கனவு காண்பதாகக்

கூறுவது பொது மரபு, இயல்பும் கூட. ஆனால் மலர் கனவு காண்பதாகக் கற்பனை செய்தலே வியப்பாக உள்ளது. (பார்க்க இலக்கியக் கனவுகள். - ச.வே. சுப்பிரமணியன்.)

**34** புள்இயல் மான் தேர் ஆழி போன வழி எல்லாம்
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய் மற்று என் செய்கோ?
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய் மற்று எம்மோடு ஈங்கு
உள்ளாரோடு உள்ளாய் உணராய், மற்று என் செய்கோ?

(அ-ள்) புள் - பறவை, இயல் - தன்மை, தெள்ளுநீர் - தெளிந்த நீர், ஓதம் - அலைகள்.

(தெ-ரை) பறவை போல் வேகமாகச் செல்கின்ற குதிரைகளையுடைய தேர் உருளைகள் போன சுவடுகளை எல்லாம், தெளிந்த நீரையுடைய அலைகள் பொருந்திய கடலே நீ அழித்தாய், நாங்கள் என்ன செய்ய முடியும்? அவ்வாறு சிதைத்த நீ, எம்மோடு இருக்கின்றாய், எம் பிரிவுத் துன்பத்தையும் நீ உணராய்? நாங்கள் என்ன செய்ய முடியும்?

(வி-ரை) அவர் சென்ற தேர்ச் சுவடுகளை அழித்து விட்டாய், எங்கள் நினைவுச் சுவடுகளை எங்களால் அழிக்க முடியவில்லையே என்ன செய்வது? என்று ஏங்குகிறாள் தலைவி.

35 நேர்ந்த நம் காதலர் நேமிநெடும் திண்தேர்
ஊர்ந்த வழி சிதைய ஊர்கின்ற ஓதமே!
பூந்தண்பொழிலே! புணர்ந்து ஆடும் அன்னமே!
ஈர்ந்தண் துறையே! இது தகாது என்னீரே.

(அ-ள்) நேமி - சக்கரம், ஓதம் - அலை, பொழில் - சோலை, தண் - குளிர்ச்சி

(தெ-ரை) முன்பு அன்பைச் செலுத்திய நம் காதலரிடம், உருள்களையுடைய நெடிய திண்மையான தேர் சென்ற வழிகளை எல்லாம் சிதைத்து ஊர்ந்த கடல்அலையே! பூக்கள் மலிந்த் கடற்கரைச் சோலையே! துணையுடன் கூடி விளையாடுகின்ற அன்னமே! குளிர்ச்சி பொருந்திய நீர்த் துறையே! உங்களில் யாராவது ஒருவர் கூட தலைவர் செய்கின்ற செயல் முறையற்றது என்பதைக் கூறவில்லையே!

(வி-ரை) தலைவனோடு கூடிய காலத்தில் உடனிருந்தவை அலை, பொழில், அன்னம், கடற்றுறை இவை எல்லாம் அன்று ஒன்றாக இருந்ததால் இன்று அவன் பிழையைத் தட்டிக் கேட்கவில்லையே என நினைக்கின்றாள்.

36 நேர்ந்த நம் காதலர் நேமிநெடும் திண்தேர்
ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய் வாழி கடல் ஓதம்
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய் மற்று எம்மோடு
தீர்ந்தாய் போல் தீர்ந்திலையால் வாழி கடல் ஓதம்.

(அ-ள்) நேர்ந்த - இணைந்த, பொருந்திய, தீர்தல் - முடிதல்.

(தெ-ரை) நம்மோடு கூடிய காதலரது, உருள்களையுடைய நீண்ட, திண்மையான தேர் போன சுவடுகளை எல்லாம் சிதையும் நிலையில் நீ ஊர்ந்தாய் கடல் அலையே! நீ வாழ்க, இவ்வாறு சுவடுகளைச் சிதைத்த நீ எம்மோடு உறவு நிலையில் தீர்ந்தாய், ஆனால் நீ தீரவில்லை, இயங்கிக் கொண்டிருக்கிறாய் நீ வாழ்வாயாக.

(வி-ரை) கடல் அலைகள் என்றும் இருக்கும். இவள் நினைவலைகளும் என்றும் இருக்கும். ஆயின் அலைகள் தலைவன் தேர்ச்சுவடுகளைச் சிதைத்ததால், அலையும் சிதையட்டுமே என்று தலைவி நினைப்பது போல் பாடல் உள்ளது.

கோவலன் கண்ணகியை நினைந்தே எல்லாப் பாடல்களையும் பாடுகிறான். அதில் ஐயமே இல்லை. கண்ணகியின் நினைவாகவே கோவலன் இருக்கிறான்.

இங்கு, கடற்கரைச் சோலையில் இருக்கின்ற தலைவி ஞாழல் மலரைக் கையில் ஏந்தி நிற்கின்றாள். மனையறம் படுத்த காதையின் கண்ணகி தன் மலர்க் கையில் கிளியை ஏந்தி நிற்கின்ற காட்சி அவனுக்கு நினைவுக்கு வருகிறது. அக்காட்சியை இங்கே கோவலன் நினைக்கிறான்.

"அளிய தாமே சிறுபசுங் கிளியே
- - - - - - - - - - . . - - . - - - -
மடநடை மாது நின் மலர்க்கையில் நீங்காது
உடன்உறைவு மரீஇ ஒருவா ஆயின" (2–57,61)

மூன்றாவது பாடலில் கொலைவேல் நெடுங்கண் கொடுங்கூற்றம் என்ற தொடர், அவன் மனையறம் படுத்த காதையில் கண்ணகியை. புகழும் போது கூறியதுடன் ஒப்பிடத்தக்கது.

*"அறுமுக ஒருவன்ஓர் பெறுமுறை யின்றியும்*
*இறுமுறை காணும் இயல்பினின் அன்றே*
*அஞ்சுடர் நெடுவேல் ஒன்றுநின் முகத்துச்*
*செங்கடை மழைக்கண் இரண்டா வீத்தது" **(2–49–52)***

பாடலில் கொலை வேல் நெடுங்கண் என்பது ஐஞ்சுடர் நெடுவேல் என்று முன்பு கூறியதை நினைவுகொண்டு கூறியதாகக் கொள்ளலாம். முருகனின் வேல் போன்ற கண்கள் என்று கண்ணகி கண்களை மனையறம் படுத்தகாதையில் கூறினான்.. அதை வேல் நெடுங்கண் என்று இங்கே கூறுகிறான்.

மாதவி கோவலனையே நினைத்துப் பாடுவதாகக் கொள்ளலாம், அதில் தவறு இல்லை. இவன் பிறர் ஒருவரை நினைத்துப் பாடியதாக நினைக்கிறாள். மாதவி பாடிய திணைநிலை வரிப்பாடல்கள் அனைத்தும் 'காமம் மிக்க கழி படர்கிளவி' என்ற நிலையில், தான் தலைவன் மேல் கொண்ட அன்பை நினைத்துத் துடிக்கின்ற துடிப்பு அப்பாடல்களில் தெரிகிறது. மாதவி கோவலன் தன்னை மறந்துவிடுவானோ என்ற எண்ணம் ஏற்படுவதால்தான் எம்மை மறந்தாரை யாம் மறக்கமாட்டேமால் என்று பேசுகிறாள்.

கோவலன், காதலன், மிக வசதியுடையவன் என்பதை அவன் குதிரை - தேரில் வந்து செல்லுகின்ற நிலையில் இருந்தே நாம் அறிகிறோம். அது கோவலனைக் குறித்ததாக இருக்கலாம். ஆனால் காதலர் இருவரும் கருத்தொருமித்து இணைந்தபோது கடற்கரைச் சோலையில் உள்ள சுற்றுப் புறப்பொருள்கள் அனைத்தும் அவளோடே இருக்கின்றன. அவனுடைய எண்ணங்கள் அவள் உள்ளத்தைத் துன்புறுத்துவதற்குக் காரணம் அவன் தேர் சென்ற வழிஎல்லாம் சுவடு தெரியாமல் திரை அலைகள் அழித்துவிட்டன. தன் உள்ளத்தில் அவன் எண்ணங்களை அழிக்கமுடியவில்லையே என்று ஏங்குகிறாள். தலைவி.

## நிலைவரி

### கோவலன் பாடியவை

கூற்று - கீழ்வரும் 3 பாடல்களும் தமியளாக இடத்தெதிர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைமகன் கூறியவை.

11 கயல் எழுதி வில் எழுதிக் கார் எழுதிக் காமன்
செயல் எழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர்!
திங்களோ காணீர்! திமில் வாழ்நர் சீறு ஊர்க்கே
அம்கண் ஏர் வானத்து அரவு அஞ்சி வாழ்வதுவே

(அ-ள்) கார் - மேகம், காமன் - மன்மதன், திங்கள், சந்திரன், திமில் - மீன் பிடிபடகு; ஏர் -அழகு; அரவு - பாம்பு.

(தெ-ரை) முழுமதி போன்ற முகமுடையவள் அப்பெண். அம் முகத்தில் கண்களாகக் கயலை எழுதியும், புருவங்களாக வில்லை எழுதியும், கூந்தலாக மேகத்தை எழுதியும், பிறரை வருத்தும் தொழிலைச் செய்கின்ற காமன் செயலையும் அம் முகத்தில் எழுதியும், குறைவற்ற அழகுடைய அம் முகம் திங்கள்தானோ! திங்கள் எவ்வாறு விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்தது என்று வியக்கின்றான். அழகிய இடமகன்ற வானத்தில் வாழ்கின்ற அரவு தன்னை விழுங்கிவிடும் என்று அஞ்சி மீன்பிடி படகாகிய திமிலைக் கொண்டு வாழ்கின்ற, இச்சிறப்புடைய சிற்றூருக்கு வந்து வாழ்கின்றது போலும் என்கிறான்.

(வி-ரை) இப்பாடல் உருவகத்தில் அமைந்துள்ளமை, உவமானப் பொருள்களைக் கூறி, உவமேயத்தைக் கூறாத நிலை, எண்ணி மகிழத்தக்கது.

இளங்கோவடிகள் ஓவியர் என்பதையும் எழுதி என்ற சொல் காட்டுகிறது.

12 எறிவளைகள் ஆர்ப்ப, இருமருங்கும் ஓடும்
கறைகெழு வேல்கண்ணோ கடும் கூற்றம் காணீர்!
கடும் கூற்றம் காணீர்– கடல் வாழ்நர் சீறூர்க்கே
மடம்கெழு மென்சாயல் மகளா யதுவே.

(அ-ள்) வளைகள் - சங்குகள், ஆர்ப்ப - ஒலிக்க, முழங்க, கறை இரத்தக்கறை, கூற்றம் - எமன், மடம்- பெண்களுக்குரிய

இயல்பான பண்பு,

(தெ-ரை) கடல் அலைகளால் எறியப்படுகின்ற சங்குகள் முழங்க, அதைக் கண்டு அச்சங்கொண்டு, இரு பக்கங்களிலும் ஓடுகின்ற ஏற்கெனவே பலரைக் கொன்று குருதிக் கறைபொருந்திய வேல் கண்களையுடைய கொடும் தொழில் செய்கின்ற கூற்றம், கடல் வளத்தால் வாழ்கின்ற, இச் சிறப்புப் பொருந்திய சிறிய ஊருக்கு, மடப்பம் உடைய மென்மையான சாயலையுடைய பெண்ணாக வந்துள்ளதோ! என வியக்கின்றான்.

13 புலவுமீன் வெள் உணங்கல் புள் ஓப்பிக் கண்டார்க்கு
அலவ நோய் செய்யும் அணங்கு இதுவோ காணீர்!
அணங்கு இதுவோ காணீர் அடும்பு அமர் தண்கானல்
பிணங்குநேர் ஐம்பால் ஓர் பெண் கொண்டதுவே.

(அ-ள்) புலவு - புலால் நாற்றம், வெள் - வெண்மையான உப்பு, உணங்கல் - வற்றல், அலவு - மனத் தடுமாற்றம், அணங்கு - கண்டாரை வருத்தும் தன்மை, அடும்பு -அடும்பங்கொடி, பிணங்கு - செறிதல்,பின்னுதல், மாறுபடுதல்.

(வி-ரை) புலால் நாறுகின்ற மீன் உப்புக் கண்டத்தைக் கொத்தித்தின்ன வரும் பறவைகளை ஓட்டிக் கண்டவரை மனந்தடுமாறச் செய்கின்ற நோயைத் தரும் அணங்கு தானோ! அடும்பு மலர்கள் பொருந்திய தண்மையான கடற்கரைச் சோலையில், செறிவுள்ள கூந்தலை ஐவகையாகப் பிரித்துக் கட்டியுள்ள பெண்ணாக நிற்பது என்று பேசுகின்றான்.

இரண்டாம் அடி இறுதிச்சீர்கள் மூன்றாம் அடிமுதற்சீர்களாக வந்த மடக்கு, அந்தாதி மடக்கு.

## மயங்கு திணை நிலை வரி

### மாதவி பாடியவை

37 நன் நித்திலத்தின் பூண் அணிந்து நலம் சார் பவளக் கலைஉடுத்து
செந்நெல் பழனக் கழனிதொறும் திரை உலாவு கடல் சேர்ப்ப
புன்னைப் பொதும்பர் மகரத் திண் கொடியோன் எய்த புதுப்புண்கள்
என்னைக் காணா வகை மறைத்தால் அன்னை காணின்
என்செய்கோ?

(அ-ள்) நித்திலம் - முத்து, பூண் - ஆபரணங்கள், கலை - ஆடை, பழனம் - வயல், பொய்கை; கழனி - வயல், சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன். பொதும்பர் - சோலை, மகரத்திண் கொடியோன் - மீன்கொடியையுடைய மன்மதன்.

(தெ-ரை) நல்ல முத்துக்களாகிய ஆபரணங்களை அணிந்தும், சிறந்த பவளத்தாலாய இடையணியை உடுத்தும், செம்மையான நெல் பயிர்களையுடைய வயல்களில் அலைகள் உலவும் கடற்க்ரைத் தலைவனே! புன்னை மரச் சோலையில் மகரமீன் கொடியையுடையவனாகிய மன்மதனால் ஏற்பட்ட புதிய புண்கள், என்னை அடையாளம் தெரியாதபடி என் அழகைக் குலைத்ததை என் தாய் அறிந்தால் நான் என் செய்வேன்?

38 வாரித் தரள நகைசெய்து வண்செம்பவள வாய் மலர்ந்து
சேரிப் பரதர் வலை முன்றில் திரை உலாவு கடல் சேர்ப்ப!
மாரிப் பீரத்து அலர் வண்ணம் மடவாள் கொள்ளக் கடவுள்
வரைந்து
ஆர்இக் கொடுமை செய்தார்? என்று அன்னை அறியின்
என்செய்கோ

(அ-ள்) வாரி - கடல்; தரளம் - முத்து; நகைசெய்து - பற்கள் தெரியச் சிரித்து; சேரி - மக்கள் சேர்ந்திருக்கும் இடம்; மாரி - மாரிக்காலம்; பீரம் - பீர்க்கம் பூ; அலர் - மலர்.

(தெ-ரை) கடல் முத்துப் போன்ற பற்கள் தெரியச் சிரித்து, அழகிய செம்பவளம் போன்ற வாயைத் திறந்து, பரதர் சேரியில் மீன்வலையுடைய முற்றத்தில், அலைகள் உலா வருகின்ற கடல்தலைவனே! மாரிக் காலத்து மலரும் பீர்க்கம் பூப்போன்ற நிறத்தை மடமுடையவள் கொள்ள, தெய்வத்தை வேண்டி, ஆர்இந்த நிறவேறுபாட்டுக் கொடுமையைச் செய்தனர் என்று அன்னை அறிந்தால் நான் என் செய்வேன்?

39 புலவுற்று இரங்கி அது நீங்க, பொழில் தண்டலையில் புகுந்து
உதிர்ந்து
கலவைச் செம்மல் மணம் கமழத்திரை உலாவு கடல் சேர்ப்ப!
பலஉற்று ஒரு நோய் துணியாத படர் நோய் மடவாள் தனி உழப்ப
அலவுற்று இரங்கிஅறியாநோய் அன்னை அறியின் என்செய்கோ?

(அ-ள்) புலவுற்று - புலால் நாற்றம், அதிகமாகி; பொழில் - சோலை; தண்டலை - குளிர்ந்த சோலை; செம்மல் - பழம்பூக்கள்; படர்- மிகுதியான; அலவு - மனத் தடுமாற்றம்.

(தெ-ரை) கடற்கரையில் புலால் நாற்றம் அதிகமானதற்காக வருந்தி, அந்நாற்றம் நீங்க பொழில்களிலும், சோலைகளிலும் உதிர்ந்து கிடக்கின்ற பழம் பூக்களின் கலவைகளைக் கொணர்ந்து, மணம் கமழச் செய்யும் திரைகள் உலவுகின்ற கடல் தலைவனே! பல துன்பங்களையும் அனுபவிப்பதால், இன்ன நோய் என்று துணிய இயலாத படர்கின்ற காமநோயால், மடப்பமுடையவள், தனியாக வருந்த, மெலிதலாலும், இரங்குதலாலும், இவள் நோய் எதுவெனப் பிறர் அறியப்படாத நிலையில், தாய் அறிந்தால், நான் என் செய்வேன்?

(வி-ரை) கோவலன் சிறந்த கலைஞன் இசைதெரியும், கூத்தும் தெரியும், அவனுக்கு ஓவியமும் தெரியும் என்பதனை அவன் பாடிய முதல் பாடல் காட்டுகிறது. தன்னுடைய உள்ளக்கிழியில் கண்ணகியின் உருவத்தை எப்போதும் எழுதிவைத் திருந்திருக்கின்றான். அந்த வண்ணக் கண்ணகியை நெய்தல் நிலப் பெண்ணாக வருணிக்கிறான்.

இளங்கோவடிகளுக்குப் பெண்மைமீது மிகுதியான பற்றுஇருந்த காரணத்தால் தான் பெண்மையைத் திண்மையாக்கிக் கடவுள் நிலை எய்தச் செய்கிறார். வாழ்க்கை நிலையில் சூரிய கிரகணம், சந்திர கிரகணம் என்று நாம் கூறுவது இயற்கைநிலையில் பூமி சூரியனையும் சந்திரனையும் சுற்றிவரும்போது ஏற்படுகின்ற இருட்டும் ஒளியும்தான் அதைப் புராண அமைப்பில் சந்திரனை விழுங்குகின்ற பாம்பு வானத்தில் இருப்பதாக ஒரு கதை. அதனால் வானத்தில் இருக்கின்ற பாம்பிற்கு அஞ்சி சந்திரன் பூமிக்கு வந்து விட்டதோ என்று வியக்கிறான். கோவலன். இதை இளங்கோவடிகள் முன்பே கூறியுள்ளார்.

கருமுகில் சுமந்து குறுமுயல் ஒழித்தாங்கு
இருகரும் கயலோடு இடைக்குமிழ் எழுதி

அங்கண் வானத்து அரவுப் பகை அஞ்சித்
திங்களும் ஈண்டுத் திரிதலும் உண்டுகொல் (5–204– 207)

## முரிவரி

### கோவலன் பாடியவை

"எடுத்த இயலும் இசையும் தம்மில்,
முரித்துப் பாடுதல் முரியெனப் படுமே" – அரும்பத உரையாசிரியர்.

கூற்று - தலைவன், தன் தோழனிடம் தனக்குத் துன்பம் தந்த பெண்ணைப் பற்றிக் கூறுதல். - பாங்கன் கேட்ப தலைமகன் உற்றது உரைத்தவையும் ஆம்.

14 பெழில்தரு நறு மலரே, புதுமணம் விரிமணலே
பழுதுஅறு திருமொழியே, பணை இளவன முலையே
முழுமதி புரை முகமே, முரி புரு வில் இணையே
எழுத அரும் மின் இடையே எனை இடர் செய்தவையே.

(அ-ள்) பொழில் -சோலை, பழுது - குற்றம், பணை - பருத்த, புரை - போன்ற, முரி - வளைந்த, இடர் - துன்பம்,

(தெ-ரை) பொழில் தரும் மணம் பொருந்திய மலர்கள், புதுமணம் தரும் விரிந்த மணல், குற்றமற்ற இனிமையான சொற்கள், பருத்த இளமையுடைய அழகான முலைகள், முழுமதி போன்ற முகம், வளைந்த வில் போன்ற இணைப் புருவங்கள், எழுதுதற்கரிய மின்னல் போன்ற நுண்மையான இடை, இவை எனக்குத் துன்பத்தைத் தந்தன.

(வி-ரை) கடந்த பாடல்களில் முகத்தை மட்டும் வருணித்தான். இப்போது முகம், மார்பு, இடை இவைகளை வர்ணிக்கின்றான். அவளிடம் பேசுகிறான். அதனால்தான் அவளது குற்றமற்ற இனிய சொற்களையும் கேட்கின்றான்.

15 திரைவிரி த்ருதுறையே, திருமணல் விரி இடமே
விரைவிரி நறுமலரே, மிடைதரு பொழில் இடமே
மருவிரி புரிகுழலே, மதிபுரை திருமுகமே
இருகயல் இணைவிழியே, எனை இடர் செய்தவையே,

(அ-ள்) திரை- அலை, விரை - மணம், மிடை - கலந்த, மரு - மணம், புரை - போன்ற.

(தெ-ரை) அலைகள் பரந்த நீர்த்துறை, அழகிய மணல் பரந்த கடற்கரை, மணம் விரித்த நறுமலர்கள், நெருங்கிய மரங்களையுடைய சோலை, மணம் பொருந்திய கடைகுழன்ற கூந்தல், முழுமதி போன்ற அழகிய முகம். இரட்டைக் கயல்கள் போன்ற இணை விழிகள் இவையே என்னைத் துன்புறச் செய்தன.

16 வளைவளர் தருதுறையே, மணம் விரிதருபொழிலே
தளை அவிழ் நறுமலரே, தனிஅவள் திரிஇடமே
முளை வளர் இளநகையே, முழுமதி புரை முகமே
இளையவள் இணைமுலையே எனை இடர் செய்தவையே,

(அ-ள்) வளை. சங்கு, தளை - கட்டு, முளை - குருத்து.

(தெ-ரை) சங்குகள் வளர்கின்ற நீர்த்துறையும், மணம் பரப்புகின்ற கடற்கரைச் சோலையும், முறுக்கு அவிழ்ந்த மணமலர்களும், ஒப்பற்ற அவள் திரிகின்ற இடமும், முளை போன்ற இளமையான பற்களும், முழுமதி போன்ற நிறைமுகமும், இளையவளின் இணைந்த இள முலைகளும் என்னைத் துன்புறுத்தின.

தலைவன் தலைவியைக் கூடிய பின்பு பாடிய பாடல்

17 கடல்புக்கு உயிர் கொன்று வாழ்வர் நின் ஐயர்
உடல்புக்கு உயிர் கொன்று வாழ்வைமன் நீயும்
மிடல்புக்கு அடங்காத வெம்முலையோ பாரம்
இடர்புக்கு இடுகும் இடை இழவல் கண்டாய்.

(அ-ள்) ஐயர் - தலைவர், தமையன்மாரும் தந்தையும் உட்படும், மிடல் - வலிமை, இடர் - துன்பம் இடுகும் - வருந்தும்

(தெ-ரை) கடலில் புகுந்து அங்கு வாழ்கின்ற உயிரினங்களைக் கொன்று வாழ்கின்றவர் நின் தந்தை, தமையன்மார். உடல்புக்கு என் உயிர்கொன்று வாழ்கின்றாய், நீயும். வலிமையில் புகுந்து அடங்காத உன் வெவ்விய முலைகளின் பாரத்தால், துன்புற்று வருந்தும் உன்இடையை இழந்து விடாதே என்கிறான்.

18 கொடும்கண் வலையால் உயிர் கொல்வான் நுந்தை
நெடும் கண் வலையால் உயிர் கொல்வை மன் நீயும்
வடம் கொள் முலையால் மழை மின்னுப் போல
நுடங்கி உகும் மென் நுசுப்பு இழவல் கண்டாய்.

(அ-ள்) கொடும் - கொடுமை, நுந்தை - உன்தந்தை, நுடங்கி - அசைந்து, நுசுப்பு - இடை

(தெ-ரை) கொடுமையான கண்களையுடைய மீன் பிடிக்கும் வலையால் உயிர்களைக் கொல்வான் உன் தந்தை, நீண்ட கண்களின் வலையால் என் உயிரைக் கொல்வாய் நீயும், முத்து வடம் தாங்கியுள்ள உன் முலைகளால், மேகத்தில் தோன்றும் மின்னலைப் போன்று ஒசிந்து அசையும் மேன்மையான இடையை இழந்து விடாதே!

19 ஓடும் திமில் கொண்டு உயிர் கொல்வர் நின் ஐயர்
கோடும் புருவத்து உயிர் கொல்வை மன் நீயும்
பீடும் பிறர் எவ்வம் பாராய், முலை சுமந்து
வாடும் சிறுமென் மருங்கு இழவல் கண்டாய்.

(அ-ள்) திமில் - மீன்பிடிபடகு, கோடும்- வளையும், வளைந்த, பீடு - வலிமை, எவ்வம்-துன்பம், மருங்கு -இடை.

(தெ-ரை) கடலில் ஓடும் படகினைத் துணையாகக் கொண்டு உயிர் கொல்வர் நின் மூத்தோர். வளைந்த புருவத்தின் துணை கொண்டு என் உயிரைக் கொல்வாய் நீயும். நினது பெருமையினையும் பிறர் படும் துன்பத்தினையும் நீ பாராய். முலைகளைச் சுமந்து வாடுகின்ற உனது மென்மையான சிறிய இடையை இழந்து விடாதே!.

### மாலைக் காலத்தால் ஏற்பட்ட துன்பத்தைப் பாடியவை

#### மாதவி பாடியவை

40 இளைஇருள் பரந்ததுவே எல் செய்வான் மறைந்தனனே
களைவு அரும் புலம்புநீர் கண்பொழீஇ உகுத்தனவே
தளை அவிழ் மலர்க்குழலாய் தணந்தார் நாட்டு உளதாம்கொல்
வளை நெகிழ எரி சிந்தி வந்த இம்மருள் மாலை.

(அ-ள்) இளை - இளமையான, எல்-ஒளி, களைவு- நீக்குதல், புலம்பு - துன்பம், தளை - கட்டு, தணந்தார் - பிரிந்தார், வளை - வளையல், எரி - நெருப்பு, மருள்- மயக்கம்

(தெ-ரை) மாலைக் காலத்தில் இளமையான இருள் எங்கும் பரவ பகல் செய்கின்றவனாகிய கதிரவன் மறைந்து விட்டான்.

போக்குவதற்கரிய வருத்தத்தால் கண்கள் நீரைச் சொரிகின்றன. மொட்டவிழ்ந்த, மலர்களைச் சூடியுள்ள கூந்தலையுடைய தோழியே! பிரிந்தவர் நாட்டிலும், நம் வளைகள் நெகிழ, நெருப்பினைச் சிந்தி வருகின்ற இந்த மயக்கம் பொருந்திய மாலைக்காலம் இருக்குமல்லவா?

*(வி-ரை)* இங்கு எல்செய்வான் என்பது மாதவிக்கு ஒளியைத் தந்த- வாழ்க்கையைத் தந்த கோவலனைக் குறிக்கிறது. ஏற்கெனவே முன்பு சுட்டினோம் கதிரவன் என்ற குறியீடு கோவலனைக் குறிக்கிறது என. இங்கும் அதேநிலைதான்.

**41** கதிரவன் மறைந்தனனே கார் இருள் பரந்ததுவே,
எதிர்மலர் புரை உண்கண் எவ்வ நீர் உகுத்தனவே,
புதுமதி புரைமுகத்தாய்! போனார் நாட்டு உளதாம் கொல்
மதி உமிழ்ந்து கதிர் விழுங்கி வந்த இம்மருள் மாலை

*(அ-ள்)* கார் - கரிய, புரை -போன்ற, உண்கண் - மையுண்ட கண்கள். எவ்வம்- துன்பம், மருள் - மயக்கம்,

*(தெ-ரை)* சூரியன் மறைந்து விட்டான், கரிய இருள் எங்கும் பரவியது, கண் மேலிதழ் ஒரு மலராகவும், கீழ் இதழ் ஒரு மலராகவும், உள்ள எதிர் மலர் இதழ்கள் போன்ற மையுண்ட கண்கள், பிரிவுத் துயரால் ஏற்பட்ட துன்பக் கண்ணீரை உகுத்தன புதிய முழுமதி போன்ற முகத்தையுடையவளே! நம்மைப் பிரிந்து போனவர் நாட்டிலும், மதியை உமிழ்ந்து, கதிரை விழுங்கி வருகின்ற இம்மயக்கந்தருகின்ற மாலைக் காலம் உள்ளதல்லவா?

*(வி-ரை)* கதிரவன் பகல்செய்வான் போன்ற சொற்கள் தொடர்கள் கோவலனைக் குறியீடாகக் குறிக்கின்றன என்பதை *(பக்கம் -25-27)* காண்க.

**42** பறவை பாட்டு அடங்கினவே, பகல் செய்வான் மறைந்தனனே,
நிறைநிலா நோய்கூர, நெடும் கண்நீர் உகுத்தனவே
துறுமலர் அவிழ் குழலாய் துறந்தார் நாட்டு உளதாம்கொல்
மறவை ஆய் என் உயிர்மேல் வந்த இம்மருள் மாலை

*(அ-ள்)* பகல் - ஒளி, மறவை - எமன்,

*(தெ-ரை)* மாலைக் காலத்தில் பறவைகளின் கூச்சல் ஒலிகள்

அடங்கின, ஒளி செய்வானாகிய கதிரவன் மறைந்தான், நிறுத்தநில்லாத காம நோய் மிகுதியாக, நீண்டகண்கள் நீரைச் சொரிந்தன, மணமலர்கள் சூடிய கூந்தலையுடையவளே! மறத்தன்மையுடைய கூற்றுவன் போல் என் உயிரைக் கொல்ல வந்த இம்மயக்கம் பொருந்திய மாலைப் பொழுது, நம்மைத் துறந்து பிரிந்து சென்றவர் நாட்டிலும் உளதாகும் அல்லவா?

(வி-ரை) கோவலன் மாதவியரின் ஆரவாரமான ஆடம்பரமான வாழ்க்கையைக் குறிக்கின்றது பறவைப்பாட்டு. மாலைக்காலம் வந்தஉடன் பறவைகள் ஒலி அவிந்து கூட்டுக்குள் அடங்கிவிடுகின்றன. இப்போது கோவலன் பிரிந்துவிடுவான் என்ற உணர்வு மாதவிக்கு மிகுந்துவிட்டதால் எல்லா ஆரவார வாழ்க்கையும் முடிந்துவிட்டதாக அவள் கருதுகிறாள். அடங்கினவே என்பது அதைக்குறிக்கிறது.

### சாயல்வரி – வள்ளைப்பாட்டு

**கோவலன் பாடியவை**

20 பவள உலக்கை கையால் பற்றித்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
குவளை அல்ல கொடிய கொடிய.

(அ-ள்) தவளம் - குளிர்ச்சி, குறுவாள் - குற்றுவாள்.

(தெ-ரை) கடல் வளம் மிகுதியாகக் கிடைப்பதால் பவளத்தால் உலக்கை செய்தனர். அப் பவள உலக்கையால் குளிர்ச்சி பொருந்திய முத்துக்களை அரிசியாகப் போட்டுக் குத்தினர். அவ்வாறு குற்றுபவள் கண்கள் குவளை போன்று தோன்றினாலும் கொடிய தன்மையுடையன.

21 புன்னை நீழல் புலவுத் திரை வாய்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய! கூற்றம் கூற்றம்

(அ-ள்) புலவு- புலால் நாற்றம், திரைவாய் கடற்கரை, கொன் - மிகுதியும் கூர்மையும், வலிமை; கூற்றம்- எமன்.

(தெ-ரை) புன்னை மரத்தின் நிழலில், புலால் நாறும் கடற்கரையில், அன்னம் இவளைப் பார்த்து நடக்கும்படி நடப்பாள், அவ்வாறு நடக்கின்றவளின் சிவந்த கண்கள் மிகவும் கொடியன. கூற்றுவனைப் போன்ற பார்வையுடையன.

(வி-ரை) கோவலன் மனையறம்படுத்தகாதையில் கண்ணகியைப் புகழும்போது,

அன்னம் நன்னுதால் மென்னடைக்கு அழிந்து
நன்னீர்ப் பண்ணை நளிமலர்ச் செறியவும். (2–55,56) என்கின்றான்.

இங்கு, அன்னம் கண்ணகியைக் குறித்ததாகக் கொள்ளலாம்.

22. கள்வாய் நீலம் கையின் ஏந்திப்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வேல் அல்ல வெய்ய வெய்ய.

(அ-ள்) கள்- தேன், நீலம்- நீலமலர், புள் - பறவை, உணங்கல் - வற்றல், கடிவாள்- விரட்டுவாள், வெள்- வெண்மையான, ஒளிபொருந்திய கூர்மையான, வெய்ய- கொடியன.

(தெ-ரை) தேனைத் தன்னிடத்தேயுடைய நீல மலரைக் கையில் ஏந்திக் கொண்டு, மீன் வற்றலை, கொத்தும் பறவைகளை விரட்டிக் காவல் காத்துக்கொண்டிருந்தாள். அவள் சிவந்த கண்கள் வெள்ளிய வேல்கள் போல் தோன்றினாலும் வேல்கள் அல்ல. மிகவும் கொடியன.

(வி-ரை) ஏற்கெனவே முருகனின் வேலை இரண்டாகப் பிளந்து இரண்டு கண்களாகக் கண்ணகிக்கு அமைத்தான் என்பதையும் முன்பு சொன்னான். இங்கு, கண்கள் வேல் என்பதை அவ்வுணர்வில் மறுபடியும் குறிப்பிடுகிறான்.

**மாதவி பாடியவை**

43. கைதை வேலிக் கழிவாய் வந்து எம்
பொய்தல் அழித்துப் போனார் ஒருவர்
பொய்தல் அழித்துப் போனார் அவர் நம்
மையல் மனம் விட்டு அகல்வார் அல்லர்.

(அ-ள்) கைதை- தாழை, கழி - கடலைஅடுத்த உவர் நீர்ப்பரப்பு . வாய் -இடம்.

(தெ-ரை) தாழை மரங்களை வேலியாக உடைய, கழிவாய் இடமாகிய கானலில் வந்து, எம்முடைய பொய்தல் விளையாட்டை அழித்துப்போனார், ஒருவர், அவர் நம்முடைய மயக்கம் பொருந்திய மனத்தைவிட்டு அகல்வார் அல்லர், மனத்திலேயே இருக்கின்றார்.

(வி-ரை) பொய்தல் என்பது கணவன் மனைவியாக, மகன் தந்தையாக, குழந்தைகள் விளையாடும் விளையாட்டு. அது போன்று தன்னுடைய வாழ்க்கை அமைந்துவிட்டதோ என நினைக்கிறாள் மாதவி. அவ்வாறு விளையாடி வாழ்க்கையையும் அழித்துவிட்டுப் போய்விட்டார். ஆனால் அவர் என் மனம்விட்டு அகல்வதில்லை என்று பேசுகிறாள். மாதவியின் பாடல்களில் அவன் பிரிந்துவிடுவானோ என்ற ஐயஉணர்வு ஏற்பட்டு அதற்காகத் துடிக்கின்ற உள்ளத்தினைக் காணமுடிகின்றது.

(பா-று) அவர் நம் -அவர் எம் என்ற பாடம் உள்ளது.

**44.** **கானல் வேலிக் கழிவாய் வந்து**
**'நீநல்கு' என்றே நின்றார் ஒருவர்**
**'நீநல்கு' என்றே நின்றார் அவர் நம்**
**மான்நேர் நோக்கம் மறப்பார் அல்லர்.**

(அ-ள்) வாய்- இடம், நல்கு - கொடு, நோக்கம் - பார்வை.

(தெ-ரை) கடற்கரைச் சோலை வேலிப்பக்கமுள்ள கழியிடத்து வந்து, நீ எனக்கு அருள் செய்க' என்று நின்றார் ஒருவர், அவர் அருள் செய்ய வேண்டி, நின்றவர், நம் மருட்சி பொருந்திய மான் போன்ற பார்வையை மறப்பவர் அல்லர்.

சாயல்வரியில் கோவலன் மூன்றுபாடல்களும் மாதவி மூன்றுபாடல்களும் பாடுகின்றனர்.

(பா-று) அவர் நம் - அவர் எம் என்ற பாடம் உள்ளது.

**45.** **அன்னம் துணையோடு ஆடக் கண்டு**
**நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்**
**நென்னல் நோக்கி நின்றார் அவர் நம்**
**பொன்னேர் சுணங்கின் போவார் அல்லர்.**

(அ-ள்) நென்னல் - நேற்று, ஏர்-அழகு, நேர் - போன்ற, சுணங்கு-தலைவன் பிரிவால் உடலில் ஏற்படும் தேமல் போன்ற நிறமாற்றம்.

(தெ-ரை) அன்னப்பறவை தன் இனிய துணையோடு கூடி ஆடக்கண்டு, அதனையும் என்னையும் நேற்று நோக்கி நின்றார் ஒருவர், அவ்வாறு காமக்குறிப்போடு பார்த்து நின்றார், நம் பொன் ஒத்த சுணங்கைப் போல நம்மை விட்டுப் போவாரல்லர்.

(பா-று) நென்னெல் என்பதற்கு - நின்னேர் என்ற பாடம் உள்ளது. அவர் நம் என்பதற்கு - அவர் என் என்ற பாடம் உள்ளது. பொன்னேர் சுணங்கிற் - நெடுங்கண்விட்டுப் என்ற பாடமும் உள்ளது.

### முகமில்வரி

### தலைவன் அன்னத்தைப் பார்த்துப் பேசுகிறான்

**கோவலன் பாடியது**

23 சேரல் மடஅன்னம் சேரல் நடை ஒவ்வாய்
சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய்
ஊர்திரை நீர்வேலி உழக்கித் திரிவாள் பின்
சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய்.

(அ-ள்) சேரல் - சேராதே, ஒவ்வாய் -ஒப்பாகமாட்டாய், உழக்கி - கலக்கி,

(தெ-ரை) இத்தகைய தலைவியின் பின் தானும் அவள் போன்று நடக்கலாமென்று கருதி, அன்னம் அவள் பின் நடைபழகச் செல்கின்றது. அவ் அன்னத்திடம் சொல்கிறான் தலைவன், ஊர்கின்ற திரையை உடைய கடல் இவ்வுலகிற்கு வேலியாக அமைந்துள்ளது. இவ்வூரையும் உலகையும் தன் அழகாலும், ஆற்றலாலும் கலக்கித் திரிகின்றாள் இவள். இவள் பின் நீ சேராதே என்கிறான். இவ்வாறு இப்பாடல்கள் அனைத்தையும் யாழால் வாசித்து முடிக்கின்றான் கோவலன்.

(வி-ரை) ஊர்திரைநீர் வேலி உழக்கித்திரிவாள் என்பதில்

கண்ணகி மதுரையை எரித்து உலகின் கொடுமையை எல்லாம் அழித்துத் திரியும் நிலை நம் எதிர் தோன்றுகிறது. எல்லாரும் அறிந்த கதையினையே சொல்லவருகின்ற கூற்றில் அதைக் கேட்பார்க்குப் புதுமையை விளைவிப்பது இவ்வாறு பின்வரும் கதைப் பகுதி முன்வரும் கூற்றுக்களின் குறிப்புப் பொருளாக நிற்பதேயாம் என்பது தெ.பொ.மீ. அவர்கள் கருத்து. (ப. 175).

*மாதவி பாடியது*

*46 அடையல் குருகே! அடையல் எம் கானல்*
*அடையல் குருகே! அடையல் எம் கானல்*
*உடைதிரை நீர்ச் சேர்ப்பற்கு உறுநோய் உரையாய்*
*அடையல் குருகேஅடையல் எம்கானல்*

(அ-ள்) அடையல் -அடையாதே, தங்காதே.

(தெ-ரை) கடல் கொக்கு வகையைச் சேர்ந்த குருகே! நீ இனி எங்கள் கடற்கரைச் சோலைக்கு வந்து தங்காதே. அலைகள் உடைந்து பரவுகின்ற கடற்கரைத் தலைவனிடம் நாங்கள் படுகின்ற துன்பத்தைச் சென்று சொல்வதில்லை. அதனால் எங்கள் கடற்கரைச் சோலைக்கு நீ வந்து தங்காதே.

(வி-ரை) கோவலனின் செல்வம் உடைந்துவிட்டது அல்லது வீணாகிவிட்டது என்பதை உடைதிரைநீர் என்பது சுட்டுவதாகக் கொள்ளலாம். நீர் வளமுடையது. இங்கு உடைதிரைநீர் என்பது அலையலையாக நீர்வந்து உடைவதைக் குறிப்பிட்டாலும் நீர் வளமுடையது என்ற பொருளிலும் திரை என்பது நீர்வளம் மிகுதியாக இருப்பதைக் குறிப்பதாகவும், கொண்டு அது உடைந்துவிட்டது. நீர்வளம் இல்லை கோவலன் செல்வ வளம் சிதைந்துவிட்டது என்பதைச் சுட்டுவதாகவும் கொள்ளலாம்.

*மாதவி பாடியவை*

**கட்டுரை**

*47 ஆங்கனம் பாடிய ஆய் இழை பின்னரும்*
*காந்தள் மெல் விரல் கைக்கிளை சேர்குரல்*
*தீம்தொடைச் செவ்வழிப்பாலை இசை எழீஇப்*
*பாங்கினின் பாடி, ஓர் பண்ணுப் பெயர்த்தாள்*

(அ-ள்) இழை - ஆபரணம், ஆயிழை -மாதவி, கைக்கிளை - ஒருதலைக்காமம், எழீஇ - எழுப்பி.

(தெ-ரை) அங்ஙனம் அவ்வாறு பாடிக் கொண்டிருந்த, ஆராய்ந்த அணிகளை அணிந்துள்ள மாதவி, பின்பும், தன் காந்தள் போன்ற மென்மையான விரல்களால், கைக்கிளை சேர்ந்த குரல் நரம்பில் அமைந்த இனிமையான பாடலைச் செவ்வழிப் பாலை என்னும் பண்ணாகிய இசையை எழுப்பி, அதற்குரிய முறையில் பாடி, பின் பிறிதோர் பண்ணில் பாடத் தொடங்கினாள்.

## முகம்இல் வரி

48 நுளையர் விளரி நொடி தருதீம் பாலை
இளி கிளையில் கொள்ள இறுத்தாயால் மாலை
இளி கிளையில் கொள்ள இறுத்தாய் மன் நீயேல்
கொளைவல்லாய் என் ஆவி கொள் வாழி மாலை.

(அ-ள்) நுளையர் - நெய்தல் நிலத்தார், விளரி - பண்ணின் பெயர், நொடி - சொல்லுதல், தீம் - இனிமை, பாலை - பண்ணின் பெயர், இளி - ஒன்பது வகை நரம்புகளில் ஒரு நரம்பின் பெயர். இறுத்தல் - தங்குதல், கொளை - கொள்ளுதற்கு

(தெ-ரை) நுளையரது விளரிப் பண்ணைப்பாடும்போது, இனிய பாலைப்பண், இளி நரம்பு, கிளை நரம்பில் கலக்க வந்து தங்கினாய், அங்ஙனம் தங்கிய மயக்கத்தால் இம்மாலைத் துன்பம் அதிகமாயிற்று. என் உயிரைக் கொள்வதற்கு வந்த மாலையே நீ வாழ்வாயாக.

49 பிரிந்தார் பரிந்து உரைத்த பேர் அருளின் நீழல்
இருந்து ஏங்கி வாழ்வார் உயிர்ப் புறத்தாய் மாலை
உயிர்ப்புறத்தாய் நீஆகில் உள் ஆற்றா வேந்தன்
எயில் புறத்து வேந்தனோடு என் ஆதி மாலை

(அ-ள்) பரிந்து - அருள்செய்து, ஏங்கி-துன்புற்று, வருந்தி, எயில் - மதில். ஆதி - தொடர்பு,

(தெ-ரை) நம்மைப் பிரிந்தவர் பரிந்து சொன்ன நல்வார்த்தைகளை நம்பி, அந்நிழலில் இருந்து ஏங்கி

வாழ்கின்றவர்களின் உயிரைக் கொல்வதற்காக வந்துள்ள மாலையே! மதில் உள் இருக்கும் வேந்தன் தனக்கு ஆற்றல் இல்லாத காரணத்தால் தான் மதிலினுள் அடைத்துக் கொண்டிருக்கின்றான். அதை அறிந்தும் மதிலின் வெளியில் இருக்கும் அரசன், உள்ளிருப்பவனைத் துன்புறுத்த நினைக்கிறான். அது போன்று ஏற்கனவே காதலன் பிரிவைத் தாங்க இயலாது இருக்கின்ற எங்கள் நிலை அறிந்தும் நீயும் சேர்ந்து எங்களை வதைக்கிறாயே! உனக்கும் அந்த மதிலுக்கு வெளியில் இருக்கும் வேந்தனுக்கும் என்ன உறவு மாலை? என்று கேட்கிறாள்.

(வி-ரை) இங்கு அகத்திணையையும் புறத்திணையையும் இணைக்கின்றார். மதில் உள் இருக்கின்ற அரசன் ஆற்றல் அற்றவன் என்று தெரிந்திருந்தும் வெளியில் இருப்பவன் உள்இருப்பவனுக்குத் துன்பம் தருவது சிறப்பில்லை என்பதை மாதவி தன் வாழ்க்கையோடு இணைத்துப்பார்க்கிறாள்.

**50** பையுள் நோய் கூரப் பகல் செய்வான் போய் வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருள்மாலை
மாலை நீ ஆயின் மணந்தார் அவர் ஆயின்
ஞாலமோ நல்கூர்ந்தது வாழி மாலை.

(அ-ள்) பையுள் - துன்பம், பகல் - ஒளி, பகல்செய்வான்- கதிரவன் வையம் - உலகம், ஞாலம் - உலகம், நல்கூர்ந்தது - வெறுமையாயிற்று.

(தெ-ரை) காதல் நோய்த் துன்பம் மிகுதியாக, பகலில் ஒளிதரும் கதிரவன் மறைய, இவ்வுலகம் முழுவதும் என்போன்றோரைப் பற்றிக் கவலைப்படாமல் தூங்க, மயக்கத்தைத் தருவதாகாகவே வந்தனை நீ மாலைப் பொழுது. மால்+ஐ- என்றால் நீயே மயக்கமுடையை, எங்களுக்கும் மயக்கத்தைத் தருகின்றாய். மாலை நீ ஆயின், மணந்து பிரிந்தவர் அவர் ஆனால், இவ்வுலகம் வறுமை யுற்றது. அதனால் எனக்கென்ன? மாலையே நீ வாழ்க.

**51** தீத்துழைஇ வந்த இச்செல்லல் மருள்மாலை
தூக்காது துணிந்த இத்துயர் எஞ்சு கிளவியால்
பூக்கமழ் கானலில் பொய்ச்சூள் பொறுக்க என்று
மாக்கடல் தெய்வம் நின் மலர்அடி வணங்குதும்

(அ-ள்) துழைஇ - துழாவி, துளைத்து, செல்லல்-துன்பம், மருள் மயக்கம், தூக்காது - கருதாது, நினைக்காது, கிளவி - சொற்கள், சூள் - சபதம், மா - பெரிய.

(தெ-ரை) நெருப்புப்போல் பரவி வந்து, துன்பத்தைத் தருகின்ற இந்த மயக்கம் பொருந்திய மாலை பற்றி, நாங்கள் ஆராயாது பாடிய இந்தத் துயரம் பொருந்திய பாடல்களுக்காக, எம் தலைவனின் பூக்கள் பொருந்திய கடற்கரைச் சோலையில் செய்த பொய்ச் சபதத்தைக் கருதி, பெரிய கடல் தெய்வமே, நீ எதுவும் அவருக்குத் தீமை செய்யவேண்டாம், பொறுத்தருள்வாயாக, என்று உன்மலர் போன்ற திருவடிகளை வணங்கிக் கேட்டுக் கொள்கிறோம்.

(வி-ரை) தலைவன் பிரிவால் தலைவி எவ்வளவு துன்பம் அடைந்தாலும், தலைவன் நன்றாக இருக்க வேண்டும். அவனுக்குத் தீமைவரக் கூடாது எனக் கருதி, கடல் தெய்வத்திடம் வேண்டுகிறாள் தலைவி, இந்த மனநிலையில் தான் மாதவி இருக்கிறாள் என்பதை இப்பாடல் காட்டுகிறது.

(சி-பு) தெய்வ நம்பிக்கை தொல்காப்பிய காலத்திலும் இருந்தது.

தெய்வம் என்ற சொல் தொல்காப்பியத்தில் ஒன்பது இடங்களில் இடம்பெறுகிறது. (தொல். 487, 541, 964, 982, 993, 1061, 1096, 1218, 1367) தெய்வம் நம்மைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கை இருந்தது.

வழிபடுதெய்வம் நின்புறம் காப்ப
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறா (தொல்–1367)

அதாவது புறநிலை வாழ்த்தாகிய தெய்வவாழ்த்துக்கள் கலிப்பாவாலும், வஞ்சிப்பாவாலும் வராது என்பது தொல்காப்பியர் கருத்தாகத் தோன்றுகிறது.

தெய்வம் என்பது இயற்கையைக் கடந்த ஆற்றல் உடையசக்தி. அதனால்தான் தெய்வம் அஞ்சல் (தொல்-1218) என்ற தொடர்

அமைகிறது. தெய்வத்திற்கு அஞ்சியதால்தான் தெய்வத்தை வாழ்த்தினர் என்றும் தெரிகிறது. அதனால் தெய்வம் வாழ்த்தலும் (தொல் 1061) என்ற தொடர் அமைகிறது. அதோடு கடவுள் வாழ்த்தோடு கண்ணிய வருமே (தொல் -1034) என்ற தொடர் திருக்குறள் முதல் அதிகாரத்திற்குத் தலைப்பாக அமைகிறது. தொல்காப்பியரோ இளங்கோவடிகளோ தங்கள் நூலுக்குக் கடவுள் வாழ்த்துக்கூறவில்லை. வள்ளுவர் கடவுள் வாழ்த்துக் கூறி திருக்குறளைத் தொடங்குகிறார். இளங்கோவடிகள் திங்கள் ஞாயிறு, மழை எனும் இயற்கையை வாழ்த்திக் காப்பியதைத் தொடங்குகின்றார். வள்ளுவர் கடவுள் வாழ்த்தை அடுத்து வான்சிறப்புக் கூறுகிறார். இளங்கோவடிகள் திங்களை ஞாயிற்றை, முதலில் வாழ்த்திப் பின்பு மாமழை போற்றுதும் என்று வான்சிறப்புக்கு ஈடாகக் கூறுகிறார்.

தொல்காப்பியம் ஐவகை நிலங்களுக்கும் தெய்வங்கள் கூறியுள்ளது.

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும் (தொல்– 951)**

முல்லைநிலத்திற்குக் கண்ணன் கடவுளாகவும், குறிஞ்சி நிலத்திற்கு முருகன் கடவுளாகவும், மருதநிலத்திற்கு இந்திரன் கடவுளாகவும், நெய்தல் நிலத்திற்கு வருணன் கடவுளாகவும், பாலை நிலத்திற்குக் கொற்றவை கடவுளாகவும் தொல்காப்பியம் கூறுகிறது. வெளிப்படையாகத் தொல்காப்பியம் பாலைநிலத்தைச் சுட்டவில்லை. குறிப்பாக "நடுவண் ஐந்திணை நடுவணது ஒழிய" (தொல்- 948) என்ற தொடரிலும், "வாகைதானே பாலையது புறனே" என்ற நிலையிலும் (தொல்- 1019) பாலைபற்றி குறிப்பிடுகிறது. ஆனால் பாலை என்ற நிலப்பகுப்பைத் தொல்காப்பியம் கூறவில்லை. நிலப்பகுப்பிற்கு விளக்கத்தைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

**முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்இயல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்துப்**

*பாலை என்பதோர் படிவம் கொள்ளும்*
*காலை எய்தினர் காரிகை தன்னுடன்*
*(சிலம்பு 11;64–67)*

இளங்கோவடிகள் ஐவகைநிலங்களுக்கும், ஐந்து காதைகளைத் தருகிறார். குறிஞ்சிக்கு, - குன்றக்குரவை, முல்லைக்கு - ஆய்ச்சியர் குரவை, நெய்தலுக்கு- கானல்வரி, மருதத்திற்கு -இந்திரவிழவு ஊர் எடுத்தகாதை, ஊர்காண் காதை, பாலைக்கு -வேட்டுவவரி என்ற நிலையில் அமைகின்றன. சிலப்பதிகாரத்தில் தெய்வம் என்ற சொல் 38 இடங்களில் பயன்படுத்தப்பெறுகிறது. பெரும்பாலும் தெய்வம் என்றசொல் இயற்கையைக் கடந்த ஆற்றலுடைய சக்தி என்ற பொருளிலேயே பயன்படுகிறது.

மாதவி பாடும்போது “நிலத்தெய்வம் வியப்பெய்த, நீள் நிலத்தோர் மனம் மகிழ கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தால் பாடத்தொடங்குமன்” (சிலம்பு 7-24) என்று கூறுகிறார். இங்குப் பொதுநிலையில் நிலத்திற்கு ஒரு தெய்வம் அமையும் என்பது அவர் கருத்தாக அமைகிறது. அதே நேரத்தில் ஒவ்வொரு நகரத்திற்கும் தெய்வம் அமையும் என்ற எண்ணமும் இளங்கோவடிகளுக்கு உண்டு. அதனால் தான் ‘‘மதுரை மாதெய்வம் வந்து தோன்றி'' (ப. 43) என்ற தொடரில் குறிப்பிடுகிறார். அதோடு இமயமலையைத் “தெய்வமால் வரை” (3-1) என்று சுட்டுகிறார். நெய்தல்நிலக்கடவுளை மாதவி பாடலில் “மாக்கடல் தெய்வம் நின் மலரடி வணங்குதும்” (7-51-4) என்று வணங்குவாள். கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் மூவரும் மதுரை செல்லும்போது கானுறை தெய்வம் (11-171) என்றும் மயக்கும் தெய்வம் (11-192) என்றும் குறிப்பிடுகிறார். அதோடு இன்று நாம்செய்கின்ற நாம ஜெபத்தை “மொழிப்பொருள் தெய்வம் வழித்துணையாக” (10-100) என்று கூறுவார். இங்கு மொழிப்பொருளாகிய இறைவன் நாமத்தைக் கூறுகின்ற நிலை வழித்துணையாக மட்டுமல்லாமல் வாழ்க்கைத்துணையாகவும் அமைகின்றது.

ஒவ்வொரு குலத்திற்கும் ஒவ்வொரு தெய்வம் உண்டு என்பது இளங்கோவடிகள் கருத்தாக இருந்திருக்கலாம். இன்று கூட,

குலதெய்வ வழிபாடு இருப்பதை நாம் அறிகிறோம். பங்குனி உத்திர நாளில் குலதெய்வத்தைச் சென்று வழிபடுகின்ற வழக்கம் இன்றும் தமிழகத்தில் உள்ளது. கோவலன் தனக்கும் மாதவிக்கும் பிறந்த மகளுக்குப் பெயரிடவேண்டும் என்று நினைத்தபோது அவனுடைய முன்னோனைக் காப்பாற்றிய குலதெய்வப் பெயரை இடவேண்டும் என்று நினைக்கிறான். "எம்குல தெய்வப் பெயர்ஈங்கு இடுகஎன" (15-37) எனக் கூறுகிறான்.

இவ்வாறு தெய்வங்கள் பற்றிய பலகுறிப்புக்களைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

### கட்டுரை

**52** எனக்கேட்டு,
*கானல் வரி யான் பாடத் தான் ஒன்றின்மேல் மனம் வைத்து*
*மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள் என*
*யாழ் இசைமேல் வைத்துத் தன் ஊழ்வினைவந்து உருத்தது ஆகலின்*
*உவவுற்ற திங்கள் முகத்தாளை கவவுக்கை ஞெகிழ்ந்தனன் ஆய்*
*'பொழுது ஈங்குக் கழிந்து அகலின் எழுதும்' என்று உடன் எழாது*
*ஏவலாளர் உடன் சூழ்தரக் கோவலன் தான் போன பின்னர்*

(அ-ள்) உருத்தது - வடிவெடுத்தது, உவவு - முழுநிலா நாள் கவவு - பொருந்திய, பிணித்த, ஞெகிழ்தல் - நெகிழ்தல்,

(தெ-ரை) இவ்வாறு மாதவி கானல் வரிப்பாடல்களைப்பாட கோவலன் அப்பாடல்களைக் கேட்டு, நான் கடற்கரைச் சோலையில் இசைப்பாடல்களைப்பாட, மாதவி, தான் ஒருபொருள் மேல்மனம் வைத்து, மாயப் பொய் பல சேர்த்து, மனம் மாயும்படி பாடினாள் என நினைத்தான். யாழ் இசை காரணமாக, ஊழ்வினை தன் வடிவை எடுத்து வந்ததாகலின், முழுமதி போன்ற முகத்தாளாகிய மாதவியை நோக்கி 'காலம் தாமதமாயிற்று, செல்வோம்' எனக்கூற அவள் உடனே எழாததால், பிணைத்த கைகள் நெகிழ்ந்தனனாய், தனக்குரிய பணியாளர்கள் புடைசூழ, அவளைப் பிரிந்து போனான். அதன் பின்பு,

சிலப்பதிகாரத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று ஊழ்வினை

உருத்துவந்து ஊட்டும் என்பது. இங்கு "யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை உருத்ததாகலின்" என்பதால் கோவலனுக்குரிய ஊழ்வினை சுட்டப்பெறுகிறது. பின்பு ஊழ்வினை செலுத்துகின்ற காரணத்தால் மதுரைக்குச் செல்கிறான். மதுரை அரசன் பாண்டியன் நெடுஞ்செழியன் செங்கோல் வளைவதற்கும் இக்கோவலன் ஊழ்வினை காரணமாக அமைகிறது என்று கூறுகிறார்.

*காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்*
*கோவலன் பண்டை ஊழ்வினை உருத்து என். (16-216,217)*

அடுத்து கண்ணகி வழக்குரை காதையில் பாண்டியனிடம் பேசும்போது வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்ப கோவலன் மதுரைக்கு வந்ததாகக் கூறுகிறாள்.

மாடலன் செங்குட்டுவனிடம் மாதவி கோவலன் புகார் நகர வாழ்க்கை பற்றிப் பேசும்போது இவ்வூழ்வினை பற்றிக் குறிப்பிடுகிறான்.

*கானல்அம் தண்டுறை கடல்விளை யாட்டினுள்*
*மாதவி மடந்தை வரிநவில் பாணியொடு*
*ஊடல் காலத்து ஊழ்வினை உருத்துஎழக்*
*கூடாது பிரிந்து குலக்கொடி தன்னுடன்*
*மாட மூதூர் மதுரைபுக்கு ஆங்கு*
*இலைத்தார் வேந்தன் எழில் வான்எய்தக்*
*கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி*
*குடவர் கோவே நின்நாடு புகுந்து*
*வடதிசை மன்னர் மணிமுடி எறினள். (27-57-65)*

இளங்கோவடிகள் வினைக்கொள்கையில் ஆழங்கால் பட்டவராக இருக்கிறார். வினைக்கு அடையாக முதிர் வினை (ப. 45) ஊழ்வினை (ப.57) சூழ்வினை (ப. 58), நல்வினை (5;234), வினைகடைகூட்ட (9;78,) பண்டைத் தொல்வினை (10;164), ஊட்டும் வல்வினை; வல்வினை ஊட்டும் (14;27) தீதுடை வெவ்வினை (14;31) ஒய்யாவினைப்பயன் (14;33), வினைவிளை காலம் (16;148), தீவினை முதிர்வலை (16;156), பண்டை ஊழ்வினை (16;217), நண்ணும் இருவினையும் (16;வெ-1), விளைவாகி வந்த வினை (16 வெ4), மறவினை (19;41), ஈர்வதோர் வினை (19;46)

கடுவினை(19;47), உண்பதோர் வினை (19;50) , வடுவினை கடுவினை, (20;வெ.1) கொடுவினை (21;1), தீதுற வந்த வினை (23;30), உம்மைவினை (23;171), தீவினைச் சிலம்பு (25;69) தொல்லை வினை (29;13-1) பழவினை (30;75) என்று பல தருகிறார்.

வினை என்பது செயல். செயலுக்கு உறுதியாகப் பயன் உண்டு என்பதில் ஐயமில்லை. தீய செயல் செய்தால் தீமை விளையும். நல்ல செயல் செய்தால் நன்மை விளையும், என்பதிலும் ஐயமில்லை. ஆனால் கடந்தபிறவியிலும் கண்ணகி, கோவலன் மனைவியாக வாழ்ந்து இருக்கிறாள் என்று தெரிகிறது. ஆனால் கண்ணகி கடந்த பிறவியிலும் தீமை செய்யவில்லை. இந்தப்பிறவியிலும் தீமை செய்யவில்லை. அவள் ஏன் துன்புறவேண்டும் என்ற கேள்வி எழுகிறது. அவள் கணவன் செய்த வினையால் அவள் துன்புறுகிறாள். என்பது தெளிவாகிறது.

**கட்டுரை**

*தாதுஅவிழ் மலர்ச்சோலை, ஓதை ஆயத்து ஒலிஅவித்து*
*கையற்ற நெஞ்சினளாய், வையத்தின் உள்புக்குக்*
*காதலனுடன் அன்றியே மாதவி தன்மனைபுக்காள்*

(அ-ள்) ஓதை-ஓசை, ஆயம் -தோழியர் கூட்டம், கையற்ற-செயலற்ற, வையம் - வண்டி,

(தெ-ரை) பூந்தாதுகள் சொரிகின்ற மலர்ச் சோலையில், அவளுடைய தோழிகள், அவன் அவளைவிட்டுச் சென்றதால் துன்பத்தால் வருந்தி அழ அவ்ஒலியை அமைதியாக அடக்கிச் செயலற்ற நெஞ்சினளாய், வண்டியின் உள்புகுந்து, காதலன் உடன் இல்லாமல், தனியே தன் வீட்டை அடைந்தாள்.

# அரசவாழ்த்து

*ஆங்கு*
*மாஇரு ஞாலத்து அரசு தலை வணக்கும்*
*சூழியானைச் சுடர்வாள் செம்பியன்*
*மாலை வெண்குடை கவிப்ப,*
*ஆழி, மால்வரை அகவையா எனவே.*

(அ-ள்) மா - பெரிய, ஞாலம் - உலகம், வணக்கும் - பிறரை வணங்கச் செய்யும், செம்பியன் -சோழன்,

அங்கு நிலமகன்ற பெரிய இவ்வுலகத்து அரசர்களை எல்லாம் தலை வணங்கச் செய்யும், முகபடாம் அணிந்த யானையையும், ஒளிமிகுந்த வாளையும் உடைய சோழனின் மாலைகள் அணிந்த வெண்கொற்றக்குடை, இந்நிலவுலகத்தையும், சக்கரவாள மாலையையும் உள் அடக்கிக் கவிப்பதாக எனச் சோழ அரசனை வாழ்த்திக் காதையை நிறைவு செய்கிறார் அடிகள்.

# கானல் வரி – மூலம்

இம்மூலப்பகுதியில் பிற பதிப்புக்களில் இல்லாத 1. யாப்பின் அமைப்பும், 2. இசைபற்றிய பண், இராகம், தாளம் போன்றவையும் குறிப்பிடப்பட்டுள்ளன. இசையாசிரியர்களைக் கொண்டு நான் அமைத்த இசை அமைப்புக்களையும் இசைப்பேராசிரியை இ. அங்கயற்கண்ணி (தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.) வெளியீட்டுள்ள சிலப்பதிகாரத்தில் காணப்படும்இசைப்பாடல்கள் என்ற நூலில் உள்ள இராகம், தாளமும் இம்மூலத்தில் குறிக்கப்பெற்றுள்ளன. அடைப்புக்குறியுள் (அ) போட்டவை எல்லாம் அங்கயற்கண்ணி அவர்களின் இசை எண்ணங்கள்.

### கட்டுரை

### (இப்பகுதியை விருத்தமாகப் பாடலாம்)

### யாழின் தன்மை கூறல்

சித்திரப் படத்துள் புக்குச் செழும்கோட்டின் மலர்புனைந்து
மைத்தடம் கண் மணமகளிர் கோலம்போல் வனப்பு எய்தி
பத்தரும்கோடும் ஆணியும் நரம்பும் என்று
இத்திறத்து குற்றம் நீங்கிய யாழ்கையில் தொழுதுவாங்கிப்
பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல்
கண்ணிய செலவு, விளையாட்டு, கையூழ்,
நண்ணிய குறும்போக்கு என்று நாட்டி
எண்வகையால் இசை எழீஇப்
பண்வகையால் பரிவு தீர்ந்து
மரகதமணித் தாள் செறிந்த மணிக்காந்தள் மெல் விரல்கள்
பயிர்வண்டின் கிளைபோலப் பல் நரம்பின் மிசைப்படர
வார்தல் வடித்தல் உந்தல் உறழ்தல்
சீருடன் உருட்டல், தெருட்டல், அள்ளல்
ஏர் உடைப்பட்டுடை என இசையோர் வகுத்த

**எட்டுவகையின் இசைக் கரணத்து**
**பட்டவகை தன் செவியின் ஓர்த்து**
**ஏவலன் பின் பாணியாது என,**
**கோவலன் கை யாழ் நீட்ட — அவனும்,**
**காவிரியை நோக்கினவும் கடல் கானல்வரிப் பாணியும்**
**மாதவி தன் மனம் மகிழ வாசித்தல் தொடங்கும் — மன்**

**ஆற்றுவரி**

**காவிரி ஆற்றை நோக்கி, யாழில் இசைத்த இசைப்பாடல்கள்**

(அறுசீர் ஆசிரிய விருத்தம் - இசைப்பாக்கள்)

பண்- பழந்தக்கஇராகம் இராகம் - சௌராஷ்டம்

” சுத்தசாவேரி (அ)

தாளம் - ஆதி (அ)

2 திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோல் அதுஓச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாது ஒழிதல் கயற் கண்ணாய்
மங்கை மாதர் பெரும் கற்புஎன்று அறிந்தேன் வாழிகாவேரி

3 மன்னும் மாலை வெண்குடையான் வளையாச் செங்கோல்அதுஓச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழிகாவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாது ஒழிதல் கயல்கண்ணாய்
மன்னும் மாதர் பெரும் கற்பு என்று அறிந்தேன் வாழி காவேரி

4. உழவர்ஓதை மதகுஓதை உடைநீர்ஓதை, தண் பதம்கொள்
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப நடந்தாய் வாழி காவேரி
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப நடந்த எல்லாம் வாய் காவா
மழவர் ஓதை வளவன் தன் வளனே வாழி காவேரி

(அறுசீர் ஆசிரிய விருத்தம் - இசைப்பாக்கள்)

பண் -இந்தளம் இராகம் -ஆனந்தபைரவி

5 கரிய மலர் நெடும் கண் காரிகை முன்கடல் தெய்வம்காட்டிக்காட்டி
அரியசூள் பொய்த்தார் அறனிலர்என்றேஏழையம்யாங்குஅறிகோம்ஐய
விரிகதிர் வெண்மதியும் மீன்கணமும் ஆம்என்றே விளங்கும்வெள்ளைப்
புரிவளையும் முத்தும் கண்டு ஆம்பல் பொதி அவிழ்க்கும் புகாரே
எம்ஊர்.

6. காதலர் ஆகிக் கழிக்கானல் கையுறை கொண்டு எம்பின்வந்தார்
ஏதிலர் தாம் ஆகி யாம் இரப்ப நிற்பதை யாங்கு அறிகோம் ஐய?
மாதரார் கண்ணும், மதி நிழல் நீர் இணைகொண்டு மலர்ந்த நீலப்
போதும் அறியாது வண்டு ஊசலாடும் புகாரே எம்ஊர்.

7. மோது முது திரையால் மொத்துண்டு போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரி மணல் மேல் வண்டல் உழுது அழிப்ப மாழ்கி ஐய,
கோதை பரிந்து அசைய மெல்விரலால் கொண்டு ஓச்சும் குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார் கண் போகாப் புகாரே எம்ஊர்.

## முகமில்வரி

(ஆசிரியத்துறை- இசைப்பா)

பண் - இந்தளம் இராகம் - கமாஸ்

8. துறைமேய் வலம்புரி தோய்ந்து மணல் உழுத தோற்றம் மாய்வான்
பொறைமலி பூம்புன்னை பூ உதிர்ந்து நுண்தாது போர்க்கும் கானல்
நிறைமதி வாள் முகத்து நேர்கயல் கண் செய்த
உறைமலி உய்யாநோய் ஊர்சுணங்கு மென்முலையே தீர்க்கும் போலும்.

## கானல்வரி– கடற்கரைச் சோலை இசைப்பாட்டு

(ஆசிரியத் துறை -இசைப்பாக்கள்)

பண்- சீகாமரம் இராகம்- புன்னகவராளி

9. நிணம் கொள் புலால் உணங்கல் நின்று புள் ஒப்புதல் தலைக்கீடு ஆக
கணம் கொள் வண்டு ஆர்த்து உலாம் கன்னி நறு ஞாழல் கையில் ஏந்தி
மணம் கமழ் பூம்கானல் மன்னி மற்று ஆண்டு ஓர்
அணங்கு உறையும்என்பது அறியேன், அறிவேனேல் அடையேன் மன்னோ

10. வலைவாழ்நர் சேரி வலை உணங்கு முன்றில் மலர்கை ஏந்தி
விலைமீன் உணங்கல் பொருட்டாக வேண்டு உருவம் கொண்டு வேறுஓர்

கொலைவேல் நெடும் கண்கொடும் கூற்றம் வாழ்வது
அலை நீர்த் தண் கானல் அறியேன் அறிவேனேல் அடையேன் மன்னோ.

(இவை மூன்றும் ஒருபொருள் மீது அடுக்கி வந்தன)

## நிலைவரி – பெண்ணின் தன்மையைக் கூறும் இசைப்பாடல்

(கலிவிருத்தம் - இசைப்பாக்கள்)

பண் - செவ்வழி | இராகம் - தோடி

இராகம் - ஆபோகி (அ)

தாளம் - ரூபகம் (அ)

11 கயல் எழுதி வில் எழுதிக் கார் எழுதிக் காமன்
செயல் எழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர்!
திங்களோ காணீர்! திமில் வாழ்நர் சீறு ஊர்க்கே
அம்கண் ஏர் வானத்து அரவு அஞ்சி வாழ்வதுவே

12. எறிவளைகள் ஆர்ப்ப, இருமருங்கும் ஓடும்
கறைகெழு வேல்கண்ணோ கடும் கூற்றம் காணீர்!
கடும் கூற்றம் காணீர்– கடல் வாழ்நர் சீறூர்க்கே
மடம்கெழு மென்சாயல் மகளா யதுவே.

13. புலவுமீன் வெள் உணங்கல் புள் ஓப்பிக் கண்டார்க்கு
அவல நோய் செய்யும் அணங்கு இதுவோ காணீர்!
அணங்கு இதுவோ காணீர் அடும்பு அமர் தண்கானல்
பிணங்குநேர் ஐம்பால் ஓர் பெண் கொண்டதுவே.

(இவை மூன்றும் ஒருபொருள் மீது அடுக்கி வந்தன)

## முரிவரி

(கலிவிருத்தம் - இசைப்பாக்கள்)

பண் - சீகாமரம் | இராகம் - நாதநாமக்கிரியை

" - கானடா (அ)

தாளம் - ஆதி (அ)

14. பெழில்தரு நறு மலரே, புதுமணம் விரிமணலே
பழுதுஅறு திருமொழியே, பணை இளவன முலையே
முழுமதி புரை முகமே, முரி புரு வில் இணையே
எழுத அரும் மின் இடையே எனை இடர் செய்தவையே.

15. திரைவிரி தருதுறையே, திருமணல் விரி இடமே
விரைவிரி நறுமலரே, மிடைதரு பொழில் இடமே
மருவிரி புரிகுழலே, மதிபுரை திருமுகமே
இருகயல் இணைவிழியே, எனை இடர் செய்தவையே

16. வளைவளர் தருதுறையே, மணம் விரிதருபொழிலே
தளை அவிழ் நறுமலரே, தனிஅவள் திரிஇடமே
முளை வளர் இளநகையே, முழுமதி புரை முகமே
இளையவள் இணைமுலையே எனை இடர் செய்தவையே
(இவை மூன்றும் ஒருபொருள் மீது அடுக்கி வந்தன)

**திணை நிலை வரி – நெய்தல் திணையின் தன்மையைக் கூறும்**

(கலிவிருத்தம் - இசைப்பாக்கள்)

| | |
|---|---|
| பண்- சீகாமரம் | இராகம் -புன்னகவராளி |
| " - இந்தளம் | " - மாயாமாளவ கௌளை (அ) |
| | தாளம் - ரூபகம் (அ) |

**தலைவன் தலைவியைக் கூடிய பின்பு பாடிய பாடல்**

17 கடல்புக்கு உயிர் கொன்று வாழ்வர் நின் ஐயர்
உடல்புக்கு உயிர் கொன்று வாழ்வைமன் நீயும்
மிடல்புக்கு அடங்காத வெம்முலையோ பாரம்
இடர்புக்கு இடுகும் இடை இழவல் கண்டாய்.

18. கொடும்கண் வலையால் உயிர் கொல்வான் நுந்தை
நெடும் கண் வலையால் உயிர் கொல்வை மன் நீயும்
வடம் கொள் முலையால் மழை மின்னுப் போல
நுடங்கி உகும் மென் நுசுப்பு இழவல் கண்டாய்.

19. ஓடும் திமில் கொண்டு உயிர் கொல்வர் நின் ஐயர்
கோடும் புருவத்து உயிர் கொல்வை மன் நீயும்

பீடும் பிறர் எவ்வம் பாராய், முலை சுமந்து
வாடும் சிறுமென் மருங்கு இழவல் கண்டாய்.
(இவை மூன்றும் ஒருபொருள் மீது அடுக்கி வந்தன)

## வேறு ஒசைப் பாடல்கள்

(கலிவிருத்தம் -இசைப்பாக்கள்)

பண் - நட்டபாடை இராகம் - நாட்டைக் குறிஞ்சி

20. பவள உலக்கை கையால் பற்றித்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
குவளை அல்ல கொடிய கொடிய.

21 புன்னை நீழல் புலவுத் திரை வாய்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய! கூற்றம் கூற்றம்

22. கள்வாய் நீலம் கையின் ஏந்திப்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வேல் அல்ல வெய்ய வெய்ய.
(இவை மூன்றும் ஒருபொருள் மீது அடுக்கி வந்தன)

## தலைவன் அன்னத்தைப் பார்த்துப் பேசுகிறான்

(கலிவிருத்தம் - இசைப்பா)

பண்- தக்க ராகம் இராகம் - கன்னட காம்போதி

23 சேரல் மடஅன்னம் சேரல் நடை ஒவ்வாய்
சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய்
ஊர்திரை நீர்வேலி உழக்கித் திரிவாள் பின்
சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய்.

## கட்டுரை

(விருத்தமாகப் பாடவும்)

பண்- செருந்தி இராகம் - கல்யாணி

24 ஆங்குக் கானல்வரிப் பாடல் கேட்ட மானெடும் கண் மாதவியும்
மன்னும் ஓர் குறிப்பு உண்டு இவன் தன் நிலை மயங்கினான்எனக்
கலவியான் மகிழ்ந்தாள் போல் புலவியால் யாழ் வாங்கித்
தானும் ஓர் குறிப்பினள் போல் கானல் வரிப் பாடல் பாணி
நிலத் தெய்வம் வியப்பு எய்த நீள் நிலத்தோர் மனம் மகிழக்
கலத்தொடு புணர்ந்து அமைந்த கண்டத்தால் பாடத் தொடங்கும்மன்

## ஆற்று வரி – காவிரியை நோக்கிப் பாடியவை

(அறுசீர் ஆசிரிய விருத்தம் - இசைப்பாக்கள்)

பண்- செவ்வழி இராகம் - கருநாடக தேவகாந்தாரி

பண்- பழந்தக்க ராகம் இராகம்- காமாஸ்

தாளம் - ஏகம் (திச்ரநடை)

25. மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அது போர்த்து
கரும்கயல் கண் விழித்து ஒல்கி நடந்தாய்வாழி காவேரி
கரும் கயல் கண் விழித்து ஒல்கி நடந்த எல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி.

26. பூவர் சோலை மயில் ஆலப் புரிந்து குயில்கள் இசைபாட
காமர் மாலை அருகு அசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை அருகு அசைய நடந்த எல்லாம் நின்கணவன்
நாமவேலின் திறம் கண்டே அறிந்தேன் வாழி காவேரி.

27. வாழி அவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாது ஒழுகல் உயிர் ஓம்பும்
ஆழி ஆள்வான் பகல் வெய்யோன் அருளே வாழி காவேரி.
(இவை மூன்றும் ஒருபொருள் மீது அடுக்கி வந்தன)

## சார்த்துவரி – பாட்டுத்தலைவன் ஊரொடும் பெயரொடும் சார்த்திப் பாடுவது

(அறுசீர் ஆசிரிய விருத்தம் - இசைப்பாக்கள்)

பண் - நாட்டை இராகம் - அடாணா

" - நட்டபாடை " - கம்பீர நாட்டை (அ)

தாளம் - சதுரச்ரரூபகம் (அ)

28 தீம்கதிர் வாள் முகத்தாள் செவ்வாய் மணிமுறுவல் ஒவ்வாவேனும்
வாங்கும் நீர்முத்து என்று வைகலும் மால் மகன் போல் வருதிர் ஐய
வீங்கு ஓதம் தந்து விளங்கு ஒளிய வெண் முத்தம் விரைசூழ்கானல்
பூங்கோதை கொண்டு விலைஞர் போல் மீளும் புகாரே எம் ஊர்.

29. மறையின் மணந்தாரை வன்பரதர் பாக்கத்து மடவார் செங்கை
இறைவளைகள் தூற்றுவதை ஏழையம் எங்ஙனம் யாங்கு அறிகோம் ஐய!
நிறைமதியும் மீனும் என அன்னம் நீள் புன்னை அரும்பிப் பூத்த
பொறைமலி பூம்கொம்பு ஏற வண்டு ஆம்பல் ஊதும் புகாரே எம் ஊர்.

30. உண்டாரை வெல்நறா ஊண் ஒளியாப் பாக்கத்துள் உறை ஒன்று இன்றித்
தண்டாநோய் மாதர் தலைத் தருதி என்பது யாங்கு அறிகோம் ஐய!
வண்டால் திரை அழிப்ப கையால் மணல் முகந்து மதிமேல் நீண்ட
புண்தோய் வேல் நீல்மல்க, மாதர் கடல் தூர்க்கும் புகாரே எம்ஊர்.

## திணைநிலைவரி – நெய்தலின் தன்மை இசைப்பாடல்

(கலிவிருத்தம் - இசைப்பா)

பண்- நாட்டம் இராகம் - சகானா

31. புணர்துணையோடு ஆடும் பொறி அலவன் நோக்கி
இணர்ததையும் பூங்கானல் என்னையும் நோக்கி
உணர்வு ஒழியப் போனஒலிதிரை நீர்ச்சேர்ப்பன்
வணர்சுரி ஐம்பாலோய்! வண்ணம் உணரேனால்.
(இது ஒருபொருள் மீது தனித்து வந்தது)

32 தம்முடைய தண்ணளியும் தாமும் தம் மான் தேரும்
எம்மை நினையாது விட்டாரோ? விட்டு அகல்க
அம்மென் இணர அடும்புகாள்! அன்னங்காள்!
நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்!

33 புன்கண் கூர் மாலைப் புலம்பும் என் கண்ணே போல்
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள் வாய் நெய்தால்! நீ எய்தும் கனவினுள்
வன்கணார் கானல் வரக் கண்டுஅறிதியோ!
(இவை ஒருபொருள் மீது இரண்டு அடுக்கி வந்தன)

34. புள்இயல் மான் தேர் ஆழி போன வழி எல்லாம்
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய் மற்று என் செய்கோ?
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய் மற்று எம்மோடு ஈங்கு
உள்ளாரோடு உள்ளாய் உணராய், மற்று என் செய்கோ?

35. நேர்ந்த நம் காதலர் நேமிநெடும் திண்தேர்
ஊர்ந்த வழி சிதைய ஊர்கின்ற ஓதமே!
பூந்தண்பொழிலே! புணர்ந்து ஆடும் அன்னமே!
ஈர்ந்தண் துறையே! இது தகாது என்னீரே.

36. நேர்ந்த நம் காதலர் நேமிநெடும் திண்தேர்
ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய் வாழி கடல் ஓதம்
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய் மற்று எம்மோடு
தீர்ந்தாய் போல் தீர்ந்திலையால் வாழி கடல் ஓதம்.
(இவை மூன்றும் ஒருபொருள் மீது அடுக்கி வந்தன)

## மயங்கு திணை நிலை வரி

(அறுசீர் ஆசிரிய விருத்தம் - இசைப்பாக்கள்)

பண்- சதாரி இராகம் - பந்துவராளி

37. நன் நித்திலத்தின் பூண் அணிந்து நலம் சார் பவளக் கலைஉடுத்து
செந்நெல் பழனக் கழனிதொறும் திரை உலாவு கடல் சேர்ப்ப
புன்னைப் பொதும்பர் மகரத் திண் கொடியோன் எய்த புதுப்புண்கள்
என்னைக் காணா வகை மறைத்தால் அன்னை காணின்
என்செய்கோ?

38 வாரித் தரள நகைசெய்து வண்செம்பவள வாய் மலர்ந்து
சேரிப் பரதர் வலை முன்றில் திரை உலாவு கடல் சேர்ப்ப!
மாரிப் பீரத்து அலர் வண்ணம் மடவாள் கொள்ளக் கடவுள்
வரைந்து
ஆர்இக் கொடுமை செய்தார்? என்று அன்னை அறியின்
என்செய்கோ

39. புலவுற்று இரங்கி அது நீங்க, பொழில் தண்டலையில் புகுந்து
உதிர்ந்து
கலவைச் செம்மல் மணம் கமழத்திரை உலாவு கடல் சேர்ப்ப!
பலஉற்று ஒரு நோய் துணியாத படர் நோய் மடவாள் தனி உழப்ப

அலவுற்று இரங்கி அறியா நோய் அன்னை அறியின் என்செய்கோ?

## மாலைக் காலத்தால் ஏற்பட்ட துன்பத்தைப் பாடியவை

(கலிவிருத்தம் - இசைப்பாக்கள்)

பண் - செவ்வழி | இராகம் - தோடி

" சகானா (அ)

தாளம் - ஆதி (அ)

40. இளைஇருள் பரந்ததுவே எல் செய்வான் மறைந்தனனே
களைவு அரும் புலம்புநீர் கண்பொழீஇ உகுத்தனவே
தளை அவிழ் மலர்க்குழலாய் தணந்தார் நாட்டு உளதாம்கொல்
வளை நெகிழ எரி சிந்தி வந்த இம்மருள் மாலை.

41. கதிரவன் மறைந்தனனே. கார் இருள் பரந்ததுவே,
எதிர்மலர் புரை உண்கண் எவ்வ நீர் உகுத்தனவே,
புதுமதி புரைமுகத்தாய்! போனார் நாட்டு உளதாம் கொல்
மதி உமிழ்ந்து கதிர் விழுங்கி வந்த இம்மருள் மாலை

42 பறவை பாட்டு அடங்கினவே, பகல் செய்வான் மறைந்தனனே,
நிறைநிலா நோய்கூர, நெடும் கண்நீர் உகுத்தனவே
துறுமலர் அவிழ் குழலாய் துறந்தார் நாட்டு உளதாம்கொல்
மறவை ஆய் என் உயிர்மேல் வந்த இம்மருள் மாலை

### சாயல்வரி

(கலிவிருத்தம் - இசைப்பாக்கள்)

பண் - நட்டபாடை | இராகம்-நாட்டைக் குறிஞ்சி

" - கரகரப்பிரியா (அ)

தாளம் - ஆதி (அ)

43. கைதை வேலிக் கழிவாய் வந்து எம்
பொய்தல் அழித்துப் போனார் ஒருவர்
பொய்தல் அழித்துப் போனார் அவர் நம்
மையல் மனம் விட்டு அகல்வார் அல்லர்.

44. கானல் வேலிக் கழிவாய் வந்து
'நீநல்கு' என்றே நின்றார் ஒருவர்
'நீநல்கு' என்றே நின்றார் அவர் நம்
மான்நேர் நோக்கம் மறப்பார் அல்லர்.

45. அன்னம் துணையோடு ஆடக் கண்டு
நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்
நென்னல் நோக்கி நின்றார் அவர் நம்
பொன்னேர் சுணங்கின் போவார் அல்லர்.

முகமில் வரி

(கலிவிருத்தம் இசைப்பா)

பண் - தக்கராகம் இராகம் - கனடா

46. அடையல் குருகே! அடையல் எம் கானல்
அடையல் குருகே! அடையல் எம் கானல்
உடைதிரை நீர்ச் சேர்ப்பற்கு உறுநோய் உரையாய்
அடையல் குருகேஅடையல் எம்கானல்

கட்டுரை

(விருத்தமாகப் பாடலாம்)

47. ஆங்கனம் பாடிய ஆய் இழை பின்னரும்
காந்தள் மெல் விரல் கைக்கிளை சேர்குரல்
தீம்தொடைச் செவ்வழிப்பாலை இசை எழீஇப்
பாங்கினின் பாடி, ஓர் பண்ணுப் பெயர்த்தாள்

முகம்இல் வரி

(கலிவிருத்தம் - இசைப்பாக்கள்)

பண் - விளரி இராகம் - நடபைரவி
" - தோடி (அ)
தாளம் - ஆதி (அ)

48 நுளையர் விளரி நொடி தருதீம் பாலை
இளி கிளையில் கொள்ள இறுத்தாயால் மாலை
இளி கிளையில் கொள்ள இறுத்தாய் மன் நீயேல்
கொளைவல்லாய் என் ஆவி கொள் வாழி மாலை.

49. பிரிந்தார் பரிந்து உரைத்த பேர் அருளின் நீழல்
இருந்து ஏங்கி வாழ்வார் உயிர்ப் புறத்தாய் மாலை
உயிர்புறத்தாய் நீஆகில் உள் ஆற்றா வேந்தன்
எயில் புறத்து வேந்தனோடு என் ஆதி மாலை

50. பையுள் நோய் கூரப் பகல் செய்வான் போய் வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருள்மாலை
மாலை நீ ஆயின் மணந்தார் அவர் ஆயின்
ஞாலமோ நல்கூர்ந்தது வாழி மாலை.

### தெய்வ வணக்கம்

(கலிவிருத்தம் இசைப்பா)

பண் -விளரி இராகம் - நடபைரவி

" - சுரடி (அ)

தாளம் - ஆதி (அ)

51. தீத்துழைஇ வந்த இச்செல்லல் மருள்மாலை
தூக்காது துணிந்த இத்துயர் எஞ்சு கிளவியால்
பூக்கமழ் கானலில் பொய்ச்சூள் பொறுக்க என்று
மாக்கடல் தெய்வம் நின் மலர்அடி வணங்குதும்

### கட்டுரை

(விருத்தமாகப் பாடலாம்)

52 எனக்கேட்டு,
கானல் வரி யான் பாடத் தான் ஒன்றின்மேல் மனம் வைத்து
மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள் என
யாழ் இசைமேல் வைத்துத் தன் ஊழ்வினைவந்து உருத்தது
ஆகலின்
உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தனன் ஆய்
'பொழுது ஈங்குக் கழிந்து ஆகலின் எழுதும்' என்று உடன் எழாது
ஏவலாளர் உடன் சூழ்தரக் கோவலன் தான் போன பின்னர்

தாதுஅவிழ் மலர்ச்சோலை, ஓதை ஆயத்து ஒலிஅவித்து
கையற்ற நெஞ்சினளாய், வையத்தின் உள்புக்குக்
காதலுனுடன் அன்றியே மாதவி தன்மனைபுக்காள்

ஆங்கு
மாஇரு ஞாலத்து அரசு தலை வணக்கும்
சூழியானைச் சுடர்வாள் செம்பியன்
மாலை வெண்குடை கவிப்ப,
ஆழி, மால்வரை அகவையான் எனவே.

## கானல்வரியில் சுவடி பாட வேறுபாடுகள்

1. மொழியின் அமைப்பை அறியப் பாடவேறுபாடுகள் துணை புரிகின்றன. 2. நூலின் காலத்தை அறியப் பாடவேறுபாடுகள் துணைசெய்யும். 3. நூலாசிரியனின் தன்மையை அறியப் பாடவேறுபாடுகள் உதவும்.

1. 7-1-1. படுத்துள்- படாத்துள்
2. 7-1-1. கோட்டின்மலர் - கோட்டுமலர்
3. 7-1-4. இத்திறத்து - இத்திறத்த
4. 7-1-10 தாழ்செறிந்த - தாழ்செறித்த
5. 7-1-11. பன்னரம்பின் - பண்ணரம்பின்
6. 7-1-11. மிசைப்படர - மிசைப்படாதது
7. 7-1-16. பட்டவகை - பட்டைவகை
8. 7-1-16. செவியின்ஓர்த்து - செவிஓர்த்து - செவிதொரீஇ
9. 7-1-17. பாணியாதென - புணியாதென - பணியாதென
10. 7-3-1. வளையாச் - வளையுச்
11. 7-4-1. மதகோதை - மதவோதை
12. 7-5-2. அறிகோமைய - அறிகோவைய
13. 7-5-3. ஆம்பல்பொதியவிழ்க்கும் - ஆம்பல் மலரும்
14. 7-6-2. அறிகோமைய - அறிகோவைய
15. 7-6-3. அறியாது - அறியாமல்

16. 7-7-4. திறங்கணிப்ப - புறங்கணிப்ப

17. 7-8-2. பூஉதிர்ந்து - பூஉதிர்

18. 7-8-3 நிறைமதி - நிறைமலி

19. 7-8-3. நேர்கயற்கண் - நீள் கயற்கண்

20. 7-9-1 புலால் உணங்கல் - படுபுலா லுணங்கி -
புலாலுணங்கல் முன்றின்நின்று

21. 7-9-1 தலைக்கீடாகக் - தலைக்கீடாக்

22. 7-9-2 கையில் ஏந்தி - கையில் ஊன்றி

23. 7-12-1 இருமருங்கும் ஓடும் - எம் மருங்கும் ஓடும்

24. 7-12-3 வாழ்நர் - வாணர்

25. 7-12-3 சீறூரார்க்கே - சீறூர்

26. 7-13-2 அலவநோய் - அவலநோய்

27. 7-13-3 முரிபுருவில்லிணையே - முரிபுருவலிஇணையே

28 7-14-4 எழுதரு - எழுதரிய

29. 7-14-4 செய்தவையே - செய்தவிவையே

30. 7-14-4 மின்னிடையே - மினிடையே

31. 7-15-2 விரைவிரிநறுமலரே - விரைவிரிதருமலரே

32 7-15-3 மருவிரிபுரிகுழலே - மருவிரிதருகுழலே

33. 7-15-4 செய்தவையே - செய்தவிவையே

34. 7-16-1 வளைவளர்தருதுறையே- வளைவளர்தருமணலே

35. 7-16-4 இளையவள் - இளவளர் - இளைவளர்

36. 7-16-4 செய்தவையே - செய்தவிவையே

37. 7-17-4 இடர்புக்கிடுகும் இடை -இடர்புக்குகும்மின்னிடையே

38. 7-18-1 உயிர் கொல்வான்நுந்தை - உயிர்கொள்வான்நுந்தை

39. 7-18-2 உயிர் கொல்வை - உயிர்கொள்வைநீயும்

40. 7-18-3 மழைமின்னுப்போல - மறைமின்னுப்போல

41. 7-18-4 நுடங்கி உகும்மென்நுசுப்பு - நுடங்குமிளமென்நுசுப்பு

42. 7-19-1 உயிர்கொல்வர் -உயிர்கொள்வர்

43. 7-19-2 உயிர்கொல்வை - உயிர்கொள்வைநீயும்

44. 7-19-3 பாராய்முலை - பாரமுலை

45. 7-23 (பாடல் பல நிலைகளில் வேறுபடுகின்றது.)

சொன்மடவன்னஞ் சொன்னடை யொவ்வா
ஊர் நீரோத மூழ்கித் திரிவாண் முன்
சொன் மடவன்னஞ் சொன்னடையொவ்வாய்

- தி.க. சுப்பராயச் செட்டியார் பதிப்பு
புகார் காண்டம் - 1880

சொன்மடவன்னஞ் சொன்னடை யொவ்வாய்
சொன்னவன்னஞ் சொன்னடை யொவ்வாய்
ஊர்திரை நீர்வேலி யுழக்கித்திரிவாள் பின்
சென் மடவன்னஞ் சொன்னடை யொவ்வாய்

- உ.வே. சாமிநாதையர்
முதல்பதிப்பு 1892.

சேரல் மடஅன்னம் சேரல் நடைஒவ்வாய்
சேரல் மடஅன்னம் சேரல் நடைஒவ்வாய்
ஊர்திரை நீர்வேலி உழக்கித் திரிவாள் பின்
சேரல் மடஅன்னம் சேரல் நடைஒவ்வாய்

- பின் வந்த பதிப்புக்கள்

46.7-24 கட்டுரை

கானல்வரிப்பாடல் கேட்ட -திணைநிலைவரிக் கானல் வரிப்பாணிகேட்டு

கலவியான் - கலவியாழின்

குறிப்பினள்போல் - குறிப்பினளாய்

கானல்வரிப்பாடல் பாணி - கானல்வரிப்பாடற்பால்

கண்டத்தால் பாடத்தொடங்குமன் - கண்டத்தாள் பாடுமன்

47. 7-25-4 திருந்து செங்கோல் - அறிந்து செங்கோல்

48. 7-26-1 பூவர்சோலை - பூவார்சோலை (முதல்பதிப்பு)

49. 7-26-1மயிலால - மயிலாட

50. 7-26-1 புரிந்து குயில்கள் - புனப்பூங்குயில்கள்

51. 7-26-2 அருகசைய - அருகலைய

52. 7-26-3 அருகசைய - அரகாட

53. 7-27-1 மகவாய் - மகவை

54. 7-27-3 உயிரோம்பும் - உலகோம்பும்

55. 7-28-2 போல் - போல

56. 7-28-3 விளங்குஒளிய - விளங்கு ஒளிர்

57. 7-29-2 ஏழையம் - ஏழையர்

58. 7-29-2 அறிகோமைய - அறிகோவைய

59. 7-29-3 நீள் புன்னை அரும்பி - நீள்புன்னைநிரை அரும்பி

60. 7-29-4 பொறைமலி - பொறைமலர்

61. 7-29-4 கொம்புஏற - கொம்பு ஏறி

62. 7-29-4 வண்டாம்பல்ஊதும் - வண்டாம்பல்மலர்ஊதும்

63. 7-30-1 உண்டாரை வெல்நறா - உண்டாரை ஒன்றா

64. 7-30-1 ஊண்ஒளியா - ஊன்ஒழியா

65. 7-30-2 என்பதுயாங்கு - என்பதை யாங்கு

66. 7-30-2 அறிகோமைய - அறிகோவைய

67. 7-31-4 வணர்சுரிஐம்பாலோய்- வணர்ஒலிஐம்பாலோய்

68. 7-32-2 விட்டாரோ - விட்டனரே

69 7-32-4 நம்மை- எம்மை

70 7-32-4 நாம் - யாம்

71. 7-33-3 இன்கள்வாய் - இன்கண்வாய்

72. 7-34-1 புள்ளியல்மான்தேர் - புள்ளிமான்தேர்

73. 7-34-2 என்செய்கோ - என்செய்கோம்

74 7-34-4 உணராய் - உணர்ந்தாய்

75. 7-34-3 ஈங்கு - இங்கு

76. 7-34-4 என்செய்கோ - என்செய்கோம்

77. 7-35-1 நேமிநெடுந்திண்தேர் - நேமியொடுந்திண்தேர்

78. 7-35,36-

நேர்ந்த நங்காதலர் நேமி நெடுந்திண்தேர்
ஊர்ந்த வழி சிதைய வூர்ந்தாயா லோதமே
ஊர்ந்த வழி சிதைய வூர்ந்தாய் மற்றெம்மோடும்
தீர்ந்தார் போற் றீர்ந்திலையால் வாழி கடலோதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடு மன்னமே
ஈர்ந்தண்டுறையே யிது தகா தென்னீரே

- தி. க. சுப்பராய செட்டியார் பதிப்பு - 1880

நேர்ந்த நம் காதலர் நேமிநெடுந்திண்தேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்கின்ற ஓதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடும் அன்னமே
ஈர்ந்தண் துறையே இதுத காது என்னீரே

நேர்ந்த நம் காதலர் நேமி நெடுந்திண்தேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய் வாழி கடலோதம்
ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய் மற்றெம் மோடு

**தீர்ந்தாய் போற்றீர்ந்திலையால் வாழிகடலோதம்**

797-37-1. நலஞ்சார் - நலஞ்சால்

80. 7-37-4 அன்னைகாணில் - காண்கில்

81. 7-38-4 ஆர்இக்கொடுமை - ஆர்இக்கொடுநோய்

82. 7-39-3 பலவுற்று ஒருநோய் - பலவுற்று எழுநோய்

83. 7-39-3 துணியாத - தணியாத

84. 7-39-4 பலவுற்றிரங்கி - அலவுற்றிரங்கி

85. 7-40-1 எல்செய்வான் - எரிசெய்வான்

86. 7-40-2 கண்பொழீஇ - கண்பொழி

87. 7-40-3 தணந்தார் - தளந்தார்

88. 7-41-2 புரைஉண்கண் -புரையுங்கண்

89. 7-41-3 புதுமதி - புதுமலர்

90. 7-41-3 போனார்நாட்டு - புணர்ந்தார் நாட்டு

91. 7-42-1 பகல்செய்வான் - பகற்செய்வான்

92. 7-42-4 மறவையாய் - மறலியாய்

93. 7-43-3 அவர்நம் - அவர்எம்

94. 7-44-3 அவர்நம் - அவர் எம்

95. 7-45-2 நென்னல்நோக்கி - நின்னோர் நோக்கி

96. 7-45-3 நென்னல்நோக்கி - நின்னோர்நோக்கி

97. 7-45-3 அவர் நம் - அவர் என்

98 7-45-4 பொன்னேர்சுணங்கிற் - நெடுங்கண்விட்டுப்

99 7-46-3 உடைதிரைநீர்ச்சேர்ப்பற்கு - உடைதிரைச்சேர்ப்பற்கு

100 7-47-3 தீந்தொடைச் செவ்வழிப்பாலை -
தீந்தொடைச்செவ்வழியரும்பாலை

101. 7-48-1 நொடிதரும் தீம்பாலை - நொடிக்கும் தீம்பாலை

102. 7-49-1 பிரிந்தார்பரிந்துரைத்த - பரிந்தார் செறிந்துரைத்த

103 7-49-3எயிற்புறத்துவேந்தனோடு - எயிற்புறத்து
வென்றானொடு

104. 7-50-1 பையுள்நோய் - பைதல்நோய்

105. 7-50-4 ஞாலமோ - ஞாலமே

106. 7-50 -4 வாழிமாலை- வாழி நீமாலை

107 7-51- பாடல் -தி.க.சு பதிப்பில் இல்லை

108 7-51-2 தூக்காதுதுணிந்த -தூக்காயதுதுணிந்த

109 7-51-3 பொய்ச்சூள்பொறுக்கென்று -
பொய்ச்சூள்அறுக்கென

110 7-52-2 கானல்வரி யான்பாடத் - கானல்வரியிற்பாடத்

111 7-52-4 யாழிசைமேல்வைத்து - யாழ்மேல் வைத்து

112 7-52-5 உவவுற்ற - அவ்வற்ற

113 7-52-5 திங்கள் முகத்தாளை - திங்கள் முகத்தி

114 7-52-5 ஞெகிழ்ந்தனனாய் - நெகிழ்ந்தனனாய்

115 7-52-6 உடன் - உடனே

116 7-52-7 கோவலன் போன பின்னர் - கோவலன் போயபின்னர்

117 7-52-8 ஒலியவித்து - ஒலியவித்த

118 7-52- மாதவிதன்மனைபுக்காள் - மாதவிதன்மனைபுக்களள்

119 7-52- சுடர்வாட் செம்பியன் - சுடர்பூண்செம்பியன்

120 7-52- அகவையான் எனவே - அகவயினாங்கென்.

# பயன் கொண்ட நூல்கள்


1. இலக்கியக்கனவுகள் - ச.வே. சுப்பிரமணியன் -தமிழ்ப் பதிப்பகம். -1972, 79.

2. கானல்வரி -கலாநிலையம் - கே. இராஜகோபாலாச்சாரியார். ஸ்டார் பிரசுரம் - 1960, 1964.

   இரண்டாம் பதிப்பு -1920, மூன்றாம்பதிப்பு - 1927.

3. கானல்வரி - தெ.பொ. மீனாட்சி சுந்தரனார். இரண்டாம் பதிப்பு - 1978. -சர்வோதய இலக்கியப் பண்ணை. -மதுரை.

4. சிலப்பதிகார இசைப்பாடல்கள் - ச.வே. சுப்பிரமணியன். மணிவாசகர் பதிப்பகம். -2001.

5. சிலப்பதிகாரத்தில் இசைச்செல்வங்கள், டாக்டர் சேலம் எஸ். செயலட்சுமி. -உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 2000.

6. சிலப்பதிகாரத்தில் காணப்படும் இசைப்பாடல்கள், இ.அங்கயற்கண்ணி - தமிழ்ப்பல்கலைக்கழகம் - 1994.

7. சிலப்பதிகாரம் - அடியார்க்கு நல்லார் உரையுடன், டாக்டர் . உ.வே. சாமிநாதையர். முதல் பதிப்பு - 1892.

8. சிலப்பதிகாரம் - அரங்கேற்றுகாதை -ச.வே. சுப்பிரமணியன் மணிவாசகர்பதிப்பகம் -2001.

9. சிலப்பதிகாரம் - குன்றக்குரவை -ச.வே. சுப்பிரமணியன் மணிவாசகர் பதிப்பகம் - 2002

10. சிலப்பதிகாரம் - புகார் காண்டம், தி.க. சுப்பராய செட்டியார் பதிப்பு - 1880.

11. சிலப்பதிகாரம் -மங்கலவாழ்த்துப் பாடல் - ச.வே. சுப்பிரமணியன். உலகத் தமிழ்க் கல்வி இயக்கம் -1993.

12 சிலப்பதிகாரம் மூலம் - ச.வே. சுப்பிரமணியன்.
மணிவாசகர் பதிப்பகம். -2001.

13 சிலப்பதிகாரம் - யாப்பமைதி, ந.வீ. செயராமன் -
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

14. தமிழ் இசைக் கலைக்களஞ்சியம் - இரண்டாம் தொகுதி
வீ.ப. கா. சுந்தரம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், -1994.
பக்.96-113.

15. பத்துப்பாட்டு மூலம் - - ச.வே. சுப்பிரமணியன்.
மெய்யப்பன் தமிழ் ஆய்வகம். -2000.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும் | 30.00 |
| மாளவிகாக்னிமித்திரம் | 20.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி-2 | 55.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |

Pub.No. 429 **கானல் வரி** 30.00

